# கலைமன்றம்

திராவிடர் முற்போக்கு வார இதழ்... ஆசிரியர்: பால்வண்ணன்




709.
2-54
1 JUN 1954

# கலைமன்றம்

திராவிடர் முற்போக்கு வார இதழ் ... ஆசிரியர்: பால்வண்ணன்

மலர் 1 | விலை அணா நான்கு | 1954 ஜூன் 5 | இலங்கையில் சதம் 30 | இதழ் 23



விற்பனையாகிறது!

199110.
JUN 1954

## கலை அரங்கம்

ஜூன் இதழ்

### இந்த இதழில்

| | | |
|---|---|---|
| மறக்க முடியாத சம்பவம் | — | சாவித்ரி |
| திரையுலகில் புது முறைகள் | — | தாரா |
| டைரக்டர் | — | ஏ.எஸ்.ஏ. சாமி |
| ஒலிப்பதிவுக்கலை | — | கலைச்செழியன் |
| நாடகச் சுரங்கம் | — | கோமசே |
| திரைப்படக் கவிஞர்கள் | — | கண்ணதாசன் |
| துளிவிஷம் | — | திரைக்கதை |
| ரத்தபாசம் | — | படஅனுபந்தம் |
| பத்மினி | — | மூவர்ணப்படம் |

மற்றும் சுவையான செய்திகள், அவர்கள் கூறுகிறார்கள், திரைக்குப்பின், தெரியுமா, புது மொழிகள், செய்திக்கதிர், உங்கள் பக்கம், வடநாட்டிலே, மேல்நாடுகளிலே, உருவாகும் படங்கள், திரைப்பட விமர்சனங்கள்—இன்னும் பல.

மூவர்ண முகப்பு. முழுவதும் கிளேஸ் தாள்

**விலை அணா எட்டு**

**கலை அரங்கம்**

த. பெ. எண் 275, சென்னை-1.


## இதனுள்...


| | பக்கம் |
|---|---|
| அந்தக்காலம்மலையேறிவிட்டது (தலையங்கம்) | 12 |
| உலக அரங்கம் | 2 |
| முன்னேற்றம் | 3 |
| பெண்களே...(பாட்டு) | 5 |
| சொர்க்கவாசல் (விமர்சனம்) | 6 |
| இன்பத்துப்பாலின் இனிமை | 7 |
| துன்ப உலகம் | 9 |
| அட்டைப்பட விளக்கம் | 13 |
| இலக்கணப்பகுதி | 17 |
| உலக அதிசயங்கள் | 18 |
| அவள் (பாட்டு) | 20 |
| இறப்பது ஏன்? | 21 |
| நாவலைப் போல | 23 |
| வான மாளிகை | 25 |
| வீரனின் வீழ்ச்சி | 28 |
| நாடு பிரிவதனால் ஏற்படும் நன்மைகள் | 33 |
| ஆப்கானிஸ்தானம் | 34 |
| மல்லிகா (சிறுவர் தொடர் கதை) | 37 |
| செய்திச் சுருள் | 39 |
| கேளுங்கள் | 40 |


★ திராவிட நாடு திராவிடருக்கே ★



# உலக அரங்கம்

## பாலைவனத்தை சோலை வனமாக்க முயற்சி

இந்தியா-மேற்கு பாக்கிஸ்தான் எல்லை நெடுகிலும் சுமார் 400 மைல் தூரத்துக்கு தாவர மண்டலம் ஒன்றை ஏற்படுத்தும் வேலை இப்போது ஆரம்பமாகி விட்டது. ஜெய்ஸால்மெர்-பஹவல்பூர் எல்லையில் 40 மைல் நீளமும் 5 மைல் அகலமும் கொண்ட வறண்ட பூமிப் பிரதேசம் பயிர் பச்சைகள் நிறைந்த பூமியாக இப்போதுமாறிக்கொண்டு வருகிறது.

ஸிந்துவின் மணல்கள் இந்தியாவுக்குள் அடித்துக்கொண்டு வரப்பட்டு விடாதவாறு தடுக்கும் பொருட்டும், பாலைவனம் மேலும் விரிவடையாமல் தடுக்கும் பொருட்டும் இந்தியாவின் மேற்கு எல்லையில் 'பசுந்தரை வேலி' யொன்றை எழுப்புவதே இந்த முயற்சியின் முக்கிய நோக்கமாகும்.

பாலைவனத்தில் காடு வளர்ப்பது பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்காக ஜோத்பூரில் அமைக்கப்பட்டுள்ள மத்திய ஆராய்ச்சி நிலைய சிப்பந்திகள் இவ் வேலையை மேற்கொண்டுள்ளனர்.

பாலைவனப் பிரதேசங்களில் எந்தெந்த இடங்களில் என்னென்ன வகை மரம் செடிகளை வளர்க்க முடியும் என்பது பற்றி இந்த நிலையத்தில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்கென நான்கு இடங்களில் நாற்றங்கால்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அமெரிக்காவிலிருந்தும், ஆப்கானிஸ்தானிலிருந்தும் கொண்டு வரப்பட்டுள்ள பாலைவனச் செடிகளும் இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள செடிகளும் புல் வகைகளும் இந்த இடங்களில் பரிசிலனை செய்து பயிராக்கப் படுகிறது.

## பாகிஸ்தானின் விபரீதச் செயல்

. பாகிஸ்தான் சர்க்கார் தோரபாபாபநானக் என்னுமிடத்தில் ரவி நதியின் தண்ணீரைத் தடுத்து தங்கள் பகுதிக்குத் திருப்பிவிட்டனர். இதன் மூலம் 22 இந்திய கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன. இந்த விபரீதச் செயல் உலக பாங்கியின் தீர்ப்புக்கு விரோதமானது. கால்வாய் தண்ணீர்பிரச்சினைக்கு உலக பாங்கி செய்த சமரச ஏற்பாடுகளை ஒட்டி, அமிர்தசரஸ், குருதாஸ்பூர் ஜில்லா வாசிகளின் பிரதிநிதிகள் பஞ்சாப் சர்க்காரை அணுகி உடன் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டனர். உலக பாங்கியின் தீர்ப்பின்படி சட்லஜ் நதிகளின் தண்ணீரை இந்தியாவும், இந்தூஸ், ஜீலம், சீனப்நதிகளின் தண்ணீரை பாகிஸ்தானும் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது.

## கேரளத்தில் கற்சுவர்

கொச்சி துறைமுகத்தில் கடல் நீர் உட்பிரவேசிப்பதைத் தடுப்பதற்காக ஒரு கருங்கல் சுவர் எழுப்பத் தீர்மானித்திருக்கிறார்கள். இதற்காக, கேரள சர்க்காருக்கு டில்லி 111 இலட்சம் கடன் அளித்திருக்கிறது.

## இந்தியப் பெண் இஞ்சினீயர்

காலஞ் சென்ற சேட்தேவ் கர்னன் நான்ஜியன் குமாரியான உஷாதேவ் கர்னன் நான்ஜி, பம்பாய் பல்கலை கழகத்தில் பி. ஏ. பட்டம் பெற்று, லண்டன் சென்று இம்பீரியல் காலேஜ் ஆப் சயின்ஸ் என்ற கல்லூரியில் 'மண்வளம்' பற்றி தனிப் பயிற்சிப் பெற்று, எம். எஸ். ஸி. பட்டம் பெற்று, பம்பாய் திரும்பினர். முதன் முதலில் இஞ்சினீயரிங் துறையில் மேல் நாட்டில் பட்டம் பெறும் பெண்மணி இவர் தான்.

## அதிசயம்

மதுரை பழைய சர்க்கார் ஆஸ்பத்திரி கட்டிடத்திற்குள் சுமார் $1\frac{1}{2}$ அடி உயரமுள்ள வாழைமரம் குலை போட்டிருக்கிறது. இது அவ்வூர் மக்களுக்கு பெரும் ஆச்சரியத்தை உண்டுபண்ணி யிருக்கிறது. பலர் அதைப் பார்த்துச் செல்கின்றனர்.

## அமெரிக்காவுடன் ஒப்பந்தம்

இந்தியா—அமெரிக்கா உப ஒப்பந்தப்படி இந்தியாவின் பல்வேறு பாகங்களிலும் மண்வள சோதனை செய்வதற்காக 16 ஆராய்ச்சிசாலைகள் நிறுவப்படும். அணைத்திட்டப் பகுதிகளிலும் இதர பிரத்யேகப் பகுதிகளிலும் உபயோகிப்பதற்கு தேவையான முழு சாதனங்களுடன் கூடிய ஊர்சுற்றும் ஆராய்ச்சி சாலை ஒன்றும் நிறுவப்படும். இந்தத் திட்டத்திற்காக இரு நாடுகளுக்கும் முறையே 1,35,000 டாலரும், 1,620,000 ரூபாயும் செலவாகும். சாதனங்கள், சப்ளைகள் முதலியவற்றை வாங்கும் வகையில் இந்தியாவுக்கு வெளியே பட்டுவாடா செய்வதற்கு தேவையான தொகைகளை யு. எஸ். அமெரிக்கா கொடுக்கும் டாலர்களிலிருந்து செலவிடப்படும். ஆராய்ச்சி சாலைகளை நிறுவுதல், தொழில் நுட்ப நிபுணர்களைப் பெறுதல் ஆகியவற்றை யொட்டிய செலவுகளை இந்தியா கொடுக்கும் பணத் தொகையி லிருந்து செலவிடப்படும்.

## பயங்கரக் குண்டுகள்

மக்களை மண்ணாக்கும் சக்தி, ஜலவாயு குண்டு. கோபால்ட் குண்டுகளால் இப்போது சாத்தியமாயிருக்கிறது என்று பிரிஸ்டல் கலாசாலை பௌதிகநிபுணரான ஸ்ரீ எப். பவல் எச்சரித்திருக்கிறார். 1945-ல் ஜப்பானில் வீசப்பட்ட அணுக்குண்டுகளைவிட இந்த குண்டுகள் 2000 மடங்கு அதிக சக்தி வாய்ந்தவை என்று சொல்லப்படுகிறது. ஜலவாயுக்குண்டு வெடித்தால் 150 சதுர மைல் விஸ்தீரணத்திற்கு 7 மைல் சுற்று வட்டத்தில் நாசம் ஏற்படும் கோபால்ட்குண்டுவெடித்தால் பல மைல்களுக்கு அப்பால் உள்ள ஜீவராசிகளையும் மின் அலைகள் பாதிக்கும். ஆகவே இத்தகைய நாசகால குண்டுகள் மீது சர்வதேசக் கட்டுப்பாடு வேண்டும் என்றும் அவர் கூறினர்.

# முன்னேற்றம்

## மூலம்: இங்கர்சால் - தமிழ்: ஊடுருவி

மிகநீண்ட பழங்காலத்தவர்களின் அறியாமையை—கொடுமையை—மூட நம்பிக்கையை மடமையை நாம் சரியாக தெரிந்துகொள்ள முடியாது.

அந்த அநாகரிகமான இருண்ட காலத்தின் வரலாற்றைப் படித்து நான் ஆச்சரியமடைந்தேன். அன்று வாழுந்த மக்களின் கொடூரம்—மடமை—மனித வர்க்கத்தைப் பற்றி அவர்கள் கொண்டிருந்த அனுமானங்கள் இவைகளைக் கண்டு வியப்பெய்தினேன். அவர்களைப் பற்றி முடிவாக கூறவேண்டுமானல், அவர்கள் விடுதலையை வேண்டாம் என்று வெறுத்தவர்கள். பேச்சு சுதந்திரத்தை 'தேவையில்லை'என்று கூறியவர்கள். மற்றும் மனித உரிமைகளை வெறுத்து ஒதுக்கியவர்கள் என்று கூறுவதே பொருத்தமாகும்.

அந்தக் காலத்து மக்கள் மனிதனை அடக்கி ஆள்வதிலேயே ஆசைப்பட்டனர். அப்படி அடக்குவதற்காக இருவகை விலங்குகளை உபயோகித்துவந்தனர். அந்த இருவகை விலங்குகளில் ஒன்று மூட நம்பிக்கையால் செய்யப்பட்டது; அடுத்தது இரும்பினல் செய்யப்பட்டது. மேலும் மூன்று பயங்கர ஆயுதங்களையும் அவர்கள் உபயோகித்தனர் மனிதனை அடக்கி ஆள. அவை. 1. மதம். 2. வாள். 3. விலங்கு.

நாம் வாழாத அந்தக் காலத்தைப் பற்றி சரியா தெரிந்து ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னர், நாம், அந்தக் காலத்து சிறந்த—புகழ் பெற்ற ஆசிரியர்கள் எழுதிவைத்திருக்கும் நூல்களைப் படிக்கவேண்டும். அப்படி நாம் படிக்கும்போது சில முக்கிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். அதாவது, அப்போது இருந்த சட்டதிட்டங்கள் எத்தகையன. மக்களின் பழக்க வழக்கங்கள் எப்படி இருந்தன? சட்டங்களை அமுல் நடத்திய விதங்கள் எப்படி இருந்தன? பொதுவாகச் சரியானது என்று கொள்ளப்படும்எண்ணங்கள் எவை? என்பனவற்றை நாம் ஊன்றி கவனிக்க வேண்டும்.

அன்புள்ளவர்களே!

அந்தக் காலத்தவர்கள் தெரியாமல்—தன்னையும் அறியாமல் செய்த பிழைகள் குற்றமற்றன என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை.

மதச் சுதந்திரத்தைப் பற்றி அந்தக் காலத்தவர்கள் ஒரு கடுகளவு கூட காணவில்லை.

பதினைந்தாம் நூற்றாண்டில் கீழ் கண்ட சட்டம் இங்கிலாந்தில் அமுலில் இருந்தது.

எல்லோரும் வேத நூலை அவரவர் தாய் மொழியில் படித்தாக வேண்டும். இந்தச் சட்டத்தை மீறினல் மத விரோதியாகக் கருதப்படும். அரசத் துரோகியாகக் குற்றஞ் சாட்டப்படும். நாட்டின் நச்சுப் பூச்சி என்று எண்ணப்படும்; அத்துடன் அவனுடைய உடல், பொருள், உயிர் ஆகிய அனைத்தையும் இழந்து விட வேண்டிவரும்.

அந்தச் சட்டம் அமுலுக்கு வந்த அடுத்த ஆண்டு அந்தச் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக முப்பத்தொன்பது பேர் ஒரே நாளில் தூக்கிலிடப்பட்டு, அந்த உடலங்களைச் சுட்டு எரித்துவிட்டனர்.

இந்த விதமான வெறுக்கத் தக்க—நியாயமற்ற கொடுமை நிறைந்த சட்டங்கள் அன்று ஐரோப்பாவின் எல்லா நாடுகளிலும் அமுலில் இருந்தன.

பதினரும் நூற்றாண்டில், அசுத்தமான சாமியார்கள் கூட்டம் ஊர்வலமாக வந்தது. அந்தச் சாமியார்களின் முன்னர் அனைவரும் வீழ்ந்து வணங்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. அந்த அசுத்தச் சாமியார்களின் ஊர்வலத்தின் முன் வீழ்ந்து வணங்க மறுத்தான் ஒரு பிரஞ்சுக்காரன். அந்தக் குற்றத்திற்காக அவன் உயிரோடு தீயிலிட்டு எரிக்கப்பட்டான். இது போன்ற பல கொடுமைகள் நிகழ்ந்தன.

ஆண், பெண், குழந்தை முதலானவர்கள் பலர் எவருக்குமே புரியாத விதத்தில் அபிப்பிராய பேதம் கொண்ட காரணத்திற்காக தண்டிக்கப்பட்டிருக்கின்றனர். இதற்கு எடுத்துக்காட்டுகள் தேவையென்றால் ஆயிரக்கணக்கில் கூறிக் கொண்டே போகலாம். நீங்கள் மதத்தின் காரணமாக துன்புறுத்தப்பட்ட பல சம்பவங்களைப் படித்திருக்கலாம்.

கொடுங்கோன்மையை எதிர்த்து நின்ற சீர்திருத்தவாதிகளை எல்லாம் கடுமையாகத் தண்டித்திருக்கின்றனர்.

"ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தானே படித்து அறியும் ஆற்ற


### இங்கர்சாலின் நூல்கள்

| | |
|---|---|
| வால்டையர் | 1—0 |
| மூடநம்பிக்கை | 1—0 |
| மதங்கள் | 1—0 |
| அறியாமை | 1—0 |
| உண்மை | 1—0 |
| கோயில்கள் | 1—0 |
| கடவுள் | 1—0 |
| மக்கள் உரிமை | 1—0 |
| இங்கர்சால் அறிவுரைகள் | 0—8 |

கலைமன்றம், சென்னை-1.

னுடையவன்; அவன் இருக்கவோ, இறக்கவோ தன்னைத் தயார் செய்துகொள்ளும் உரிமை உடையவன்—இந்த உரிமை மனிதர்களுக்கு உண்டு" என்னும் மேலான கருத்தை எடுத்துச் சொன்ன உலக மேதைகளில் ஒருவனை லூதர் வீர மரணமடைந்தான். இருந்தும் அவன் நாம் கூறும் மதச் சுதந்திரத்தைப் பற்றி சரியான கருத்தைக் கொண்டிருக்கவில்லை. மேலும் அவன் பிற மத சகிப்புத் தன்மை வேண்டும் என்பதை தவறு என்று கருதினன். அவனைப் போலவே மெலஸ்தான் (Melanchth) எராஸ்மஸ் (Erasmus) ஆகியவரும் நினைத்தனர். இவையல்ல வியப்புக்குரியவை. இவர்கள் எந்தெந்தச் சுதந்திரங்களை மற்றவர்களுக்கு தர மறுத்தனரோ அவற்றை அவர்கள் மிக்க துணிவுடனும், சக்தியுடனும்—சாதித்தும், செய்துவந்தனர்.

மிகக் குறைந்த எண்ணிக்கையை உடையக் கட்சியைச் சார்ந்த ஜான் நாக்ஸ் (Jan Knox) மட்டும் மதச் சுதந்திரத்தை ஆதரித்து வந்தார். பாக்ஸ்டர் (Baxte) என்பவரும் அந்தக் கொள்கையை ஆதரித்தார்.

காஸ்டாலியோ (Castali) என்னும் பெயருடைய ஜெனிவாவிலிருந்த பேராசிரியர் "தெரியாமல் செய்த பிழைகள் குற்றமுடையவையல்ல" என்று எடுத்து விளக்கினர். பிற மத சகிப்புத்தன்மை வேண்டும் என்பதை ஆதரித்த முதல் மத போதகன் அவன்தான். இவனுடைய பெயர் மறைந்துவிடக் கூடியதன்று.

இவன் சிறைச்சாலைகளாலும், குற்ற விசாரணைச் சபைகளாலும் சூழப்பட்டும், மத வெறியர்கள் மத்தியில் அகப்பட்டுக்கொண்டிருந்த போதிலும் பிறருக்கு நன்மை பயக்கும் நல்ல கருத்துக்களை எடுத்து விளக்கினன்.

அவன் "தெரியாமற் செய்த பிழைகள் குற்றமாகாது" "ஒவ்வொரு மனிதனுக்கும் நல்ல கடவுளை தன் சொந்த முறையில் தான் எண்ணியவாறு வழிபடும் உரிமை உண்டு" என்ற கருத்தை தைரியத்துடன் எடுத்துக் கூறிய வீரன்.

இன்று நம்மால் போற்றப்படும் உத்தமன் அன்று மேற்கூறிய உண்மைகளை உலகிற்கு எடுத்து உரைத்தது குற்றமாகக் கருதப்பட்டது. அந்தக் குற்றத்திற்காக—அவன், வகித்துவந்தப் பேராசிரியர் பதவி பறிக்கப்பட்டது. அத்துடன் அவனுடைய சமயத்தைச் சேர்ந்த ஜான் கால்வின் கோஷ்டியாரால் ஜெனிவாவிலிருந்தே விரட்டியடிக்கப்பட்டான். அத்துடன் நின்றுவிட்டதா? அவனுக்கு பல பட்டங்களைச் சூட்டி மகிழ்ந்தனர். அவை:

பேய் பெற்றெடுத்தப்பிள்ளை; சைத்தானின் பின் செல்லும் நாய்; ஆத்மாவைக் கொலை செய்த கொடியோன்; மதக் கொள்கைக்கு மாசு உண்டாக்கிய மாபாவி; ரக்ஷகரைத் தன் புதுக் கொள்கையினால் மறுபடியும் சிலுவையில் அறைந்த மன்னிக்க முடியாத குற்றம் செய்தோன். இவ்விதமான பழிச்சொற்களை உள்ளத்தில் தாங்கினன் அந்த உண்மையை உரைத்த உத்தமன்.

அப்போதாகிலும் ஆறுதல் அடைந்தனரா? இல்லை. நல்லவர்களை வாழ விடாத நாசக்கார உலகில் நல்லவர் எப்படி வாழ முடியும். உண்மையை கூறிவிட்டு எப்படி உயிர் வாழ இயலும்? ஆகவே அந்த துஷ்டர்கள் அந்த நல்ல மனிதரை நாட்டைவிட்டுத் துரத்தியதுடன் திருப்தி அடையாமல், தணியாத பகையுணர்ச்சியுடன் அவனைத் துரத்திச் சென்று அவனுக்குக் கல்லறையை எழுப்பிவிட்ட பின்னர் திரும்பினர்.

### அறப்போர் வீரர்

## குமாரவேல் மறைந்தார்

கல்லக்குடி அறப்போரில் தோழர் மு. கருணாநிதியுடன் சிறை சென்று ஆறு மாத காலமாக கடுங்காவல் தண்டனை அடைந்தவரும். மணப்பாறை தி. மு. கழகத்தின்முன்னணித் தொண்டருமான தோழர் குமாரவேல் சிறிது காலமாக நோய்வாய்ப் பட்டிருந்து 27-5-54 ல் காலமானர் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த அரியத் திருப்பணியில் கலந்து கொண்டது காஸ்டாலியோவின் சமயத்தைச் சேர்ந்த கால்வின் மட்டுமல்ல பொது மக்களும் கூட. அந்த மக்கள் காஸ்டாலியாவை கால்வின் உயிருடன் கம்பத்தில் கட்டி எரித்திருந்தாலும் கூட மகிழ்ந்திருப்பர். அந்த அளவுக்கு ஆதரித்தனர் கால்வினை.

ஏன் இந்த நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டுகிறோம்? கால்வின்மீது எனக்கிருக்கும் வெறுப்புக் காரணமாகவா? அல்ல; அல்ல! பின்னர் எதற்கு? அந்தக் காலத்தில் எப்படிப்பட்டக் கொடுமைகள் அதுவும் சர்வசாதாரணமாக நடைபெற்று வந்திருக்கிறது என்பதனையும், இந்தக் கொடிய செயல்களுக்குப் பொதுமக்கள் ஆதரவு எப்படி இருந்தது என்பதனையும் சுட்டிக் காட்டவுமேயாகும்.

அதே சமயத்தில் பிரான்ஸில் போடிநஸ் (Bodinu) என்னும் வழக்கறிஞர் ஒருவர் மத விடுதலை போன்றவைகளை ஆதரித்து வந்தார். ஆனல் அதனை பொது மக்கள் முழுக்க முழுக்க எதிர்த்து வந்தனர். வெறும் எதிர்ப்புக் காட்டுவதுடன் நின்றுவிடாமல, தீவெட்டிகளைக் கையிலேநதியும், கொள்ளிக் கட்டைகளை நீட்டியும, எரிப்பதற்கான சுள்ளி விறகு போன்றவைகளைச் சேகரித்துக் கொண்டும், விலங்குகளை மாட்டியும் தெய்வ நிந்தனை செய்வதையும், மனிதன் தனக்குத் தான் பகுத்து அறியும் உரிமை பெற்றவன் என்ற உயரிய எண்ணத்தையும் மக்கள் மனதிலிருந்து ஓட்ட எந்தச் சமயத்திலும் தயாராக இருந்தனர்.

லூதர், கால்வின், நாகஸ், பாச்ஸ்டர் முதலியோர் தங்களுடைய இயல்புக்கு மாருகவே—முரணுகவே எதிர்பாராதவகையில் மனித இனத்திற்கு நிலையான பெரும் நன்மைகளைச் செய்தவராவர்.

அவர்களுடைய செயல்கள் ஒவ்வொன்றும் மனிதன் தானே, "நாம் செய்ய வேண்டியவை எவை?" என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்ட பினனர் முடிவுகட்டும் உரிமையை அளித்தது.

ஒருவன் ஒன்றை முதன் முதலில் எதிர்த்தால் மற்றவர்களும் அவன் செய்வது சரியா என்று

ஆராய்ந்து சரி என்று பட்டதும் அவனைப் பின்பற்றி அதனை எதிர்க்கத் துணிந்தனர். இவ்விதம் செய்தமையால் தான் சமயத் துறையில் பிற மதக் கொள்கைக்கும், செயலுக்கும் துவேஷம் காட்டாமல் சகித்துக் கொள்ளும் தன்மையை நிலைநாட்ட வழியேற்பட்டது.

அந்தக் காலங்களில், ஒரு பெண்ணையோ அல்லது ஆணையோ தங்கள் மதத்திற்கு மாற்றிக்கொள்ள முதன் முதலில் சாதாரண வழிகளைக் கையாளுவர். இந்தச் சாதாரண வழிகளில் முடியவில்லையென்றால், கடுமையான—கொடிய—பயங்கரமான வழிகளைக் கையாண்டு இம்சிப்பர். இரும்பால் செய்யப்பட்ட 'பூட்சை'(மிதியடி)காலில் பூட்டி அவர்களுடைய கால்களை நெறுக்குவர். தீயில் அவர்களை வாட்டுவர். நகங்களைப் பிய்த் தெறிந்துவிட்டு இரத்தம் கசிந்து வழியும் இடங்களில் ஊசியால் குத்துவார்கள். இவைகள் எல்லாம் மத மாற்றத்தை விரும்பாதவர்களுக்கு செய்யப்படும் கொடுமை. மத உண்மையை உணர்த்த கையாண்ட முறை.

ஆனல் என் எண்ணம் என்னவெனில் "அயலாரையும நாம் நம்மைப் போலவே நேசிக்கவேண்டும்" என்பதேயாகும்.

மேற்கூறிய கொடுமைகளை எதிர்த்து வாதாடியவர்களில்—போராடியவர்களில் முதன்மையானவர் மாண்டேக் சூவன். அவன் பேரறிஞன் என்பதில் ஐயமில்லை. ஆற்றலுடையவன் என்பதும் சரிதான். ஆனல் அந்தக் காலத்து மக்களுக்கு அவன் ஓர் அபூர்வப் பிறவியாக அதிசய மனிதனாக தோற்றமளித்தாள்.

பல்லாயிரக் கணக்கான மூடர்களின் அர்த்தமற்ற கொடுமையான கூக்குரலின் மத்தியில் தனி ஒரு மனிதன் தொண்டை கிழியக் கத்தினுலும் என்ன பயன் விளைவிக்கும்? பரந்த கடலின் எண்ணிலடங்கா அலைகளின் ஆரவாரத்தின் மத்தியில் அகப்பட்டுக் கொண்டு கடலில் மூழ்கிக்கொண்டிருக்கும் மனிதனின் அபயக் குரல் யாருக்குக் கேட்கும்? அதுபோலவே அந்த நல்லோனின் உண்மை நிறைந்த சொற்களால் உருவாக்கப்பட்ட குரல் எவர் காதுகளிலும் விழவில்லை.

அன்புள்ள தோழர்களே! கடந்த காலங்களில் எதற்கும் அஞ்சாமல், வெறுப்படையாமல் மதச் சுதந்திரத்திற்காகப் போராடிய வீரர்களுக்கும், அவர்களை எதிர்த்த வீணர்களுக்கும் நிகழ்ந்த மீக நீண்ட கருணையற்ற போரின் வரலாறுகளை நம்மால் படிக்க முடியாது. நம்மைப் போலவே அன்பும், ஆசையும் கொண்ட பல்லாயிரக்கணக்கான ஆண்கள், அழகான பெண்கள், மழலை மொழி பேசும் குழந்தைகள் மத வெறிக்குப் பலியிடப்பட்டனர். ஆம்! தோழர்களே ஆம்! அவர்கள் கழு முனையில் கஷ்டப்பட்டனர். சிறையில் செத்து மடிந்தனர். பஞ்சத்தால் தாக்கப்பட்டனர். பட்டினியால் பரதவித்தனர். கத்தியால் குத்துண்டனர். வீட்டை இழந்தனர். பாலை வனங்களில் அலைந்து அழிந்தனர். குகைகளைத் தடவி வழி கண்டுபிடித்து கடைசியில் "பழிக்குப் பழி வாங்கவேண்டும்" என்ற மனத் துடிப்புடன் மாண்டு மறைந்தனர்.

அவர்கள் மறைந்தனர். ஆனலும் அவர்களுடைய கொள்கைகள் மறையவில்லை. ஆம்! நிச்சயமாக மறைவில்லை. அவர்கள் வாழ்ந்தபோது நலிவுற்றிருந்த கொள்கைகள், இரத்தத்தாலும், நெருப்பாலும் வளர்க்கப்பட்டு - துன்பங்களாலும் தொல்லைக

பெண்கள் பகுதி

# பெண்களே...

[கோவி. மணிசேகரன்.]

பெண்களினுல்இந்த நாடும்—நல்ல
பெயரைவிளைவிக்கக் கூடும்!
பெண்களினுல்......

பண்களினுல்இசைக் கலையனுறபோல,
பாக்களினுல் கவி உயர்வானுற் போல—
பெண்களினுல்......

கல்விமணமில்லாப் பாவை—செல்லா
காசுக்கு அவளென்ன தேவை?
நல்ல அறிவுள்ளப் பெண்கள்—நாட்டின்
நலம் பாடும் இந்நாளின் முன்னேற்றக் கண்கள்!
பெண்களினுல்......

வீட்டினைக் குகையாக்கப் பட்டார்—பெண்கள்
வீணிலே வாள்நாளை விட்டார்!
நாட்டினில் நல்ல பல செயலை—ஆற்ற
நங்கையர் இனியேனும் முன்னேறல் வேண்டும்!
பெண்களினுல்......

கணவனைப் பேணுதல் நன்றே—அதனுல்
கட்டிய நாய்கள் நீ ரன்றே!
உணவாக்கிப் படைத்ததன் பின்பு—நாட்டின்
உயர்வாக்கிப் பலருக்கும் படைத்தலே பண்பு!
பெண்களினுல்......

ளாலும் சுத்தம் செய்யப்பட்டு-வீரத்தாலும், தியாகத்தாலும் உயர்த்தப்பட்டு-இறப்பால் என்றும் அழியாத தன்மைபெற்று, இறுதியில் வெற்றி பெற்று, இன்று நாகரிக உலகில் வாழும் நல்லவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு வருகின்றன.

உலகைத் திருத்திய உத்தமர்கள் தங்கள் கொள்கைகளை நிலை நிறுத்தப்பட்ட கஷ்டங்கள் - கொட்டிய வியர்வை-அடைந்த நஷ்டங்கள் ஏராளம். அதுமட்டுமல்ல, மதிப்புக்குறிய செயல்கள் அவை. இருந்த போதிலும் அந்த உத்தமர்களுடைய கொள்கைகள் அவர்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களைவிட ஆயிரமாயிரம் மடங்கு, இல்லை. கோடி கோடி மடங்கு மதிப்புடையவை; மாண்புடையவை.

மதத்திலே சுதந்திரம் இருக்க வேண்டும். மதசுதந்திரமன்றி எந்த உண்மையான மதமும் இருக்க முடியாது. என்னை பொறுத்த மட்டில் நான் வாழும் இந்த அமெரிக்க மண்ணில்தான் அந்தத் தத்துவம் முதன் முதலில், மிக உறுதியாக நிலைநாட்டப்பட்டதென்று சொல்லிப் பெருமை அடைவேன். மற்றைய நாடுகளை விட அமெரிக்க ஐக்கிய நாடுதான் முதன் முதலில் தன் நாட்டின் மூலாதாரமான சட்டங்களில் மதச் சுதந்திரமும் ஒன்றாகச் சேர்த்தது. அது எங்கள் நாட்டு சட்டமட்டும் அல்ல. பரந்த அறிவுள்ள மக்களை அனைவராலும் ஒப்புக் கொள்ளும் உயர்ந்த கருத்தாகும்.

விடுதலை இல்லையேல் மதமில்லை; கடவுள் வழிபாடு இல்லை. கண்ணியத்திற்கு ஒளியைப் போலவும், சுவாசப் பைக்குக் காற்றைப் போலவும், இதயத்திற்கு அன்பைப் போலவும், மனித ஆத்மாவிற்கு விடுதலை அவசியமானது. விடுதலை இல்லாத மூளை பாதாளச் சிறைக்கு ஒப்பாகும். பாதாளச் சிறையிலுள்ளவன் எப்படி வெளிவர முடியாமல் அங்கேயே செத்து மடிவானோ அதே போல் கட்டுப்பாடுடைய எண்ணங்கள், நற்கருத்துக்கள் வெளியே வராமல் அழிந்து விடுகின்றன.

(தொடரும்)

விமர்சனம்

## பரிமளம் பிக்சர்ஸ்

# சொர்க்கவாசல்

"கோமசே"

கறைபடிந்த சமுதாயத்தைக் கருத்துக்களின்மூலம் துடைக்கும்—உரையாடும் திரைக் காவியம்!

"சொர்க்கவாசல்! பெயரைக் கேட்டாலே மக்கள் சொக்கிவிடுவர்!"

இது, மே, 28-ல் வெளியான சொர்க்கவாசலில் ஒரு மடாதிபதியின் பாதம் தாங்கி கூறுகிறான்.

கதையமைப்பைப் பற்றி இங்கு நான் குறிப்பிடவேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். காரணம் அந்தக் கதையைக் கண்டு களிக்காத மக்களே இருக்க முடியாது!

வசனம், மாற்றுக் குறையாதத் தங்கத்திற்கு உரைக்கல் தேடுவாருண்டோ? சிங்கம் என்று சொன்னாலே—அதில் வீரம் கலந்திருக்கத்தான் செய்யும். இதற்காக வீரத்தைப் பற்றி விளக்குவானேன்? வேண்டுமானால் அந்த வீரத்தைப் பற்றி வர்ணிக்கலாம்—புகழலாம்!

"மக்களின் உள்ளம் ஒரு எரிமலை. அதை ராஜ பக்தியெனும் சல்லா துணி கொண்டு மறைக்க முடியாது." இந்த அருமையான எண்ணத்தையும் நாம் மறக்க முடியாது. இத்தனை பொருள் பொதிந்த வசனங்கள் இந்தப் படத்தில் ஏராளம்! ஏராளம்!! "சாலையோரத்தில் வேலையற்றவர்கள்—அந்த வேலையற்றவர்கள் மனதிலே விபரீத எண்ணங்கள்! இதுதான் காலக் குறி!" என்கிறார்—நமக்குமட்டுமல்ல, அறிவு உலகத்தின் அண்ணா!

மிருதுவான முறையில் எழுதிய இந்த இனிப்பு வசனங்கள் சுவைக்க சுவைக்க கரையாத கற்கண்டு. "வசனங்கள் என்றால் மிருதுத் தன்மை இருக்க வேண்டும்" என்கிறார் அமெரிக்க நாடகாசிரியை ஜோஸப்பினா நிக்லித். இதைவிட்டு ரத்தத்தில் ஊற வைத்த வார்த்தைகளை அடுக்கி வெறித் தாண்டவமாடச் செய்யக்கூடாது வசனங்களில். இதை கையாளும் வசன கர்த்தாக்கள், அண்ணாவின், அமைதி நிறைந்து—உணர்ச்சியின் உச்சத்திலும் வெல்வெட்டு வார்த்தைகளைத் தெளித்து—சந்தர்ப்பத்திற்கு ஏற்றால்போல் எழுதியிருக்கும் இந்த நல்ல பாணியை பின் பற்றுவார்களாக. இன்னும் காப்பியடிக்கும் கர்த்தாக்களும் சிந்திக்கும் ஆற்றல் பெறுவார்களாக.

கே. ஆர். ராமசாமி நன்றாக நடித்திருக்கிறார். நாஸ்தீகன் என்று நாடு கடத்தும் காட்சி பிரமாதம்! கடைசி உச்சம் (Clymax) கத்தியுடன் வரும் காட்சியில் இன்னும் நன்றாக நடித்திருக்கலாம். பாடல்கள் நன்றாக பாடியிருக்கிறார். குறிப்பாக "எங்கும் இன்பமே" எங்கும் இன்பத்தை அள்ளி தெளிக்கிறது.

பத்மினி வழக்கத்தை மீறி இந்த படத்தில் நன்றாக நடித்திருக்கிறார். காதல் காட்சியைக் காணக் கண் கோடி வேண்டும்! வசனங்களை நன்றாக உச்சரித்து இருக்கிறார். வீரப்பா, ராஜேந்திரன், ஆர். பாலசுப்ரமண்யம், அஞ்சலிதேவி வழக்கம் போல்தான் நடித்திருக்கிறார்கள்.

ஒளிப்பதிவு துரை தன் கைத் திறனை இதில நன்றாகக் காட்டி இருக்கிறார். காதல் காட்சியில் அவர் தேர்ந்தெடுத்த குளோசப் கோணங்கள் மிகவும் சிறப்பு.

டைரக்ஷன் காசிலிங்கம், அவர் டைரக்ட் செய்த அத்தனைப் படங்களைக் காட்டிலும் இது அவருக்கு நலல பெயரைக் கொடுத்திருக்கிறது. திலகா கற்பழிக்கப்பட்ட பிறகு அவரின் திறமை தெளிவாகத் தெரிகிறது. மொத்தத்தில் படத்தின் நீளம் குறைந்திருக்கலாம்.

## இலக்கியப் பகுதி

முதலாவது

# இன்பத்துப்பாலின் இனிமை!

வே. கபிலன்

### இதயத்திலே ஒளி!

குறிஞ்சி நிலத்தின் ஒரு பகுதி; நடுப்பகலில் ஒரு இளைஞன் தனது பாங்கர்களோடு பவனி வருகிருன். கதிரவனின் கனல்களை சிறிதும் பொருட்படுத்தாத அந்தக் காளை, அம் மலையைச் சுற்றி ஓடி வரும் துஷ்ட மிருகங்களை வேட்டையாடச் செல்கிருன். ஒரு அழகான மான்! அங்குள்ள காய்கனிகளை மிக உல்லாசமாக தின்றுகொண்டிருப்பதைப் பார்த்து விட்டான். பருவச் சாயல் கொண்டோன்! பக்கத்தில் வந்த பலத் தோழர்கள் அவனை விட்டு நாலா பக்கங்களிலும் பலவித மிருகத்தை தேடிச் சென்றனர். ஆனல் அந்த ஆணழகனின் உள்ளம் அந்த இளைய மான்மீது நாட்டஞ் செல்கிறது. மான் அவனைக் கண்டு மருண்டு ஓடுகிறது. பின் தொடர்ந்து செல்கிருன். அவன் உள்ளத்தில் எண்ண அலைகள் ஏராளமாக எழுந்த வண்ணமாய் இருக்கின்றன. அத்தகைய நினைவோடு துள்ளியோடும் புள்ளி மானைத் தொடர்ந்து சென்ருன்.

வாலிபப் பருவம்—வளைந்தோடும் பாம்பையும் பிடித்து வட்டமிடச் செய்யும் தைரியம் படைத்த உள்ளம்!

பொலிவுற்ற மேனி—பொன்னக நிறத்தையே தன்னகத்தே கொண்டு விளங்கும் முழு மதியின் இயற்கை தோற்றம் போன்ற காட்சி!

யாரையும் எதிர்க்கும் வெற்றித் தோள்கள் — பச்சை ரத்தம் தன்னகத்தே கொண்டு விளங்கும்! தீரமான தேகத்தை, தன்னகத்தே கொண்டு விளங்கும் வீரனின் எழில் மிக்க முகம், அவ் வழகிய மானினல் கருகிய ரோஜா மலரைப் போல் ஆயிற்று. அத்தகைய நிலையில் அதனை பிடிக்க ஓடிக் கொண்டே இருந்தான்,

o o o

குறிஞ்சி நாட்டின் குமரி ஒருவள் தனது தோழியர்களுடன் புனலாடவும், கானகத்தில் பறந்து கிடக்கும் முல்லைப் பூவைக் கொய்யவும் வருகிருள். உடன் வந்த தோழியர்கள் நீராடவும், பந்தாடவும், மலரைப் பறிக்கவும் செல்கின்றனர். ஆனல் அவர்களுடன் வந்த தலைவி மட்டும், தன்னை மறந்தாடும் மயிலின் நடனத்தைக் கண்டுகொண்டிருந்தாள். மாணிக்கத்தின் ஒளியை மறைக்க வந்த வடந்தையோவென பிறர் கண்டு தனது கருத்திழக்க வைக்கும் அவளின் அழகு, அந்தக் கலாப மயிலின்மீது கருத்து நாடியிருந்தது.

மானைத் தொடர்ந்து வந்த அவன், எதிர்பாராத விதமாக பெண் மயிலைக் காண்கிருன். நிலை யிழந்து நிற்கிருன். தன்னையும் மறந்து விடுகிருன்—தான் தேடி வந்த மானையும் மறந்து விடுகிருன். இப்போது தேவை யெல்லாம் 'என் உள்ளத்தில் தீயை உண்டாக்கிய அவளின் துணைதான்' என்கின்ற கட்டத்தில் நிற்கிருன். அவனது தோள்களை அலங்கரித்த வில்லம்பு, அவனை அறியாமலேயே கீழே விழுகின்றது. உடன் வந்த தோழர்களையும் மறந்தான். மயக்க மளிக்கும் மருந்தை அருந்தியவனைய் அவளைப் பார்த்தவாரே நிற்கிருன். போதைத் தெளிய வில்லை; பிதற்றத் தொடங்குகிருன்.

திங்களோடு போட்டியிட்டு வெற்றி பெற்ற முகமோ! மட மகளோ! என்னை இந் நிலையில் மெய்மருளச் செய்து விட்டாளே! காதிலே குண்டலம் — கழுத்திலே முல்லை மலரொத்த வெண் முத்துக்கள் — காவிரியில் புரண்டோடும் நீரைப் போல், இவளின் இயற்கைக் கூந்தல்! என்னைத் துயரத்தில் ஆழ்த்த நினைக்கும் அவளின் பருவச் சாயல், என்னைப் பெரிதும் வருத்தமுறச் செய்கிறதே! இவள் கண்டு களிக்கின்ற அந்த அழகிய மயிலோ அல்லது மனிதப் பெண் தானே! பின்னிப் பின்னி வளரும் பூங்கொடியோ! அல்லது ஆசையை உண்டாக்குவதற் கென்றே பிறந்த அணங்கோ? என்று தன்னிலை இழந்து பேசுகிருன். திடுக்கிட்டுத் திரும்புகிருள்; அந்த அழகு வேலனைக் கண்டு தன் புன்சிரிபபை மெல்ல வெளியே காட்டுகிருள். வெட்கம் அந்தச் சிரிப்பை அடக்குகிறது. இதற்கிடையே அவள் தன்னை விரும்புகிருள் என்பதை குறிப்பாக உணர்கிருன். இதயத்தின் ஒளியால் இருவரும் சந்திக்கின்றனர். இருப்பினும் வாய் அசையவில்லை. அதற்கு மாருக அவளின் புருவம் மட்டும் அவனுக்கு 'நான் உன்னை விரும்புகிறேன்' என்று காட்டுவது போல் இருந்தன. வண்டு வன்மலரைத் தொட நடுக்கங் கொண்டதாய் அம் மலரையே உற்று நோக்கிக் கிடந்தது. அம் மலரும், வண்டு நம்மிடத்திலே உள்ள மகரந்தத் தூளை எடுக்க வருவதற்கு முன் சில உரிய கட்டளையிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டிருந்தது.

o o o

இதனைத்தான் வள்ளுவர்,

**"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
**மாதர் கொல் மாலுமென் நெஞ்சு"**

என்கிருர். ஒருவரை ஒருவர் சந்தித்தும் நிகழ்சசியைத்தான் மூதாதையர்கள் அகப் பொருள் விளக்கமாக-களவியின் கருத்தாக விளக்கிப் போந்தார்கள். இவ்வித இன்பக் காதலின்—அன்பை, அடுத்து வரும் குறளில் இனிது காண்போம்.

கலைமன்றம்
விற்பனையாளர்
T. இராமையா பிள்ளை
திருமகள் ஸ்டோர்
போளூர் (வ. ஆ.)

## வட ஆற்காடு மாவட்ட

# திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகள்

ஜூன் 19, 20 தேதிகளில் வேலூர் பாரக்ஸ் மைதானம்
அழகிரி பந்தல் P. முத்து அரங்கத்தில் நடைபெறும்.

சமூக சீர்திருத்த மாநாடு

தலைவர் :

**ஈழத்துசிவானந்த அடிகள், B. A.**

திறப்பாளர் :

**இரா. நெடுஞ்செழியன்** அவர்கள், M.A.,
ஆசிரியர், 'மன்றம்'.

அரசியல் மாநாடு

தலைவர் :

**கே. ஏ. மதியழகன்** அவர்கள், B.A.

திறப்பாளர் :

**கி. மனோகரன் அவர்கள்**

| முதல் நாள் மாநாட்டின் சொற்பொழிவாளர்கள். | | பொருள். |
|---|---|---|
| ஈ. வி. கே. சம்பத் | — | ஐரோப்பாவில் மறுமலர்ச்சி |
| அ. பொன்னம்பலனார் | — | புராணமும் இந்து மதமும் |
| மு. கருணாநிதி | — | புதுமை இலக்கியம் |
| இரெ. இளம்வழுதி | — | சட்டமும் சமுதாயமும் |
| என். வி. நடராசன் | — | வர்க்கப் போராட்டம் |
| கவிஞர் கண்ணதாசன் | — | தமிழ்நாட்டு சித்தர்கள் |
| க. அன்பழகன் | — | தமிழகம் அன்றும் இன்றும் |

இரண்டு நாட்களிலும் அறிஞர் அண்ணா, ஆசைத்தம்பி, அருண்மொழி, பூங்கோதை, சத்தியவாணிமுத்து, இராம அரங்கண்ணல், தில்லை வில்லாளன், A. கோவிந்தசாமி, M.L.A., N. S. இளங்கோ, M. S. ராமசாமி, C. P. சிற்றரசு, ப. உ. சண்முகம், தூத்துக்குடி K. V. K. சாமி, தங்கபழம், நடராசன், சிவசாமி, புரட்சி நடிகர், M. G. ராமச்சந்திரன் மற்றும் இயக்க முன்னணி வீரர்களும் கலந்து கொள்வார்கள்.

கலைவாணர் N. S. கிருஷ்ணன் குழுவினரும், நாகூர் அனிபா குழுவினரும் கலந்து கொள்வார்கள்.

வரவேற்புக் குழு தலைவர்கள் :
மா. பா. சாரதி,
நகராண்மைக் கழக உறுப்பினர்.
A. L. C. கிருஷ்ணசாமி,
செயலாளர். வ. ஆ. மா. தி. மு. க.

செயலாளர்கள் :
போளூர் K. சுப்ரமண்யம்.
V. R. ஆதிமூலம்,
வேலூர் நகர தி.மு.க. செயலாளர்.

தொண்டர் படைத் தலைவர்கள் :
A. கருத்தோவியன்
A. S. குப்பண்ணா.



# தொடர் நாவல்: துன்ப உலகம்

## இதற்கு முன்

[தண்டர்-டென்-திரான்க் என்னும் மாளிகையின் பிரபுவால் வளர்க்கப் பெற்று வந்த ஓர் இளைஞன் கேண்டிட். அந்த மாளிகையின் பேராசிரியா பங்ளாஸ் என்னும் பாதிரி. அவர் நடப்பதெல்லாம் நன்மைக்கே என்னும் தத்துவத்தை வலியுறுத்தி வந்தார். அவருடைய மாணவன் தான் கேண்டிட்.. அந்த மாளிகையில் வாழும் பிரபுவின் மகள் அழகி கியுன் காண்ட். அவளை காதலித்தான் கேண்டிட். அவளும் காதலித்தாள் அவனை.

ஒரு நாள் இரவு சாப்பாட்டிற்குப் பிறகு தன் அருமைக் காதலியைக் கட்டித்தழுவி முத்த மிட்டான். அந்த முத்தத்தில் இன்பம் பொங்கி வழிந்ததைக்கண்டு இது இன்ப உலகம் என்று எண்ணி மகிழ்ந்தான் அப்போது அவன் முதுகின் மீது பலமாக ஓர் உதை வீழ்ந்ததை உணர்ந்து, வலி தாங்காது தன் காதலியின் அணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டு 'அம்மா' என்று அலறியவாரே கீழே குப்புற வீழ்ந்தான்.

கியுன்காண்டின் தந்தை கோபமாக நிற்க கண்டு அஞ்சுகிறான். பின்னா அவன் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டான். பல இடங்களில் அலைந்து திரிந்து புள்கேரியப்படையில் சேர்ந்தான். அங்கிருந்து தப்பியோடி பிடிபட்டு சவுக்கடி தண்டனையும் பெற்றான். மன்னர் தலையிட்டால் தண்டனை நீங்கியது. பின்னர் போரின் காரணமாக அந்த நாட்டை விட்டு ஓடிவிடுகிறான். ஆலந்து நாட்டில் அடைக்கலம் புகுந்தான் அங்கும் அவனை ஆதரிப்பா ரில்லாமையால் பிரசங்கி ஒருவரை பசிக்கு உணவு கேட்டுக் கொண்டிருந்த போது அவன் தலையில் நீர்குடம் வீழ்ந்தது திகைத்து மேலே நோக்கினான்.] அதன் பிறகு,

## குருவும் சீடனும்

மண்டையிலுண்டான காயத்திலிருந்து ஒழுகிய இரத்தத்துடன் நின்ற கேண்டிட்டை வெறுப்புடன், பரிதாபமற்ற நோக்குடன் சன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் ஓர் அழகிய மாது! அவள் கேண்டிட் நின்றிருந்த வாயற்படியைக் கொண்ட மாளிகையின் சொந்தக்காரி! போப்கிருத்துவத்தின் எதிரி என்று சொல்ல மறுத்த கேண்டிட்டிற்கு உணவு கொடுக்க விரும்பாது அவனைத் துரத்திக்கொண்டிருந்த பிரசங்கியின்—மதக் குருவின்—மனைவியுமாவாள் அவள்!

கேண்டிட் தலைமீது ஒரு பெண்ணால் கற்றறிந்த மதக் குருவின் மனைவியால், நீர்க்குடமொன்று மாடியிலிருந்து சன்னல் வழியாக வீசியெறியப்பட்டதென்பதிலிருந்து, அந்தக் காலத்தில், மாதர்களுக்கு மத உணர்ச்சியளித்த மதம் எவ்வளவு அளவுடையதாயிருந்ததென்பதை அறிய ஏதுவாகின்றதல்லவா!

கேண்டிட் நீர்க்குடத்தால் தாக்குண்டு ஏற்பட்ட காயத்தையும், குருதி நீர் ஒழுக்கையும் சிறிது தொலைவிலே நின்றிருந்து, கண்ட, ஜேம்ஸ் என்னும் பெயருடைய ஒரு பரோபகாரி, மிகவும் மன வேதனையடைந்து, கேண்டிட்டை அழைத்துக் கொண்டு தன் வீடு சென்றார். அங்கே கேண்டிட்டின் தலையிலுண்டான காயத்திற்கு மருந்திட்டு, இரத்தக் கறையைப் போக்கினார்.

"தங்கள் பேருதவியை நான் என்றுமே மறக்கமாட்டேன்" என்று நன்றியுரை கூறினான் கேண்டிட், தன் காயத்திற்கு மருந்திட்டு, உணவளித்து உபசரித்த ஜேம்ஸுக்கு.

"ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்குச் செய்யக் கூடிய சாதாரண உதவியைவிட நான் ஒன்றும் செய்து விடவில்லையே!" என்றார் ஜேம்ஸ்.

கிருத்துவர்கள் இரக்க முடையவர்கள். பிறர்க்கு உதவி செய்வதற்கு என்றுமே பின் வாங்காதவர்கள் என்று கூறப்படுகிறபோது, கரிய மேலாடை போர்த்து, கையிலே மணி பிடித்து, காலம் முழுவதும் தருமத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கும் அந்த மதக் குருவும் மனிதன் தானே! அவரிடத்திலே, அவர் அருமை மனைவியிடத்திலே காணப்படாத ஓர் இரக்கம் தங்களிடத்திலுள்ளபோது நான் எப்படி உங்களைப் போற்றாமலிருக்க முடியும்?" என்றான் கேண்டிட்.

நண்பா, ஆண்டவன் உபதேசத்தை விரும்பவில்லை. அன்புச் செயலைத்தான் விரும்புகிறார். இந்தத் தத்துவத்தை உணர்ந்து கொள்கின்றவன்தான் உண்மைக் கிருத்துவனாக முடியும். இதனால்தான் நான், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதைவிட்டு, வயது வந்த பிறகு, உலக அறிவு பெற்ற பிறகு ஞானஸ்நானம் வழங்க வேண்டுமென்கிறேன்! அதற்காக என்னையும் என்னைப் போன்றவர்களையும் வெறுத்து நோக்குகின்றவர்களின் எண்ணிக்கை வளர்கின்றது. கேண்டிட், நாடோடியாக மாறிவிட்ட நீ, இனி எங்கும் செல்ல வேண்டாம்; என்னிடத்திலுள்ள பெர்ஷியன் பட்டு உற்பத்தி தொழிலிலீடுபட்டு என்னுடனேயே தங்கியிருந்துவிடு" என்றார் ஜேம்ஸ்.

வயிற்றுப் பசிக்கு ரொட்டித் துண்டுகளும், குடிக்க மதுவகைகளும் கிடைக்கின்ற ஜேம்ஸ் இல்லத்தைவிட்டு கேண்டிட்டுக்கும் செல்ல மனமில்லாத நேரத்தில், ஜேம்ஸே தன்னைத் தங்கியிருக்கச் சொல்லும்போது கேண்டிட் அதை மீறி சென்றுவிட எண்ணுவானா! கேண்டிட் ஜேம்ஸ் இல்லத்திலேயே தங்கினான்.

ஒரு நாள் கேண்டிட், உலவி வர வெளிச் சென்றான். வழியிலே அவன் உள்ளம் எண்ணிற்று: மண்டையில் காயமேற்படும்படி நீர்க்குடத்தை எறிகின்ற மத வெறி மாதர்களும், சுயநல மதக் குருக்களும் இருக்கின்றனர் இந்த உலகத்தில். இதே உலகில்தான் ஜேம்ஸ் போன்ற பேருபகாரிகளும் இருக்கின்றனர். ஆதலால் இந்த உலகத்தைத் துன்ப உலகமென்று

அழைப்பதா? அல்லது இன்ப உலகம் என்று எண்ணுவதா? என்று சிந்தித்தவாறே உலவிக் கொண்டிருந்த அவன் திடீரென்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்: இல்லை. இது மிகவும் நல்ல உலகம்தான்! நான் அந்த மதக்குருவின் மனைவியால் காய முற்றிராவிடின் இந்த ஜேம்ஸ் என்னைச் சந்தித்து அழைத்து வந்திருக்க மாட்டாரே! அங்கையால் அந்தத் துன்ப நிகழ்ச்சியும் இன்ப வழிக்குத்தானே பயன்பட்டது. பங்களாஸ்! நீர் சொல்வதுபோல் இந்த உலக நிகழ்ச்சிகள் அனைத்தும் நன்மையின் பொருட்டே! இந்த உலகம் ஆண்டவன் படைத்த மற்றெல்லா உலகங்களையும் விட மிக நல்ல உலகம்தான்!"

இப்படித் தீர்மானித்து விட்டு, ஜேம்ஸ் இல்லம் நோக்கி நடந்தான். வழியில் ஒரு பிச்சைக்காரன் நின்றிருக்கக் கண்டான். அவன் உடலெல்லாம தொத்து நோய்ப் புண்கள் நிறைந்திருந்தன. அவனுடைய கண்கள் உள்ளடங்கி யிருந்தன. அவனுடைய வாய் ஒருபுறம் கோணியிருந்தது. அவனுடைய பற்களெல்லாம் கறுமையாயிருந்தன. இருமி, இருமி உள்ளிருந்து கொணர்ந்த சளியை வெளியே உமிழ முயன்ற ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு பல்விழுந்திடும் அளவிற்குப் பெரும் வேதனை அடைந்தான் அந்த பிச்சைக்காரன். அவனைக் கண்டதும் கேண்டிட் தன் கையிலிருந்த சில்லரைக் காசை அவனுக்களித்தான். அப்போது அந்தப் பிச்சைக்காரன் கேண்டிட்டை உற்று நோக்கினான். ஆனால் கேண்டிட் அவன் பார்வையை அலட்சியப் படுத்திவிட்டு நடந்தான். உடனே அந்தப் பிச்சைக்காரன் கேண்டிட்டை பிடித்துக் கொண்டு 'ஓ!' எனக் கதறிக் கண்ணீர் விட்டான்!

அவன் யார் என்று அறிந்து கொள்ள முடியாத கேண்டிட் திகைத்து நிற்கும் போது அந்தப் பிச்சைக்காரனே, "என்னை உனக்குத் தெரியவில்லை! உன் ஆசிரியர் பங்களாஸை உனக்குத் தெரியவில்லையா! கேண்டிட், நீ என்னை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லையா?" என்றான் துக்கம் நெஞ்சை பிளக்கும்படி.

அப்போது கேண்டிட், "ஆ! என் ஆசான்! ஐயோ, உமக்கா இந்தக் கதி! தண்டர்-தென்-திரான்க் மாளிகையின் பிரபு என்னவானார்? என் கியுன் காண்ட் எந் நிலையிலுள்ளாள்! ஆ, தெய்வமே! என்னே எதிர்பாராத நிகழ்ச்சிகள்! பங்களாஸ், பார்க்கச் சகிக்காத இந்தத் தொத்துநோய் இரணச் செதிள்கள் உமக்கு எப்படி ஏற்பட்டன? நீர் ஏன் பெரு மாளிகையை விட்டு, தெருத் தெருவாக பிச்சையெடுத்து வருகிறீர்? என்று மூச்சுவிடாது, அதிர்ச்சியடைந்த உள்ளத்துடன் கேட்டான்.

அவன் கேள்விகளுக் கெல்லாம். ஒரே பதிலாக பங்களாஸ், நான் மிகவும் பசித்திருக்கிறேன் என்னால் மூச்சுக்கூட சரியாக விட முடியவில்லை என்று கூறினர். அந்த வார்த்தையைக் கேட்ட கேண்டிட் பங்களாஸை தன்னுடனே அழைத்துச் சென்று ஜேம்ஸ் இல்லத்தின் லாயத்திலே அமர்த்தி கொஞ்சம் ரொட்டியைக் கொடுத்து உண்ணச் சொன்னான். பசி அடங்கிய பங்களாஸின் பார்வை ஒளியுடையதாகியது; மூச்சு உள்ளிழுக்கவும் வெளிவிடவும் சக்தி உண்டாகியது; பேசவும் சிறிது வலிவு ஏற்பட்டது. அப்போது கேண்டிட், "பங்களாஸ், பாவை கியுன் காண்ட் எப்படி உள்ளாள். அவள் என்னை நினைக்கின்றாளா? நான் வெளியேற்றப்பட்டதற்காக வருந்துகிறாளா?" என்று அடுக்காக உள்ள உணர்ச்சியின் பெருக்கால் கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தான்.

ஆனால் பங்களாஸ் மிக எளிதில் பொறுமையாய், அதிர்ச்சியின்றி, ஆனல், ஒரு பெருமூச்சுடன், "கியுன் காண்ட் இறந்துவிட்டாள்?" என்று பதிலளித்தார்.

அந்தச் செய்தியைக் கேட்ட கேண்டிட் "ஆ! கியுன்காண்ட்!" என்று கூப்பிட்டவாறே அதிர்ச்சியடைந்து கீழே விழுந்தான். அப்போது பங்ளாஸ், ஏற்கனவே அந்த லாயத்திலிருந்த புளிப்பேறிய திராட்சை இரசத்தின் உதவியால் கேண்டிட் மயக்கம் தெளிந்து எழுந்திருக்கச் செய்தார்....

உடனே கேண்டிட், "பங்ளாஸ், என் காதலி கியுன்காண்ட் உண்மையாகவா இறந்து விட்டாள்?" அவள் ஏன் இறந்து விட்டாள்! ஐயோ! இந்த உலகம் என்னைத்தான் துன்புறுத்துகிறதென்றால், என் இன்பக் கிளியையுமா மரணமடையச் செய்யவேண்டும்! ஆசிரியரே, இதை என்னால் நம்பமுடியவில்லையே! அவள் இறந்தது உண்மையானல் அவள் எப்படி இறந்தாள் என்பதைத் தயைகூர்ந்து சொல்லவும்! ஒருவேளை, தன் தந்தையால் உதைப்பட்டுப் பிரிந்து சென்ற என்னை எண்ணியெண்ணி இளைத்து, உருமாறி இறந்துவிட்டனளோ! எனக் கண்ணீர் மல்க பெரு வேதனையுடன் வினவினன்.

"இல்லை. கேண்டிட் நீ அவளை விட்டுப் பிரிந்து சென்றதால் அவள் இறந்துவிடவில்லை. நீ பிரிந்து சென்ற சின்னாட்களில் அபேரிய மன்னனுக்கும், புள்கேரிய மன்னனுக்கும் மூண்ட போரின் விளைவினல், அபேரிய வீரர்கள் புள்கேரிய கிராமங்களிலும், மாளிகைகளிலும் நிகழ்த்திய அக்ரமங்களுக்கும், அட்டூழியங்கட்கும் பழி வாங்கும் முகத்தான், புள்கேரிய வீரர்கள், நம் பெரும் மாளிகையிலே புகுந்து அழகு மிக்க கியுன்காண்டை அலங்கோலமாகக் கற்பழித்துக் கீறிக் கொன்றார்கள்!" என்று சொல்லி, முடிப்பதற்குள், கேண்டிட் மீண்டும் "அந்தோ!" என்று கீழே வீழ்ந்தான். ஆனல் பங்ளாஸ் அவனிடம் நெருங்கும் முன் கண் விழித்துக்கொண்டு தரையைவிட்டு எழுந்திராமல் ஓ! வெனக் கதறிக் கண்ணீர் விட்டழுதான் கேண்டிட்.

"என் அருமைக் காதலி! கியுன் காண்ட்!" உன்னைப் பாழும் புள்கேரிய படை வீரர்கள் கொன்று விட்ட செய்தி என் உள்ளத்தைத் துடிக்கச் செய்து, பிளவுபடுத்துகிறதே! தேமதுர மொழியாளே! உன் தேகம் துன்மார்க்கப் படை வீரர்கள் பிடிப்பிலே எப்படி நெளிந்து துவண்டதோ! அப்போது நீ எப்படித் துடித்துக் கதறினயோ! பூவை உன்னைப் புழு போன்று நசுக்கி விட்டார்களே, அந்தப் புள்கேரியர்கள்! ஐயகோ! என் இதயம் வெடிக்கின்றதே! கண்ணே, கியுன்

காண்ட்!, உன் காதல் மொழியை, இனி எப்போது கேட்பேன்! உன் மேனியைப் பார்த்து ரோஜா நிற மேனியாளே என்றேனே! அந்தோ! அந்த ரோஜா நிற மேனி மாலை ரோஜாவைப்போல் வாடி வதங்கி விட்டதே! நீ அளித்த முத்தம் நான் உன் தந்தையிடம் பெற்ற உதைகளை மறக்கச் செய்ததே! ஆனால், அதே முத்தம் இன்று நீ மாண்ட செய்தி கேட்டபின் என்னை முழுக்க முழுக்க வேதனைக்குள்ளாக்குகிறதே! பங்ளாஸ்! பாதகப் படை வீரர்கள் கொடுஞ் செயல் புரிந்தபோது எங்கு அடைப்பட்டுக் கிடந்தார்கள் அந்தப் பெருமைக்காரச் சீமானும், பித்துக்குளிச் சீமாட்டியும்? அவர்கள் ஏன் புள்கேரியர்களை எதிர்த்து என் அன்புக் களஞ்சியத்தை மீட்கவில்லை! அந்தப் பாவிகள் என் உள்ள கோயில் விக்ரகம் இடிந்து வீழ்வதற்கு முன்னமே மடிந்துவிட்டனரோ, பங்ளாஸ்!" என்று தேம்பித் தேம்பி அழுதான்.

அப்போது பங்ளாஸ், "கேண்டிட் கியுன்காண்ட் கற்பழிக்கப்பட்டபோது சீமானும், சீமாட்டியும் அந்த வீரர்களை எதிர்த்தார்கள். ஆனால் பலனில்லை. அவர்கள் மிக எளிதில் அந்த வீரர்களால் கொல்லப்பட்டார்கள்! அந்த இளஞ் சீமானும் அதே நிலைக்குத்தான் ஆளானான்! அந்த மாளிகை தீக்கிரையாக்கப்பட்டது. அந்த மாளிகையைச் சேர்ந்த ஆடு மாடு குதிரை போன்ற உயிர்கள் ஒன்றுகூட தப்பிப் பிழைக்கவில்லை. தண்டர்—தென்—திரான்க் மாளிகை இருந்த இடமே தெரியாமற் செய்யப்பட்டது. நம் அபேரியர்கள் புள்கேரிய கிராமங்களிலே இழைத்த அட்டூழியங்கட்குப் புள்கேரியர்களால் அவர்கள் பழிவாங்கப்பட்டார்கள்! கேண்டிட், இதைத் தவிர்த்து நிகழ்ச்சிகள் வேறுவிதமாக அமையமுடியாது! இந்த உலக நிகழ்ச்சிகள் ஒன்றோடொன்றாகப் பின்னப்பட்டவை என்று பல முறை கூறியுள்ளேனே!" என்று அங்கும் தத்துவம் பேச ஆரம்பித்தார் பங்களாஸ்.

"ஓ புள்கேரியர்களே! என் கியுன்காண்ட் தான் உங்களுக்குப் பழிவாங்கக் கிடைத்த பெண்ணா! நான் உங்கள் படையிலே ஒரு வீரனாகத் தானே இருந்தேன்! உங்களிலொருவனின் காதலியையா, துன்புறுத்தி, உங்கள் காம வெறியைத் தணித்துக்கொண்டு, கீறிக் கொன்று விட்டுச் செல்வது! அட பாவிகாள்! உங்கள் துப்பாக்கிகளின் சொருகீட்டிகள் என் கண்மணியின் உடலைக் கிழித்துக்குடலை வெளிக் கொணரவா பயன்பட வேண்டும்! இரக்கம் கொஞ்சமுமில்லாத இரண கள வீரர்களிடையே சிக்கிச் சின்னாபின்னமான சிங்காரச் சொரூபி! இளஞ் சீமாட்டி! என் இதயராணி! கியுன் காண்ட் என்று தேம்பித் தேம்பிக் கதறிக் கொண்டே இருந்தான்.

அப்போது பங்ளாஸ், "கேண்டிட் கடந்துபோன நிகழ்ச்சிகளை எண்ணி யெண்ணி வருந்திப் பயனென்ன? மாண்டவர்களை இந்த மண்ணகத்தில் மீண்டும் கண்டதுண்டோ! சீடனே, ஒன்றின் அழிவு மற்றொன்றின் ஆக்கமன்றோ! துன்பம் மற்றொன்றின் இன்பமன்றோ! ஒன்றின் தீமை மற்றொன்றின் நன்மை யன்றோ! புள்கேரியர்களின் அட்டூழியங்கள் நம் மாளிகையினுள்ளே நுழைந்திராவிட்டால், நான் அந்த மாளிகையை விட்டு இங்கெப்படி வந்திருக்க முடியும்? இங்கு இக்கோலத்தில் வந்ததனால் தானே உன்னை, என் அருமைச் சீடனை, குருபக்தி மிக்கவனைக் காண முடிந்தது! கேண்டிட், நிகழ்கின்ற காரியங்கள் அனைத்தும் காரணமின்றியமையா" என்று கியுன் காண்ட் மீது கேண்டிட், கொண்டிருந்த எண்ணத்தை வேறு வழியில் திருப்பிடக் கூறினார்.

தன் ஆசிரியரின் தத்துவார்த்த உரைகளைக் கேட்ட கேண்டிட், "ஆசிரியரே காரணமின்றி காரியமில்லை என்றால், உம் உடலெங்கும் ஏற்பட்டுள்ள தொத்துநோய் இரணச் செதிள்களுக்குக் காரணமென்ன" என வினவினான்.

"கேண்டிட், என் நோய்க்குக் காரணம் காதல்" என்றார் பங்ளாஸ்.

"காதல்! உம். காதலாம், காதல்! இந்தக் காதலைப் பற்றி நான் அறிந்துள்ள அளவுக்கு நீர் அறிந்திருக்க முடியாது. உண்மையாகச் சொல்லுகிறேன், உமக்குத் தத்துவம் தெரிந்த அளவிற்குக் காதல் தெரியாது" என்றான் காதலின் வெற்றியைக் காணாத கேண்டிட்.

"காதல் உனக்குத்தான் ஏற்படுமென்றோ அல்லது உன் போன்ற இளைஞர்கட்குத்தான் ஏற்படுமென்றோ நீ எண்ணிக் கொண்டிருந்தால் அது உன்னையே நீ சரியாகப் புரிந்து கொள்ளாது காதலைப் பற்றிப் பேசிவிட்டாய் என்றுதான் பொருளாகும்" என்றார் பங்ளாஸ்.

"ஆசிரியரே, காதலும் காற்றும் ஒன்றாகும். காற்று மெதுவாகவும் வீசும்; வேகமாகவும் வீசும். மெதுவாக வீசும்போது இன்பமனுபவிக்கின்றோம்; வேகமாக வீசுகின்றபோது துன்பமனுபவிக்கின்றோம்! அதுபோல காதல் மிதமானால் இளங் காற்றாகிறது; வேகமானால் புயலாகிறது. ஆனால், என் காதல் புயலாக மாறிக் கொண்டிருக்கின்ற நேரத்திலேயே எனக்குச் சிறப்பான பரிசைத் தந்தது. அதுதான் கியுன் காண்ட் எனக்களித்த முத்தம்! ஆனால் காதலின் விளைவான அந்த முத்தம் தந்த பரிசோ சீமான் என் முதுகின் மீது தந்த இருபது உதைகளாகும்!" என்று காதலின் ஆழத்தையே அறிந்து விட்டவன் போல் பேசினான் கேண்டிட்.

"கேண்டிட், காதல் நீ கூறுவது போல் இளங்காற்று மன்று; புயலுமன்று! "காதல் மனித உயிர்களுக்கு ஆறுதல் அளிக்கின்றது; காசினியைக் காக்கின்றது; உயிர்ப் பொருள்கள் அனைத்துக்கும் உயிராகின்றது!" என்றார் பங்ளாஸ்.

"அத்தகைய காதல் உமக்குத் துன்பம் தரத்தக்க தொத்து நோயை பரிசளித்தது எவ்வாறு?" எனக் கேட்டான் கேண்டிட்.

"கேண்டிட், நம் சீமாட்டியின் முதன்மை தோழி பாக்வெட் என்பவளை நீ நன்கறிவாய். அந்த அழகியிடம் உலகத்தின் இன்பத்தை நுகர்ந்தேன் அதன் பயன்-அந்தக் காதலின் பரிசு— என் உடம்பில் காணப்படுகின்ற நரகவேதனையான நோய்! இந்தக் கொடும் நோயால் இந்நேரம் அவள் இறந்து விட்டிருப்பாள்! நான் இறந்து கொண்டேயிருக்கிறேன்! பாக்வெட் இந்த நோயைக் கற்றறிந்த பிரான்ஸிஸ்

(13-ம் பக்கம் பார்க்க)

கலைமன்றம்

திராவிடர் முற்போக்கு வார இதழ் ... ஆசிரியர்: பால்வண்ணன்

சென்னை — 5—6—54 — சனி

# அந்தக் காலம் மலையேறிவிட்டது

நாகரிகம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. நல்லறிவு பெற்ற மக்கள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகின்றனர். புதிய உணர்ச்சியும் எழுச்சியும் பெற்று ஒவ்வொரு நாடாக விடுதலை அடைந்து வருகிறது.

அதைப் போலவே—அநாகரிகம் தேய்பிறை யாகிறது; மூடர்கள் குறைகிறார்கள். பழமையும், இழிகுணங்களும் கரைகின்றன.

இந்த இருவேறு நிலைமைகளையும் இரு பிரிவினர் காண்கின்றனர்.

புதுமை மலர்வது கண்டு புன்னகைப் புரிகின்றனர் நல்லவர்கள்! பழமை அழிவது கண்டு அலறித் துடிக்கின்றனர் பழமை விரும்பிகள்.

இந்த நிலைமை இங்கு மட்டுமல்ல இந்த உலகின் பல நாடுகளில் இருக்கின்றன. இன்று மட்டுமல்ல பழைய நாட்களிலும் இருந்து வந்தன.

இவைகளை உலக வரலாற்றைப் படித்த அனைவரும் நன்கு உணர்வர். ஒவ்வோரு காலத்திலும் ஒவ்வொரு நாடுகளிலும் உண்மையை விளக்கும் புரட்சிக்காரர்கள் தோன்றி புதுமை எண்ணங்களைத் தோற்றுவித்திருக்கின்றனர். அந்தக் காலங்களில் அவர்களுக்கு எதிர்ப்புகள் இருந்தாலும் அவர்களுடைய கொள்கைகள் அழியாமல் இன்று அரசோச்சுகிறது. இதனையும் நாம் அறிவோம்.

ருஷ்யாவில் லெனின் புரட்சிசெய்த போதும், சீனாவில் சன்யாட்சன் புரட்சி செய்த போதும், இத்தாலியில் மாஜினி மக்கள் கடமைகளைக் கவனப்படுத்திய போதும் அவர்களை ஒழித்துக் கட்டவே தீர்மானித்தனர் தீயவர்கள். அத்துடன் தீய கொள்கைகளை பின்பற்ற வேண்டும் என்று பயமுறுத்தினர் பலாத்காரத்தைப் பிரயோகித்து—என்ன செய்தாலும் அவர்கள் இறுதியில் தோற்றனர். உண்மை வெற்றி மாலை சூடியது. இன்று வீர நடை போடுகிறது.

இந்த உண்மையை அறியாமலோ—அறிந்தும் உண்மையை மறைத்து விடவேண்டும் என்று கருதியோ இங்கு—திராவிடத்தில் இன்னும் பழமையின் பிரதாபங்களை எடுத்துப் பேசிக் கொண்டும்—புதுமை எண்ணங்களைத் தடுத்துக் கொண்டும் வருகின்றனர்.

சென்ற மாதம் 24-ஆம் நாள் திருச்சியைச் சேர்ந்த மஹாதான புரத்தில் பக்தர்கள் கூடி பழமை என்னும் உளுத்துப்போன கோல் கொண்டு, அறிவு மலையைச் சுக்கு நூறுக்க உடைத்துவிடும் வீணர்களைப் போல பேசியிருக்கின்றனர்.

உலக நன்மைக்கு சந்நியாசிகள் அவசியமாம். சந்நியாசிகளை நம்பி உலகம் வாழமுடியுமா? என்ற கேள்வியை நீங்களே எழுப்பிக்கொண்டு உங்கள் மனதைக் கேட்டுப் பாருங்கள்.

இந்தியாவின் சந்நியாசிகள் எப்படிப் பட்டவர்கள்? அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் எவை? என்பன போன்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு அவர்களின் நிலைமைகளைப் புரிந்து கொண்டு இந்த உலகிற்கு சந்நியாசிகள் தேவையில்லை என்ற முடிவும் கட்டிவிட்டு விஞ்ஞானிகளைத் துணைகொண்டு அவர்கள் வகுத்துத் தந்த மார்க்கத்தில் உலகமே சென்று கொண்டிருக்கிற வேளையிலே திருச்சியிலே கூடிய பிராம்மணோத்தமர்கள் கூறுகின்றார்கள் உலகச் க்ஷேமத்திற்கு சந்நியாசிகள் அவசியம் என்று.

சந்நியாசிகள் சாதித்தவைகளையும் விஞ்ஞானிகள் சாதித்தவைகளையும் கணக்கிட்டுப் பார்த்து எதிலே பயன் அடைந்திருக்கிறது இந்த உலகம் என்ற கேள்வியை எழுப்பினால் என்ன முடிவுவரும்.

சந்நியாசிகள் பற்றற்று இருக்க வழி சொன்னார்கள். விஞ்ஞானிகள் வீட்டிலேயே சுவர்க்கம் இருப்பதைக் கண்டுபிடித்துக் காட்டினார்கள். விஞ்ஞானியின் சாதனையால் உலகம் வளர்ந்து வரும் இந்தக் காலத்தில் சந்நியாசிகளின் அவசியத்தைப் பேசும் அளவுக்கு துணிவுள்ளவர்களும் இருப்பதை காணும் அறிவுள்ள அனைவரும வெட்கப்படுவர்.

விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட காரில் ஏறுவார். ஆகாயவிமானத்தில் பறந்து செல்வார். ஒலி பெருக்கியின் முன்னர் நின்றுகொண்டு பேசுவார் பழமையின் அவசியத்தைப் பற்றி! இந்த நன்றி மறந்தவர்களை நாம் என்னவென்று அழைப்பது என்றே புரியவில்லை.

"சோழ மன்னர்களிடமிருந்து நிலம் நன்கொடையாகப்பெற்ற பிராம்மணர்கள் வாழும் இப்பிரதேசத்தில் தங்கள் பழக்க வழக்கங்களை கைவிடக்கூடாது. பொது மக்கள் க்ஷேமத்திற்காக முன்னாட்களில் பசு, பிராம்மணர்கள் ரட்சிக்கப் பட்டனர்" என்று பேசியிருக்கிறார் சுப்பிரமணிய அய்யர்.

பசுவையும், பிராம்மணர்களையும் பாதுகாத்தால் பொதுமக்கள் க்ஷேமம் அடைவார்களாம். சோம்பேறிக் கூட்டத்தை பெருக்கவேண்டும் என்கின்றார். பிராம்மணர்களுக்குத் தாராளமாக எதையும் கொடுங்கள் என்ற பழைய சித்தாந்தத்தையே அவர் வலியுறுத்துகின்றார்.

அங்கு பேசிய மற்றொருவர்

"தம்பதிகள் பரஸ்பர சம்மதத்தின் பேரில் விவாகரத்து செய்துகொள்ள இந்து சட்ட தொகுப்பு மசோதாவில் கண்டுள்ள விதி உலகில் எந்த நாட்டிலும் இல்லை.

# துன்ப உலகம்

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

கானிடத்திலிருந்து பெற்ருள்; அவன் அதை வயதேறிய சீமாட்டியிடமிருந்து பெற்ருன்; அச்சீமாட்டி அவ்வியாதியை ஒரு குதிரைப்படை வீரனிடமிருந்து பெற்ருள்; அவன் ஒரு மார்க்ஸிய பிரபுவின் மனைவியிடமிருந்து பெற்ருன்; அவள் அவளுடைய வேலையாளிடமிருந்து பெற்ருள்; அவன் ஒரு உரோமன் கத்தோலிக்க மதக் குருவிடமிருந்து பெற்ருன். அந்தத்தொத்து நோயை; அந்தக் குருவோ, கிரிஸ்டோபர் கொலம்பஸினுடைய தோழர்களிலொருவனிடமிருந்து பெற்ருன். ஆனல் நான் யாருக்கும் தொத்தும்படி விடப் போவதில்லை; நான் இறந்துகொண்டிருக்கும் மனிதன்!" என்று கூறினர் பங்ளாஸ்.

"அதிசயம்! ஆம், அதிசயமான ஒரு பரம்பரைத்தான்! பங்ளாஸ் அஃதொரு தாங்க முடியாத துன்பமன்ருே?" என வினவினன் கேண்டிட்.

"அல்லகேண்டிட், உலகங்களிலே நல்லதான இல்வுலகில், அத்தகையதொரு தொத்து நோய் இன்றியமையாத ஒரு துணைப் பொருள்! உயிருற்பத்திக்குத் தடையாகும், இயற்கையின்பெருமுடிவிற்குஎதிராகும்இத்தகைய தொத்து நோய் கொலம்பஸுக்கு ஏற்பட்டிராவிடில், அவர் அமெரிக்கத் தீவுகளிலொன்றிலே தங்கும் அவசியம் மேற்பட்டிராது. அதனல் இப்போது நமக்குக்கிடைக்கின்ற சாக்லேட் மிட்டாயும், வர்ணத்திற்கான தமபல பூச்சிகளும் கிடைக்காவல்லவோ! மதச் சச்சரவு போன்று, இந்த நோய் ஐரோப்பியர்களாகிய நமக்கு விந்தையானதே! துருக்கியர்களும், இந்தியர்களும், பாரசீகர்களும், சீனர்களும், ஜப்பானியர்களும் இந்த நோயைப் பற்றிச் சிறிதும் தெரியாதவர்கள். ஆனல், அவர்களும் இன்னும் சில நூற்ருண்டுகளில் எனக்குப் பிடித்துள்ள தொத்து நோயின் அனுபவத்தை அறிந்து கொள்வார்கள். நாட்டின் தலை எழுத்தை நிர்ணயிக்கின்ற உண்மையான பெரும் கூலிப் படையிலே இந்த நோய் வளர்ந்து விட்டது. முப்பதாயிரம் படைவீரர்களாக இரு சார்பிலுமிருந்தால் இருபதாயிரம் வீரர்கள் இருசார்பிலுமே பெரும் தொத்து நோய்க்காளாகின்ருர்கள்" என்று பதிலளித்தார் பங்ளாஸ்.

"நான் தங்கள் போதனைகளை இனித் தொடர்ந்து கேட்பதற்காக,

---

இதனைப் பொதுமக்கள் ஆட்சேபிக்க வேண்டும். பெண்கள் சமஸ்கிருத பாஷையைக் கற்றுக் கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு பிராம்மணர்கள் வேதங்களைக் கற்றுக் கொடுக்கவேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார். அவர் பெயர் கே. பாலசுப்பிரமணிய அய்யர்.

அதுபோல் அய்யர்கள் அனைவரும் கூடி ஆஸ்திகத்தைக் கட்டிக் காக்கிருர்கள். பாவம்! அவர்களுக்கு நாம் ஒன்று கூற ஆசைப் படுகின்ருேம். பிரம்ம குலத்தவரே! உங்கள் சக்தி, ஆற்றல் இவைகள் எல்லாம் மலையேறிவிட்ட காலம் இது. முன்பு அதாவது புராணங்களில் பிராம்மணர்களுக்கு கடவுள் உதவி புரிந்திருக்கிற கதைகள் இருக்கின்றன. ஆனல் இன்று உங்கள் பக்கம் பரிந்து பேச உங்களால் வணங்கப் படும் கடவுள் கூட வரமாட்டார் என்ற உண்மையை திராவிடம் உணர்ந்து விட்டது. ஆகவே, பெருகி வரும் அறிவு வெள்ளத்தை அணை போட்டு நிறுத்திவிட முடியாது. எனவே உங்கள் பழைய ஏடுகளை, மூடிவைத்து விட்டு கொள்கைகளை தூறஎடுத்து வீசிவிட்டு புதுமை மார்க்கத்தில் அறிவுப்பாதையில், வள்ளுவர், புத்தர் காட்டிய நெறியைப் பின்பற்றுங்கள்.

உங்கள் பொய் யுரைகளை மெய்யென நம்பிய அந்தக் காலம் மலையேறி விட்டது!

---

## அட்டைப் படம்



நமது பழம் பெரும் தலைவர்களில் முக்கியமும் முதன்மையும் பெற்றவர் பன்னீர் செல்வம் அவர்கள் திராவிட மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட பெரியோர். பதினைந்து ஆண்டுகள்வரை சுயமரியாதை இயக்கத்திற்காக அரும் பாடுபட்ட தலைவர். ஆங்கிலேயரிடமிருந்து நாட்டை விடுவிக்க முயன்ற முதல்வர்களில் ஒருவர். ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளிலும் பேசும் திறம் படைத்தவர். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களான, சர். பி.டி. தியாகராயர். முனுசாமி, ராமசாமி முதலியவர்களால் பாராட்டப் பெற்றவர். ஜாதிப் பற்றினை வெறுத்து புதிய பாதையை அமைத்தவர். ஆங்கில அரசாங்கம் தந்த 'சர்' பட்டத்தை உதரித்தள்ளிய வீரர். தென்னிந்தியர் என்று கூறிய, வந்த மக்களை "திராவிடர்கள்" என்று கூறும்படி கட்டளையிட்டவர். தஞ்சையிலே ஜில்லா போர்ட் தலைவராகப் பணியாற்றிப் பல நிலையான நன்மைகளைச் செய்தவர்.

1935-ல் இந்தியை எதிர்த்த வீரர். 1940-ல் இங்கிலாந்துக்கு திராவிடத்தின் நன்மையை நாடிச்சென்ருர். திரும்பவில்லை. அந்த உத்தமரை ஓமான் கடல் விழுங்கிற்று அந்த உத்தமரை. அந்த மாபெருந் தலைவரின் திருவுருவத்தையே இவ்வாரக் கலைமன்றம் தாங்கிவருகிறது.

உங்கள் உடல் நலமுற வேண்டும். அதற்காவனச் செய்ய வேண்டும்" என்ருன் கேண்டிட்.

நான் எப்படி நலமுற முடியும்! கேண்டிட், எந்த வைத்தியனும், பணமின்றி சிகிச்சை செய்ய முன் வரமாட்டான். ஆகையால் அந்த எண்ணத்தை விட்டு விடு" என்ருன் பங்ளாஸ்.

அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன், கேண்டிட் ஜேம்ஸைத் தேடிச் சென்ருன். அவருடைய கால்களிலே வீழ்ந்து, தன் ஆசான் பங்ளாஸின் உடல் நலமுற வழிக் செய்ய வேண்டினன்! என்னே அவனின் குரு பக்தி! ஜேம்ஸ் உதவியால் பங்களாஸின் நோய் தீர்ந்தது. ஆனல், நோயின் கொடுமையில், அவர் ஒரு கண்ணையும், காதையும் இழந்தார்! ஒரு கண்ணும் ஒரு காதும் அற்றவரானுலும், பங்ளாஸ் கணக்கெழுதுவதில் திறமை குறைந்தவராகவில்லை. ஆதலால் ஜேம்ஸ் அவரைத் தனக்குக் கணக்கெழுதும் தொழிலில் அமர்த்திக் கொண்டார்.

சில நாட்களுக்குப் பின்னர், வியாபாரத்தின் பொருட்டு, ஜேம்ஸ் லிஸ்பன் பட்டினத்திற்குச் செல்ல வேண்டியதாயிற்று. அப்போது அவருடன் இரண்டு தத்துவவாதிகளான பங்ளாஸும், கேண்டிட்டும் சென்ருர்கள்.

நீல நிறக்கடலின் மீது மரக்கலம் சென்று கொண்டிருந்தது. அப்போது பங்ளாஸ் இந்த உலகம் நன்மையின் பொருட்டே ஆக்கப்பட்டுள்ளது என்பதை ஜேம்ஸுக்கு விளக்க ஆசைப் பட்டார். ஆதலால் அவர் ஜேம்ஸை நோக்கி, "ஜேம்ஸ், இந்தக் கடல் ஏன் உள்ளது?" என வினவினர்.

"இந்தக் கடல் கடலுக்காக இருக்கிறது" என்ருர் ஜேம்ஸ்.

"இல்லை இந்தக் கடல் நீர் ஆவியாக நிலப்பகுதிகளில் மழை பெய்திடவும், நம் போன்ருேர் கப்பல்களில் செல்லவும்தான் இருக்கிறது. அதாவது நன்மையின் பொருட்டுத்தான் இருக்கிறது" என்று விளக்கினர் பங்ளாஸ்.

"கடல் கொள்ளையடிப்பதற்குக் கூடத்தான் பயன் படுகின்றது. அந்த கடல் பொங்கி எழுந்து நாடுகளை அழிக்கக் கூடத்தான் பயன் படுகின்றது. ஆதலால் நன்மைக் கென்றே எதையும் கூறமுடியாதல்லவா!" என்று பங்ளாஸை மறுத்துரைத்தார் ஜேம்ஸ்.

"இந்த உலகம் நல்ல உலகம்; நன்மைக்கேயானது என்னும் சித்தாந்தத்தில் உமக்கு நம்பிக்கையில்லைபோலும், ஜேம்ஸ்!" என்ருர் ஒரு காதுக்கார பங்ளாஸ்.

"ஆம், அந்தச் சித்தாந்தத்தை நான் முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்ள முடியாது. காரணம் அந்தச் சித்தாந்தம், 'ஆண்டவன் படைப்பில் தீமையேயில்லை; யாவும் நன்மையே' என்ற அடிப்படை மீது எழுந்திருப்பதால்தான்! பேராசியரே! மனிதன் சாதாரணமாகத்தான் பிறந்தான். பிறக்கும்போது வலிவு பெற்றவனுகப்பிறக்கவில்லை. ஆனல் ஓநாய்களைப் போன்று பலமும், மூர்க்கமும் உடையவனுஞன். அதனல்தான் அவன் இயற்கையின் போக்கை மாற்றி அமைத்திருக்கிருன்! ஆண்டவன் தந்ததல்ல, துப்பாக்கிகளும், சொருகு ஈட்டிகளும்! அவற்றை மனிதர்களே செய்தார்கள், ஒருவரை ஒருவர் அழித்துக்கொள்ள! மனிதன் உபயோகப்படுத்துகிற முறையைச் சேர்ந்ததுதான் ஒரு பொருளின் நன்மையும், தீமையும்! உதாரணமாக, சட்டம் குற்றம் செய்தவர்களைத் தண்டிக்கத்தான் உள்ளது. ஆனல் அதே சட்டம், கடன் தொல்லையெ நிர்வாகத் திறமைக் குறைவால் தாங்க முடியாத கடன்காரர்களுக்கு உதவியாக, கடன் கொடுத்தோர்க்குப் பாதகமாக அமையவில்லையா? அதாவது, அந்தக் கடன்காரர்களை கடன் கொடுததோர் தொல்லையிலிருந்து விடுவிக்கவில்லையா? இன்னும் விளக்கினல், அந்த முறையால் (இன்ஸால்வென்ஸி) சட்டம் குற்றவாளிகளைத் (கடன்காரர்களை)தண்டிக்காது நன்மை செய்யவில்லையா! அதுபோன்றதுதான் உலகின் தீமையும் நன்மையும் இன்பமும் துன்பமும்!" என்ருர் ஜேம்ஸ்.

"அர்த்தமுள்ள உதாரணங்களைக் காட்டுகின்ற ஜேம்ஸ்! தனி நபர்கட்கு ஏற்படுகின்ற தீமைகள் சமுதாயத்தின் நன்மைகளாகின்றனவே! அந்த முறை வரவேற்கப் பட வேண்டியதன்ருே!" என்று ஒரு கண் இழந்த பங்ளாஸ் கூறினர்.

இப்படிக் கப்பலில் தத்துவ ஆராய்ச்சி நிகழ்ந்து கொண்டிருந்த சமயம், திடீரென்று ஆகாயமெங்கும் கரு மேகங்கள் சூழ்ந்து கொண்டன! பெரும் புயல் வீசத் தொடங்கியது! கடல் மிகக் கொடூரமாக அலைந்தது! குழவிமுதல் கப்பலிருந்தோர் அனைவரும் கூக்குரலிட்டழுதார்கள்! அந்தோ, கப்பலும் நிலை தடுமாறியது!

(தொடரும்)

## வெளியில் வந்து விட்டனர்!

ஏறக்குறைய 11 மாதங்களாக சிறையில் வாடிய தூத்துக்குடி அறப்போர் வீரர்களான எம். எஸ். சிவசாமி, இராசு. தங்கப்பழம், எஸ். நடராசன், கே. வி. கே. சாமி முதலிய 27 தோழர்களை ஜாமீனில் விடுவிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் 26-ந் தேதி உத்தரவு பிறப்பித்துள்ளது. தோழர்கள் அனைவரும், தூத்துக்குடிக்குள் நுழையக் கூடாதென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனல், நகரசபை உறுப்பினர்களான தங்கப்பழம், நடராசன் ஆகிய இருவரும் நகரசபை கூட்டங்களில் கலந்துகொள்ளலாம் என்று அனுமதி யளிக்கப்பட்டிருக்கிறது. கழகச் சார்பில் தொடரப்பட்ட இந்த வழக்கில் நமக்காக, பாரிஸ்டர் வி. எல். எதிராஜு அவர்களும் வழக்கறிஞர் கே. நாராயணசாமி, சுந்தரம் ஆகியோரும ஆஜரானர்கள். நீண்ட நாட்களுக்குப் பிறகு, நம் அருமைத் தோழர்களை வெளியே காணுகிருேம். மகிழ்கிருேம்.

ஜூன் 15ம் தேதி 'சில்'லென்று வீசும்!

# தென்றல்

## வார ஏடு

★

ஆசிரியர்: கண்ணதாசன்

★ செத்தவர்க ளெல்லாம் சிறந்த கவிகளே!

★ இலக்கியத் திருடர்கள்!

★ அண்ணுவின் பெரும் பயணம்!

★ சிறை கண்டேன் தோழீ நான்!

★ காட்சிக ளெல்லாம் காதலடீ தோழீ!

★ மாஸ்கோவா? காஞ்சிபுரமா?

★ எதிலிருந்து?

இன்னும் பலப்பல! எண்ணப் புதையல்!

★ ★ ★ இதுவரை இப்படியோர் பத்திரிகை வெளிவந்ததில்லை, தமிழில்!

தனி இதழ் 0-2-0 ஆண்டுச் சந்தா ரூ. 6-0-0

விற்பனையாளர் எழுதுக:

— நிர்வாகி —

"தென்றல்"

2, சண்முக முதலி தெரு : சென்னை-14.

# சொர்க்கவாசல்

## சிறப்பு மலர்

★ நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி தன் வாழ்க்கையில் நடந்த மறக்கமுடியாத சம்பவங்களை எழுதியிருக்கிறார்.

★ கவிஞர் கண்ணதாசன் 'சொர்க்கவாசல்--ஒரு புரட்சிக் காவியம்' என்னும் தலைப்பில் ஒரு சிறு காவியமே எழுதியிருக்கிறார்.

★ அறிஞர் அண்ணா, கே. ஆர். ராமசாமி, உடுமலை நாராயணகவி, காசிலிங்கம், காளியப்பா, ராமச்சந்திரன், பத்மினி, அஞ்சலி- இன்னும் பலரின் வாழ்க்கைக் குறிப்புகள் படங்களுடன் இடம் பெறுகின்றன.

★ தலைவர்கள், பேரறிஞர்கள், நடிகர்கள், கவிஞர்கள் இன்னும் கலையார்வமுள்ள அனைவரும் எழுதுகின்றனர்.

★ 'சொர்க்கவாசல்' உருவானதைப் பற்றிய குறிப்புகள், சுவையான நிகழ்ச்சிகள், படத்தைப்பற்றி பத்திரிகைகளின் கருத்துரைகள் இன்னும் பல இடம் பெறுகின்றன.

★ ஏராளமான படங்கள் மலரை அழகு செய்கின்றன.
அழகான - கண்கவரும் மூவர்ண முகப்பு. முழுவதும் கிளேஸ் தாள்.

**48 பக்கங்கள் - விலை அணா எட்டு**

எல்லா ஏஜெண்டுகளும், வியாபாரிகளும் தேவைக்கு எழுதவும்!

பிரதிகள் வி. பி. பி. மூலம்தான் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்குக் குறையாமல் எழுதவேண்டும்.

விவரங்களுக்கு:

## கலைமன்றம்

த. பெ. எண் 275, சென்னை-1.

# இலக்கணப் பகுதி

பாவலர் - வேலாயுதசாமி

## பாடம் 3.

முன் பாடத்தில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களைப் பற்றியும், வல்லெழுத்துக்கள் இருவித ஒலிகளை யடையும் விவரத்தையும் சொன்னோம்.

இப்பாடத்திற் சில எழுத்துக்கள் சொல்லோடு சொல் புணரும்போது தம்நிலை திரிந்து வெவ்வேறெழுத்துக்கள் ஆகியும், ஈரெழுத்துக்கள் சேர்ந்து ஓரெழுத்தாகியும், உள்ள எழுத்துக்களன்றி ஓரெழுத்து மிக்கும், கெடுதல், திரிதல், மிகுதல் ஆகிய விகாரங்க ளடைகின்றன. அவற்றை உதாரணத்தோடு விளக்குவோம்.

நிலைமொழி யீற்றில், தனிக் குறி எடுத்து வரும் **ல்** என்னும் மெய்யெழுத்தானது, வருமொழி முதலில் **ந**கர வினத்தின் எழுத்துக்களோடு புணரும்போது லகர வொற்று, னகர வொற்றாக மாறுவதன்றி, வருமொழி முதலிலுள்ள நகர உயிர்மெய் யெழுத்துக்களையும் தன்னினமாக மாற்றி விடுகிறது.

உதாரணம் :— நிலைமொழி யீற்றில், தனிக் குறிலடுத்து **ல்** என்னுமெய்யெழுத்துள்ள மொழி, புல் — வருமொழி முதலில் **நு** என னும் உயிர்மெய்யெழுத்துள்ள மொழி நுனி — இவ்விரண்டு மொழிகளும் புணரும்போதும்,

புல் + நுனி = புன்னுனி. என்றாகிறது — இதில்,

**புல்** என்பதிலுள்ள **ல்**, **ன்**, ஆகவும், **நுனி** என்பதிலுள்ள **நு**, **னு** ஆகவும் மாறியுள்ளது.

நிலைமொழி யீற்றில், இணைக்குறிலடுத்து **ல்** என்னும் மெய்யெழுத்துள்ள மொழி, விரல்—இம் மொழியானது, முன் சொன்ன நுனி யென்னும் வருமொழியோடு புணரும்போது

விரல் + நுனி = விரனுனி என்றாகிறது. இதில்,

**விரல்** என்பதிலுள்ள **ல்** **நுனி** என்பதிலுள்ள **நு** இரண்டும் சேர்ந்து **னு** என்ற ஓரெழுத்தாக அமைந்துள்ளது — இதே போல்,

நெடிலடுத்து வரும் **ல்**, வருமொழி முதலிலுள்ள **ந**கர வின உயிர்மெய்யெழுத்துக்களோடு புணரும் போதும் **ல்** கெட்டு, **ந**கரம், **ன**கர மாகத் திரிந்து விடுகிறது.

உதாரணம் :— பால் + நுரை = பானுரை.

ஆகவே, தனிக் குறிலடுத்து வரும் **ல்** திரிந்தும், இணைக்குறில், நெடிலடுத்து வரும் **ல்** கெட்டும், வருமொழியோடு புணர்கின்றன வென்பதை யறியவும்.

கருத்தில் நிலைக்கத் தெள்ளத் தெளியத் தெரிய வேண்டி மற்றொருமுறை அவைகளை வரிசையாகக் கீழே படியுங்கள்.

புல் + நுனி = புன்னுனி. விரல் + நுனி = விரனுனி. பால் + நுரை = பானுரை.

இவைகளன்றி ஐயமற விளங்கும் பொருட்டு மற்றும் சில உதாரண மொழிகளைக் கூறுவோம். ( தனிக்குறிலடுத்துவருவன )

வில் + நாண் = வின்னாண்.
நல் + நிலம் = நன்னிலம்.
கொல் + நீர்மை = கொன்னீர்மை ( கொல்லுங் குணம் )
பல் + நூறு = பன்னூறு. ( இணைக் குறிலடுத்து வருவன )
கடல் + நடு = கடனடு
முகில் + நேர் = முகினேர் ( மேகததையொத்த )
அழல் + நோய் = அழனோய் ( காய்ச்சல் )
முதல் + நூல் = முதனூல். ( நெடிலடுத்து வருவன. )
மேல் + நாடு = மேனாடு
நூல் + நிலையம் = நூனிலையம்

குறிப்பு :— நிலைமொழி என்பது, முதலில் இருக்கு மொழி. வருமொழி என்பது, அடுத்து இதனோடு வந்து சேருமொழி. தனிக் குறில் என்பது, ஒரு குறிலெழுத்து. இணைக் குறில் என்பது, இரண்டு குறிலெழுத்துக்கள்.

[ தொடரும் [

# உலக அதிசயங்கள்

M. செல்வராமன்

## 3. டயானா

அரசியல் - பொருளாதாரம் - சமூகம் இவை மூன்றும் ஒவ்வொரு நாட்டிற்கும் தேவையானவை. இந்தத் தேவைகள் அனைத்தும் ஒரு நாட்டிலே முன்னேற்றமும் சீர்திருத்தமும் அடைந்திருக்க வேண்டும். உலகம் முதல் முதல் தோன்றிய நேரத்திலேயே, மேலே குறிப்பிட்ட மூன்றும் வளர ஆரம்பித்துவிடவில்லை. உலகத்திலே நாகரிகம் வளர வளர—அரசியல்—பொருளாதாரம்—சமூகம்—இந்த மூன்றும் முன்னேற்றமும் சீர்திருத்தமும் அடைய ஆரம்பித்தன. இந்த மூன்று தேவைகளும் மூன்று குழந்தைகளாக, உலகம் என்னும் தொட்டிலில் வளர்க்கப்பட்டு வந்த நேரத்திலே, இந்தக் குழந்தைகள் வளர்ந்தால் அநாகரிகம் அழிந்துவிடுமே என்று எண்ணிய, காட்டுமிராண்டித்தனம் படையெடுத்தது. அத்தனை படையெடுப்புக்களையும் சமாளித்துக்கொண்டுதான் உலகத்தின் நாகரிகம், மனிதனுடைய அறிவு என்னும் ஊன்றுகோலை உறுதுணையாகக்கொண்டு வளர்ந்து வருகிறது.

நாகரிகம் குழந்தையாக இருந்த நேரத்திலே — உலகத்தின் ஒரு பகுதியான ஆசியா என்னும் பகுதியிலே ஓர் இனம் வாழ்ந்து வந்தது. அந்த இனத்தவர்கள் வீரம் மிகுந்தவர்கள். அந்த இனத்து மக்கள் பயம என்றால் என்ன என்று கேட்பார்கள். இந்த இனத்திலே பெண்கள் கூட வலிமையும் வீரமும் பெற்றிருந்தார்கள். பெண்கள் வேட்டையாடுவார்கள்—வேட்டையாடி வந்த மிருகங்களின் தோல்களை சந்தைக் கடைக்கு சென்று விற்பார்கள். இந்தப் பெண்களின் தீரத்தையும் வீரத்தையும் எதிர்த்து நிற்க ஆண்கள் கூட பயப்பட்டார்கள். அந்த அளவுக்கு ஆற்றலுடையவர்கள் அந்தப் பெண்கள். அத்துடன் அந்தப் பெண்கள் நிலத்தை பண்படுத்தி உழுவார்கள். வித்துக்களை விதைப்பார்கள். களை எடுத்து எரு போட்டு பயிர் செய்வார்கள். அறுவடை செய்பவர்களும் அவர்களே! இந்தத் திறமை படைத்த பெண்களை வரலாற்றிலே அமெஸான்ஸ் (Amazons) என்று அழைப்பார்கள். வீரம் என்பதை தன்னகத்தே கொண்ட இந்தப் பெண்களின் தீரச் செயல்களைப்பற்றி வரலாறு சொல்லும் கதைகள் ஏராளம்.

சாதாரண ஓலைகளையும், காய்ந்து போன சருகுகளையும், வைக்கோல்களையும் கொண்டு தங்களுக்கு என்று சிறு சிறு குடிசைகள் கட்டிக் கொண்டார்கள். முதன் முதலிலே வேயப்பட்ட இந்தக் குடிசைகள் அடங்கிய இடம்தான் பிறகு எபிஸஸ் (Aphesus) என்ற பெயர் பெற்ற நகரமாக மாறிவிட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். கிரேக்கர்களின் புராணத்திலே—இருக்கின்ற கடவுள்கள் ஏராளம். அவர்களின் கதைகளோ படிக்கப் படிக்க சுவை தரும். ஆனால், அத்தனையும் நம்பத்தகாதவை. நம்பத்தகாதவை என்று நாமா சொல்லுகிறோம்? அந்த நாட்டவர்களே சொல்லுகிறார்கள். சொல்வது மட்டுமல்ல—அந்தக் கடவுள்கள் எல்லாம் மாஜிக் கடவுள்களாக ஆக்கிவிட்டார்கள் இன்று. அந்தக் கிரேக்கர்களின் இன்றைய மாஜிக் கடவுள்களிலே ஒன்றின் பெயர்தான் டயானா (Diana) இஃதோர் பெண் கடவுள். இந்த டயானா என்னும் பெண் கடவுளை முதல் முதலிலே வணங்கித் தொழுதவர்களும்—உண்டாக்கியவர்களும் அந்த அமெஸான்ஸ் என்கிற பெண்கள் கூட்டம்தான். அந்த வீரப் பெண்கள் தங்கள் சொந்தக் கடவுளாக நினைத்தார்கள். சந்திரனைத்தான் அவர்கள் டயானா என்று அழைத்தார்கள். ஆபத்திற்கு உதவும் ஆண்டவனாக நினைத்தார்கள். திருவிழாக்கள் பல செய்து மகிழ்ந்தார்கள், வேட்டைக்கு உதவி செய்யும் கடவுள் என்றும்—காட்டுக்கும் காட்டிலுள்ள மிருகங்களுக்கும் கூட அதுதான் கடவுள் என்று நம்பினார்கள்.

இத்தகைய பெயர் பெற்ற கடவுளான டயானாவிற்கு அந்தப் பெண்கள் காட்டிலே தங்கவும் வாழவும் ஓர் இடத்தை ஏற்படுத்தினார்கள். அந்தக் காலத்திலே கோயில்களே கிடையாது. கோயில்களைப் பற்றிய எண்ணமே அந்தக் காலத்து மக்களுக்கு ஏற்பட்டதில்லை. கடவுளர்களுக்கு கோயில் எழுப்புவது என்பது பிற்காலத்திலே ஏற்பட்டது. ஆண்டுக்கொரு முறை டயானாவிற்கு ஒரு சிறந்த திருவிழா நடைபெறும். டயானாவிற்கு நடக்கும் திருவிழா என்றால் பெண்கள் அத்தனை பேருக்குமே ஒரு மகிழ்ச்சி. டயானாவின் இருப்பிடத்திற்கு செல்லும் வழியிலே — அந்தக் கடவுளுக்கு விருப்பமான மலரை வழியிலே தூவிக்கொண்டே செல்லுவார்கள். டயானாவிற்கு நடக்கும் ஆராதனைகளும், பூசைகளும் கணக்கிலடங்கா.

எத்தனையோ ஆண்டுகள் கழிந்தன. காலம் வேகமாக சென்றுக்கொண்டே இருக்கிறது. என்னோடு யாராவது போட்டிபோட முடியுமா? என்ற கேள்வியைக் கேட்டுக்கொண்டே ஓடிக் கொண்டிருக்கிறது காலம். அதோடு நானும் வந்துவிட்டேன் என்று பதில் சொல்லிக்கொண்டே ஓடுகிறது நாகரிகம். ஆண்டுகள் ஒன்றுபின் ஒன்று ஓட நாகரிகம சிறுகச் சிறுக வளர்ந்து முற்ற ஆரம்பித்தது. அமெஸான்ஸ் பெண்களால் கட்டப்பட்ட அந்தச் சிறிய கிராமம் பெரிய நகரமாக மாறிவிட்டது. அந்த நகரத்திலே வாழ்ந்த ஒரு மனிதன் டயானா என்னும் கடவுளைப் பற்றி எண்ணிக்கொண்டிருந்தான். "டயானா என்னும் கடவுளுக்கு, என்றும் அழியா

மல் இருக்க ஒரு கோயில் இல்லையே—இப்பொழுது ஒரு சாதாரணமான அழியும் குடிசை ஒன்றில்தானே வீற்றிருக்கிறாள்". என்று எண்ணி ஏங்கினான். டயானாவிற்கு ஒரு அழகான கோயில் சமைக்கவேண்டும் என்று நினைத்தான்.

டயானாவைப்பற்றியும்-அவளுக்கு கோயில் அமைக்க வேண்டும் என்பதைப் பற்றியும் எண்ணிக்கொண்டிருந்த அந்த மனிதன் அப்படியே அயர்ந்து தூங்கிவிட்டான். அந்தத் துக்கத்திலே ஓர் அருமையான கனவு கண்டான்.

"ஓர் அழகான கோயில்-அந்தக் கோயில் முழுதும் சலவைக் கற்களாலேயே இழைக்கவேண்டும். அப்படி இழைக்கப்பட்ட அந்தக் கோயில் அடர்ந்த காட்டின் இடையிலே அருமையான நிழலில் அமைந்திருக்கவேண்டும். இதுவரை எந்தக் கடவுளருக்குமே எழுப்பாத ஒரு எழில் ஓவியமாக இருக்க வேண்டும். என்றெல்லாம் அவன் எண்ணிக்கொண்டிருந்த எண்ணங்களை கனவிலே கண்டான். கனவை நனவாக்க பாடுபட்டான். அவன் ஒருவனே எத்தனையோ ஆண்டுகள் உழைத்தான். அவன் நினைத்தபடியே ஓர் அழகான கோயிலை சமைத்தான் இந்த அழகின் அதிசயத்தை சுற்றுப் பக்கத்து ஊரிலிருந்தவர்கள் எல்லாம் கேள்விப்பட்டு வந்து பார்த்தார்கள். பார்த்தவர்கள் எல்லாம் வியந்தார்கள். இதுவரை, இதற்கு முன் யாருமே அதைப்போல் ஒன்றை பார்க்காத காரணத்தால், அழகு டயானாவுக்கு தகுந்த கோயில், எந்த அழகுக் கோயிலுக்குத் தகுந்த டயானா என்று பேசிக்கொண்டார்கள், மக்கள்.

எத்தனையோ ஆண்டுகளாக மக்கள், இந்தக் கோயிலுக்கு சென்றுதான் டயானாவை வணங்கினார்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு எதிர்பாராத விபத்தால், இந்த அழகிய கோயில் தீவிபத்தால் அழிக்கப்பட்டது. கோயில் தீவிபத்தால் அழிந்த பிறகு வேறொரு கோயில் எழுப்ப அந்த நாட்டு மக்கள் திட்டம் போட்டார்கள். டயானாவிற்கு ஓர் அழகிய கோயிலை சமைக்க, மக்கள் முயற்சி எடுத்துக்கொண்டார்கள். முதல் முதலில்கோயில் கட்டியதற்கும், அது தீவிபத்தால் அழிந்ததற்கும், இடைப்பட்ட நேரத்திலே—ஓடி மறைந்த ஆண்டுகள் ஏராளம். அந்த ஆண்டுகளிலே எல்லாம் மக்கள் எவ்வளவோ நாகரிகத்தை, காலம் என்னும் சிற்பியினிடம் இருந்து கற்றுக் கொண்டார்கள். அந்த மக்கள் கற்றுக்கொண்ட கலைகள் எத்தனை எத்தனையோ! கட்டிடக் கலை—சிற்பக் கலை—மற்றும் பலவிதமான துறைகளிலே மக்களுடைய அறிவு வளர்ந்து, வளம் பெற்றிருந்தது.

நாகரிகம் வளர்ந்த அந்த நாட்டு மக்கள் டயானாவிற்கு மற்றொரு கோயில் எழுப்பினார்கள். இந்தக் கோயில் முன்பு இருந்ததைவிடப் பெரியது. முன்பு இருந்தக் கோயிலைவிட, இரண்டாவது கட்டிய கோயில், மிகுந்த அழகுடன் அமைந்திருந்தது. அந்த நேரத்திலே எபிஸஸ் என்ற நகரத்திலேயே, டயானாவிற்கு எழுப்பிய கோயிலைப் போன்ற அந்த அளவுக்கு பெரிய கட்டிடமே கிடையாது. மனித அறிவு வளர வளர அவனால் சமைக்கப்படுகின்ற பொருள்களின் வனப்பும் வளர்ந்துக்கொண்டே இருக்கிறது. இதற்கு ஒரு சாட்சிதான் எபிஸஸ் நகரத்து மக்களால் இரண்டாவது தடவை எழுப்பப்பட்ட டயானாவின் கோயில். மக்கள் மந்தை மந்தையாகச் சென்று இந்தக் கோயிலில் டயானாவை தரிசித்தார்கள்.

இரண்டாவது தடவைக் கட்டிய இந்தக் கோயில் முன்னூறு ஆண்டுகள் வாழ்ந்தது. முன்னூறு ஆண்டுகளில் அதனுடைய அழகு சிறிது கூட குறையவில்லை. என்று பார்த்தாலும் அந்த அழகிய கோயில் அன்றைக்குத்தான் கட்டி முடித்தது போலத் தோன்றும். முன்னூறு ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் கோயிலுக்கு என்ன நேர்ந்தது என்று கேட்கிறீர்களா? முன்பு, இயற்கை பொறாமைப்பட்டு தனது ஐம்பெரும் படைகளிலே ஒன்றான, தீயென்னும் படையை அனுப்பி, தீய்த்துவிட்டது போல, அதுதான் இரண்டாவது தடவை கட்டியதையும் சிதைத்து விட்டிருக்கும் என்று நீங்கள் நினைப்பீர்கள்?-இல்லை-இயற்கை சதி செய்யவில்லை, ஆறு அறிவு படைத்த மனிதர் கூட்டத்திலே சேர்ந்த ஒருவன் தான்—அதன்—அந்த அழகுக் கட்டிடத்தின் அழிவுக்குக் காரணம். ஏன் அந்த மனிதன் அழித்தான்? அவனுக்கும் கடவுள் டயானாவுக்கும் தகராறு? இல்லை—அவன் அந்த எபிஸஸ் நகரத்திற்கும், நாட்டிற்கும் பகைவனா—அதுவும் இல்லை—இந்த அநாகரிகச் செயல் புரிந்த அநாகரிக மனிதன் யார்? அவன் பெயர் என்ன? என்பதை யெல்லாம் வரலாறு படம் பிடித்துக்



டயானாவின் கோயில் (The Temple Of Diana at Ephesus)

காட்டுகிறது. அந்த அநாகரிகமான வனின் பெயர் ஹெரோஸ் ட்ரேடஸாம் (Aeros Tratus). இவன் ஏன் அந்த அழகிய கட்டிடததை அழித்தான்? சரித்திரத்திலே இடம் பெற லாம் என்று அழித்துவிட்டானும இந்த ஹெரோஸ்ட்ரேடஸ். இந்த அரிய பெயர் பெற்ற கட்டிடத்தை அழித்தால், தன்னுடைய பெயரை சரித்திரத்திலே பொன்னெழுத்துக் களால் பொறித்துவிடலாம் என்று நினைத்தான் போலும் இந்த மதி கெட்ட மடையன். அறிவு என்கிற அழகிய பளிங்குக் கற்களாலேயே இழைக்கப்பட்ட அழகிய கட்டிட மான சாக்ரடீஸ் மீது குற்றம சாட்டி அழித்த அனிடஸ், மெலிடஸ், லைகோன், என்ற இந்த மூன்று மடையர்களும் கூட இதைத்தான் நினைத்திருப்பார்கள். பெயர் பெற்ற ஒன்றை அழித்துவிட்டால் தான் பெயர் பெற்றுவிடலாம் என்று நினைக்கும் பேதைகள் உலகத்தில் பலர்.

ஹெரோஸ்ட்ரேடஸ், அந்த அருமையான கட்டிடத்தை அழித்த நேரத்திலே உள்ளத்திலே உரம் மிகுந்த ஒருவன் அழிந்துக்கொண்டிருக்கும் கோயிலுக்குள்ளே சென்று, டயானாவின் சிலையை மட்டும் அழியாமல் பாதுகாப்போடு எடுத்துக்கொண்டு வந்துவிட்டான். முன்னாள், அழகும், பொலிவும் பெருமையும் பெற்றிருந்த, அந்த அழகிய கட்டிடம், மறுநாள், ஒரு மனிதனின் குறுகிய நோக்கத்தாலும், குருட்டுப் பார்வையாலும், மண்ணோடு மண்ணாயிற்று. "இந்த உலகத்திலே பிறந்தவுடனே அழிவு என்று ஒன்று நிச்சயமாக இருக்கிறது. இந்த உலகத்து மனிதர்கள் எல்லாம் அழிந்துக் கொண்டுதா னிருக்கிறார்கள். ஏன் இந்த உலகமே ஒரு நாளைக்கு அழியத் தானே போகிறது" என்று பேசுவதுபோல தோன்றியது, அழிந்த அந்தக் கட்டிடத்தின் நிழல்.

இரண்டாவது தடவையும் டயானாவின் கோயில் அழிக்கப்பட்ட காரணத்தாலே, டயானாவின் கோபம், மக்களின மேல் திரும்பும், டயானா, ஏதாவது தீங்கு செய்வாள் என்று அந்த எபிஸஸ் நகரத்து மக்கள் பயந்தார்கள், டயானாவிற்கு கோபம் வரவொட்டாமல் தடுக்க, மற்றொரு அழகிய ஒரு கோயிலை சீக்கிரம் சமைத்துவிட வேண்டும் என்று எண்ணினார்கள். ஓர் அருமையான கோயில் சமைப்பதற்காக, எபிஸஸில் வாழ்ந்த பெண்கள் எல்லோரும், தங்கள் உடலிலே அணிந்திருந்த நகைகளை யெல்லாம் காணிக்கையாக தந்தார்கள். டயானாவிற்கு கோயில் கட்ட, ஏராளமாக பொன்னும பொருளும் குவிந்தது. அந்த நாட்டுமக்கள் மட்டுமா, காணிக்கை செலுத்தினார்கள். மற்ற நாட்டு மன்னர்கள் கூட, கோயில் கட்ட ஏராளமாக நன்கொடைகள்

# அவள்?

தமிழரசன்

காதலில்லை ஆதலினால்
கட்டழகியை விட்டுவிடென்
றோதுகின்றாய் வாழியநீ தோழா—அலை
மோதுகின்ற நெஞ்சொலியைக் கேளாய்! [1]

நெஞ்சமென்னும் மஞ்சத்திலே
நீலமலர்க் கண்காட்டிக்
கொஞ்சிவிளையாடுகின்றாள் வஞ்சி—காதல்
மிஞ்சியுளம் வஞ்சியின்பால் கெஞ்சும் [2]

சன்னலிலே ஓர்நாளில்
தன்னந்தனி வேளையிலே
என்னையவள் ஏன்விழுங்கப் பார்த்தாள்—காதல்
இல்லையென்றா கையிரண்டும் சேர்த்தாள்? [3]

கோவிலுக்கு வந்த அன்று
கூட்டத்திலே என்தோளை
மேவியவள் ஏன் உரசி நின்றாள்—இந்த
மேனியிலே என்னசுகம் கண்டாள்! [4]

வீதியிலே போம்போது
வேறொருவர் காணாமல்
மாதரசி ஏன்பார்த்துச் சிரித்தாள்—மெய்க்
காதலில்லை என்றா தேனிதழை விரித்தாள்? [5]

வீட்டினிலே பாட்டொலியைக்
கேட்டொருநாள் போகையிலே
பாட்டையவள் ஏன்நிறுத்த வேண்டும்—எனைப்
பார்த்தவுடன் நாணியோட வேண்டும் [6]

நேரினிலே பேச எண்ணிக்
காரிகைக்குத் தூதனுப்ப
ஊரில்லை பெற்றோர்கள் என்றாள்—காதல்
சாகவில்லை என்றணைத்து நின்றாள் [7]

வட்டநிலாத் தாமரையில்
கொட்டுகின்ற தேனமுதை
அட்டியின்றிக் கொள்கவெனச் சொல்லாள்—நான்
பற்றிஇதழ் முத்திடினும் தள்ளாள்! [8]

அத்தைமகள் தான்எனினும்
எத்தனைநாள் காத்திருப்பேன்?
சித்தமெல்லாம் வேகுமுன்னர் வாவா—காதல்
தீயணைக்கும் காவிரியே வா! வா! [9]

தந்துதவினர்கள். பொருள் சேர்ந்து விட்டது, கோயில் கட்ட ஆரம்பிக்க வேண்டியதுதான் பாக்கி.

பெயர் பெற்ற கலைஞர்களும், கட்டிட நிபுணர்களெல்லாம் ஒன்று கூடி திட்டம் போட்டார்கள். திட்டம்போட்ட அந்த அழகிய கோயிலைக்கட்ட ஆரம்பித்தார்கள், கலைஞர்கள். டயானுவின் அந்த அழகிய கோயிலுக்கு, பளிங்கு கற்களாலேயே படிக்கற்களை அமைத்தார்கள். படிக்கற்களையெல்லாம் தாண்டி மேலே சென்றால், பெரிய, பெரிய, தூண்கள், அந்தக் கோயிலின் கூரையை தாங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பெரும் பெரும், தூண்கள் எல்லாம், மற்ற நாட்டு மன்னர்கள், கோயிலுக்கென்று அளித்த பரிசுகள். பல தூண்கள், அழகாக செதுக்கப்பட்டிருந்தன. அந்த அழகிய தூண்களில், அழகை அள்ளி வீசும, கற்பனை சக்தி ததும்பியிருந்தது. சிறு தூண்கள், கண்ணடி போன்று பளபள வென்று, செதுக்கப்பட்டிருந்தது. கோயிலின் சுவர்களிலே எல்லாம், சிற்பங்கள் ஏராளமாக செதுக்கப்பட்டிருந்தன. சலவைக் கற்களால், இழைக்கப்பட்ட இடங்களுக்கு பக்கத்திலே யெல்லாம், வர்ணம் தீட்டப்பட்ட, ஓடுகளைக் கொண்டு மூடியிருந்தார்கள். அந்தக் கோயிலிலே யிருந்த ஒவ்வொரு அழகிய பொருளும, தங்களுடைய அழகு போட்டியிலே, வெற்றி தோல்வி காண முடியாமல் திகைத்துக் கொண்டிருந்ன. மேலே சொல்லிய பெரும் பெரும் தூண்களையும், சலவைக் கற்களாலேயே இழைக்கப்பட்ட பாதையையும் தாண்டிச் சென்றால் டயானுவின் சிலை-அந்த அழகிய உருவம்—உயிருள்ள பருவ மங்கையின் எழிலைப் பார்ப்பது போல இருக்கும். அந்த நாட்டு மக்கள் அழகுக்கு கடவுளாக, வீனஸை (Venus) நினைத்தார்கள். அந்த வீனசையே அழகில் தோற்கடிப்பதுபோல இருந்தது டயானுவின் உருவம். உலக வரலாற்றிலேயே வழிபாடு செய்வதற்காக, இதைப் போன்ற அழகும், பொலிவும், வாய்ந்த ஒரு கட்டிடம் எந்த நாட்டவரும் கட்டவில்லை.

இந்த அழகிய கட்டிடத்தின் பெருமை, உலகம் முழுதும் பரவியது. இதைப் பார்த்தவர்கள் எல்லோரும், இது ஓர் அதிசயம் என்று புகழ ஆரம்பித்தார்கள். டயானுவுக்காக மூன்றுவது தடவை கட்டிய இந்தக் கோயில் பழைய ஏழு அதிசயங்களிலே ஒன்று.

○

விஞ்ஞானக் கட்டுரை

# இறப்பது 'ஏன்?'

பா. கலைச்செழியன்

"மனிதன் ஏன் இறந்து விடுகிறான்?" இக் கேள்வியை நம் நாட்டு மக்களிடம் கேட்டுப் பாருங்கள். உடனேகூறிவிடுவார்கள் எமன் தன் பாசக் கயிற்றை வீசி உயிரை அபகரித்துச் செல்வதாகவும், ஒவ்வொருவரின் ஆயுட்காலம்இவ்வளவுதான் என்று பிரம்மாவிடம் கணக்கு இருப்பதாகவும் — அக்கணக்கின்படி மனிதனது உயிரை அபகரித்துச் செல்வதாகவும் கூறி கதை அளக்க ஆரம்பித்து விடுவார்கள்!

அவனுக்கு மட்டும் எப்படித் தெரியும்? மதவாதிகள் கூறுவதை கூறுகிறான். பரிதாபப்பட வேண்டிய நிலை! மதவாதிகள் கூறும் கூற்றுக்களைக் கேட்டு கூறுவர். ஆனால் இதே கேள்வியை—மனிதனும் இன்னும் பிற உயிர்களும் அழிவது ஏன் என்ற கேள்வியை விஞ்ஞானிகளிடம் நாம கேட்போம். விஞ்ஞானிகள் மரணத்தை வெல்வதற்குஎன்ன முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை ஓரளவு இக்கட்டுரை வாயிலாக நாம் காணுவோம்.

0 0 0

உலகத்தின் கண் உள்ள எப்பொருளும் அழிவதில்லை. பொருள்களின் உருவ அமைப்பு சூழ்நிலைகளின் காரணமாக வேண்டுமாயின் மாறி விடலாம். இது மறுக்கமுடியாத உண்மையாகும். இந்த உண்மையான தத்துவத்தின் அடிப்படையின் மீது தான் மெட்டிரியலீஸம் (Materialism) எனும் இயற் பொருள் வாதக் கொள்கை உருவாக்கப் பட்டுள்ளது. உதாரணமாக ஒருவன் சிகெரட்டை குடிக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். குடிக்கும்நேரத்தில் சிகரெட் எனும் பொருளானது புகையாக மாறி காற்றினூடே கலந்து விடுகிறது. இங்கு சிகெரெட்டானது அழியப் பட்டாலும் அதாவது மறையப் பட்டாலும் வேறு ஒரு உருவில் மறைந்து விடுகிறது. இங்கு சிகெரெட்டானது மறைந்து விடுகிறது, வேறு ஒரு பொருளாக—ரூபமாகவோ அலலது அருவ நிலையிலோ மறைந்து விடுகிறது. இதுபோலவே ஒவ்வொன்றும் சூழ் நிலைகளுக்கேற்ப மாறிவிடுகிறது. ஆகவே உலகத்தின் கண் உள்ள எப்போருளும் அழியாமல் சூழ் நிலைகளின் விளைவால் வேறு போருளாகவோ அல்லது அருவ நிலையிலோ இயங்கிக் கோண்டிருக்கிறது. அழியவில்லை. ஆனல் மதவாதிகளோ மாய உலகமென்றும், எல்லாம் அழியக் கூடியவைகளென்றும் கூறிக் கொண்டு ஏமாற்றிக் கொண்டு வருகின்றனர் தத்துவம் எனும் பெயரால்! ஆகவே மேற் கூறிய காரணங்களிலிருந்து மனிதனும் மற்ற உயிர்களும் இறந்து விடுவதை நோக்கும்போது உருவங்களின் நிலை மாறுபடுகிறதேயன்றி எமனே அல்லது கடவுளின் கட்டளைப்படி மரணம் ஏற்படுகிறது என கூறவும் இடமின்றி இயற்கையின் விளைவே என்பதையறிந்து கொள்ளலாம்.

மேலும் விஞ்ஞானிகள் இறப்பது என்பது இயற்கை விதியல்ல என்பதை உயிர் நூலார் தக்க ஆதாரத்துடன் எடுத்துக் காட்டுகின்றனர். ஏனெனில் உலகின்கண் உள்ள சில உயிர்வகைகள் இறவாத நிலையிலுள்ளன. உதாரணமாகஅமீபா, காலான், புரோட்டோஸாஎனும் ஒற்றைசெல் உயிரினங்களுக்கு அழிவு என்பது இயற்கையாக உள்ளதல்ல. கொன்று அழித்து விடலாமேயன்றி இயற்கையாக அவைகள் மடிவதில்லை. மேலும் இவைகளுக்கு ஆண்—பெண் என்ற பேதங்களுமில்லை. ஒரு உயிர் இரண்டாக பிரிந்து, இரண்டு மூன்றாக மாறி—இவ்விதமே அவைகள் தம் இனத்தைவளர்த்து கொண்டேபோகின்றன! உட்ரல்(Woodrull) எனும்

அறிஞர் புரோட்டோஸா எனும் ஒற்றை செல் உயிரினத்தை ஆராய்ந்தபோது ஒரு புரோட்டோஸா முப்பத்தேழு ஆண்டுகளில் 20000 புரோட்டோஸாக்களாக பிரிந்து போயினவாம்!

ஒவ்வொரு உயிரினமும் பல நுண்ணறைகள் (Cell) செல்களால் கட்டப் பட்டனவாகும். செல் என்பது உயிர் வாழ்வதற்கு அவசியமான சத்துப் பொருள்களாகும். ஒற்றை செல் உயிரிலிருந்து பல கோடி செல்களால ஆக்கப்பட்ட உயிர் வகைகள் இருக்கின்றன. மேற் கூறப்பட்ட ஒற்றை செல் உயிரினங்களின் அடிப்படையிலேயே இந்த உலகின் கண் உள்ள உயிரினங்கள் தோன்றியவைகளாகும். சில வகைப்பட்ட புழு இனங்களை இரண்டாக நாம் வெட்டி விட்டால்—கத்திரிக்கப்பட்ட இரு துண்டுகளும் வெவ்வேறு உயிரினமாக மாறிவிடுகிறது. மாறியதுடன் மட்டுமின்றி உயிருடன் வாழவும் செய்கிறது. ஆகவே உயிரினங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் இறந்து தான் தீரவேண்டுமென்ற நியதியுமின்றி—ஆண் பெண் உறவு இன்றியே சூழ்நிலைகளுக்கேற்ப இயற்கையில் உயிர் வர்க்கங்கள் வாழுகின்றன என்பது தெரிகிறது.

இறப்புஎன்பது இயற்கையின் விதி அல்லவாயினும் ஜீவராசிகள் மரண நிலையெய்த நேரிடுகிறதே ஏன் என்று கேட்கத் தோன்றும். உயிர்நூல் ஆராய்ச்சியாளர் அதற்குஎன்ன கூறுகின்றனர் என்பதை நோக்குவோம்.

உயிரின வாழ்வில் பலவகை பருவங்கள் உள. அவைகளில் முதுமைப் பருவம் ஒன்று. முதுமை பருவம் ஏற்படுவதை மட்டும் தடுத்து நிறுத்தி விட்டால் மரணபயம் நிச்சயம் இல்லை யென்றே கூறிவிடலாம். அமெரிக்காவில் ஒரு ஆராய்ச்சியாளர் இளம் பிராயத்தையுடைய மனிதக் குரங்கின் கழுத்திலிருக்கும் (Thyroid Gland) தைராய் கிளாண்ட்ஸ் எனும் நெஞ்சுப் பெருஞ் சுரப்பியையும் (Parathyroid Gland) பராதைராய் கிளாண்ட்ஸ் எனும் புரிசைச் சுரப்பியையும் (சுரப்பி என்பது ரசம் கக்கும் சதைக் கோளங்களாகும்) கத்தரித்து எடுத்து 60-வயதுடைய வயோதிகர் ஒருவரின் கழுத்தில் 'ஆபரேஷன்' செய்து ஒட்டுப்போட்டுப் பார்த்தார். அவ்விதம் அந்த சதைக் கோளங்களை 'ஒட்டுப்' போட்டதில் அந்த வயோதிகர் மேனும் பல ஆண்டுகள் வாழ்ந்ததாக அறிந்தார்.

முதுமைப் பருவத்தை தடுப்பதற்கு வழி என்ன வென்பதைப் பற்றி மேலும் ஆராய்ச்சிகள் மேலைநாடுகளில் நடை பெற்றுக் கொண்டு வருகின்றன. முதுமைப் பருவம் எய்தாமலிருக்க முடியாதா? என்ற கேள்வி நம் உள்ளத்தில் எழாமலிருக்க முடியாது. வளர்ச்சி நின்ற பிறகே முதுமையை நாம் அடைகிறோம். வளர்ச்சியைப் பற்றிய விஞ்ஞானிகள் நடத்திய ஆராய்ச்சிகளிலிருந்து சில உண்மைகள் தெரியலாயின. 1912-ம் ஆண்டில் "ராகபெல்லர்", ஆராய்ச்சிச் சாலையில் (Alexis Carrel) அலெக்ஸிஸ் கோல் என்ற அறிஞர் கோழி முட்டையிலுள்ள கருவின் இருதயத்தின் தாதுவை எடுத்து ஒரு கண்ணாடி புட்டியில் அது வளர்வதற்குரிய முறையில் வைத்தார். அத் தாதுப் பொருள் வளர்வதற்கான சத்துள்ள உணவுகளை கொடுத்து வந்தார். 1946-வது ஆண்டிலும் அத்தாதுப் பொருள் உயிருடன் வளர்ந்து வந்தது. அந்த மூலப் பொருள் கோழிக் குஞ்சாக வெளியில் வளர்ந்து இருந்தால் சுமார் இருபது ஆண்டுகளே உயிருடனிருந்திருக்கும். ஆனல் அந்த உயிரானது 34 ஆண்டுகள் வாழ்ந்து வந்துள்ளது. கோல் அந்தச் சோதனையைத் தொடர்ந்து நடத்தியிருந்தால் அந்த உயிர் மேலும்வாழ்ந்திருக்கும். இந்த சோதனையின் மூலம் எந்த உயிர்ப்பொருளும் வளர்ச்சிக்குரிய வாய்ப்பு நேரின் வயோதிகமடையாமல் இளமையுடன் வாழமுடியுமென்று தெரிய வருகிறது. வயோதிகத்தை தடுப்பதற்கு ஒரு சில ஆராய்ச்சியாளர் வேறு விதமான வழிகளையும் பின்பற்றலாமென கருதுகின்றனர். மூலப்பொருள்களான செல்கள் அழிவதாலும்—வாழ்வில் தன்னம்பிக்கையற்று மன உறுதி குலைந்து உற்சாகம் குறைந்து போவதாலும் வயோதிகம் ஏற்படலாம். வயிற்றில் உள்ள பெருங்குடலிலிருந்து சில நச்சுப் பொருள்கள் வெளியேறுவது தான் முதுமையை பெறச் செய்கிறதென்றும் ஆகவே இக்குடலை ஆபரேஷன் செய்து விடுவதன் மூலம் வயோதிகத் தன்மை வராமல் செய்து விடலா மென்றும் கருதுகின்றனர்.

உடலிலுள்ள ஒவ்வொரு அவயவமும் தன் ஆக்கத்திற்காக வேலை செய்துக் கொண்டே இருக்கிறது. தன் ஆற்றலை அதிகரித்துக் கொள்வதற்கு எலும்புங்கூட அதற்கு ஏற்ற உணவை எடுத்துக் கொள்கிறது. இருப்பினும் நாட்கள் அதிகமாக அதிகமாக தன் ஆற்றலை ஒவ்வொரு அவயவமும் இழந்து கொண்டே இருக்க நேரிடுகிறது. தசை இறுக்கங்கள் தளர்ச்சியடைந்தும்—ரத்தக் குழாய்கள் இறுகியும் மற்றைய பாகங்களும் பழுதடைந்து போய் விடுகின்றன. ஆகவே இளமையிலேயே ஒவ்வொரு பாகத்தையும் பழுதடையாத முன்பே அவைகளை புதுபிக்கச்செய்ய வேண்டும். ஆனல் இதற்கு இரண்டு தடைகள் ஏற்பட்டு விடுகின்றன.

நம் உடலில்'ஒரு ரசயானச் சாலை ஒன்று உள்ளது. அது நம் உடலின் மூலப் பொருள்களுக்கு மிகவும் அவசியமான சத்துக்களை பதனிட்டு சேகரித்துத் தருகிறது. இந்த ரசாயனச் சாலை பழுதடைந்திருக்கலாம். இரண்டாவதாக உடற் கருவிகள் சத்துக்களை எடுத்துக் கொள்ளும் ஆற்றல் சிறிது குறைந்திருக்கலாம். உடலின் மூலப் பொருள்களான செல்களின் தேய்ந்து போகும் நிலையே முதற் குறிப்பிட்ட ரசாயனச் சாலை பழுதடைவதற்குக் காரணமாகும். கழிவுப் பொருள்கள் வெளியாகாமல் அடைத்துக்கொண்டு

(24-ம் பக்கம் பார்க்க)


ஊடுருவி எழுதியவை

| | |
|---|---|
| 1. உலகைத் திருத்திய உத்தமர்கள் | 1 0 |
| 2. ஒளி விளக்குகள் | 1 0 |
| 3. நாநா | 1 0 |
| 4. மாஜி கடவுள்கள் | 1 0 |
| 5. அரசாங்கம் | 1 0 |
| 6. கலிங்கப்போர் | 1 0 |
| 7. சீனத்துச்சிங்கம் | 1 0 |
| 8. தொழிலாளர்கள் | 1 0 |
| 9. நெப்போலியன் | 1 0 |

விபரங்களுக்கு :
கலைமன்றம் - சென்னை-1

# நாவலைப்போல

விருதை ந. இராமசாமி

வாழ்க்கை என்பது மளிகைக் கடையின் கணக்குப் புத்தகத்தைப் போலல்லாமல் ஒரு நாவலைப்போல இருக்குமானால்......? இம் மாதிரி பொதுவாக எல்லாருமே ஆசைப்படுவதில்லை.

வாழ்வில் இன்பம் தோன்றலாம் தவழ்ந்து திரியலாம் என்று யாவரும் எண்ணுவது இயல்பு. ஆனால் நாவலொன்றில் நிகழும் பல்வேறு விதமான பாவங்களையும் நேரில் காண—படித்தறிய பழகியிருக்கிறோமேயொழிய அவைகள் அனைத்தும் நமது வாழ்விலும் நிகழவேண்டுமென விரும்புபவர் இருக்க முடியாது.

காதலனைப் பிரிந்து கதறி அழும் காதலியின் துயரக் கட்டம்—வறுமையினால் வாடி வதங்கித் துடிக்கும் காட்சி—குரோதம் தலை விரித்தாடி கொலை நிகழும் நிலை—ஆகிய இவை நாவல்களில் படிக்க--நாடக சினிமா அரங்கங்களில் பார்க்க ஆர்வம் பிறக்கலாம். வாழ்க்கையில் அனுபவித்து அறிந்துகொள்ள நாட்டம் இருக்காது.

இன்பத்தையே எதிர் நோக்கி வாழ்வை நடாத்திச் செல்லும் மனித இனம் துன்பத்தின் சாயலைக் காண்பதற்குக்கூட அஞ்சுவது இயற்கையே. ஆகவேதான் அனேகருடைய வாழ்க்கை மளிகைக் கடையின் கணக்கு நூலாகவே காட்சி தருகின்றன. ஏதோ சம்பாதிக்கிறோம் உண்ணுகிறோம்—உறங்குகிறோம்—சந்ததி விருத்தி செய்கிறோம் என்ற அளவில் ஜீவனற்ற வாழ்வு நடத்துவோர் தொகை ஏராளம்.

ஒரு சிலருடைய வாழ்வுமட்டுமே சுவையான நாவலைப்போல அமைவது உண்டு.

மனித வாழ்வை நாவலாக்கி உணர்ச்சி பாவங்களை ஊட்டுவதற்கு மிக மிக அவசியமானது காதல்! இது உடலோடு பிறந்து வளர்ந்துள்ள உணர்ச்சி—உள்ளத்தோடு இணைந்திருக்கும் ஊட்டம்! இதனை அனுபவித்தறிய அனேகருக்கு ஆசை—ஆர்வம்—தோன்றலாம். ஆனால் இது சகலருடைய வாழ்விலும் சம்பவித்துவிடுவதில்லை.

காதல் முளைக்கும் இடத்திலே ஒரு நாவல் விளைவது உறுதி.

இவ்வாறு காதல் மலர் அரும்பு விட்டு வாழ்க்கையை நாவலாக்கி வாழ்ந்தோர் இன்னல்களை ஏற்று இடையூறுகளுக்கு மத்தியிலே உயிரைக் காப்பாற்றிக்கொள்ள படாத பாடுபட்டிருந்தபோதிலும் அதிலேயுள்ள சுவை சுறு சுறுப்பு—மயக்கம்—கணக்கு நூல்போன்ற வாழ்விலே இருப்பதில்லை.

வாழ்வு நாவலானால்தான் சமுதாயத்தையே எதிர்க்கும் வீரப் பண்பினை மனிதன் அடையமுடியும்.

இதற்குச் சான்றாக விளங்குவது தான் பேகம் லியாகத் அலிகானின் காதல் வாழ்க்கை. அது ஒரு இனிமையான காதல் கனிந்த நாவல்.

சாதியைத் துறக்க—பிறந்த மதத்தை மறக்க—மனதிற்கு வலிமையூட்டும் காதல் பார்ப்பனப் பெண்ணை 'பேகம்' ஆக்கிற்று.

காதல்—கலப்பு மணம் நாடெங்கும் பரவுமானால் சாதிப் பூசலும் சமயச் சண்டையும் இருக்காது என்று கடந்த பல ஆண்டுகளாக நாம் சீர்திருத்தம் பேசுகிறோம்,—எழுதுகிறோம் ஆனால் இன்றளவில் காதல்—கலப்பு மணம் பரவியதா? "பலன் கிடைத்ததா?" என்று கேட்கும் போது "இல்லை" என்ற தளர்ந்த பதில், அதே நேரத்தில் 'அது முடியாது' என்று வைதீகம் திமிராகப் பேசுகிறதும் நம் காதில் விழத்தான் செய்கிறது. அதே நேரத்தில் லியாகத் அலிகான் தம்பதிகள் நம் நினைவிற்கு வருகிறார்கள். லியாகத் அலிகானின் வரலாறு வைதீகத்திற்கும் வாலிப உலகிற்கும் வழி காட்டியாகும்.

பெண்கள் படிக்கப் பயப்பட்டுக் கொண்டிருந்த காலம்! பேகம் லியாகத் லக்னோ பல்கலைக் கழகத்தில் எம். ஏ. படித்துக்கொண்டிருந்தார். இன்றைய கல்லூரி மாணவியைப்போல பௌவுடர் பூசவோ, நளின நடை நடக்கவோ, சிங்கார உடை உடுத்தி சினிமாவிற்குச் செல்லவோ பேகம் கற்றுக்கொள்ளவில்லை. இயற்கையாக இருக்கும் அறிவை கல்லூரி என்ற உரைகல்லில் தீட்டிக்கொண்டார்கள், அப்போதே பொது நலத்தொண்டு அவர் மனதில் ஊறியது. பீகார் நிவாரண நிதி திரட்ட முயன்றனர். இந்த முயற்சிதான் எதிர்கால வாழ்வுக்கு ஒரு ஏணி ஏற்றமாக ஏற்பட்டது.

சந்திப்புக்கேற்ற சந்தர்ப்பமும் சூழ்நிலையும் வாய்க்குமானால் காரியம் வெற்றி பெறுவது உறுதியல்லவா! அந்த அருமையான வாய்ப்பும் சூழ்நிலையும்தான் பேகத்தையும் தோழர் லியாகத் அலிகானையும் உள்ளத்தினால் இணைத்துவிட்டது. பீகார் நிவாரண நிதிக்கு 'டிக்கெட்' விற்கச் சென்றபோது 1928-லே இருவரும் சந்தித்தனர். அன்றிலிருந்துதான் லியாகத் அலிகானின் உருவம் பேகத்தின் இதயத்தில் இடம் பெற்றது.

1929-ம் ஆண்டில் கல்லூரிப் படிப்பை முடித்து கல்கத்தா பல்கலைக் கழகத்தில் கல்லூரிப் பயிற்சிப் பட்டமும் பெற்றார். இந்திர பிரஸ்தா பல்கலைக் கழகத்தில் பொருளியல் பேராசிரியராக பணி புரிய ஆரம்பித்தார். 1931-ல் மீண்டும் லியாகத் அலிகானை சந்திக்க நேரிட்டது. அப்போது 1928-ல் நடந்த சந்திப்பு நினைவிற்கு வந்தது. இருவருக்குமிடையே காதல் இன்றைய கல்லூரிக் காதலல்ல! பெரும் எதிர்ப்பாலும் பாதிக்கப்படாத பாசம் கலந்த காதல் பிறந்தது. அதற்குப் பிறகு அவர்களிடையே பிரிவே ஏற்படவில்லை. சமுகச் சீற்றமோ—பெற்றோரின் படையெடுப்போ—வேறு எந்தவித


ஊடுருவி—எழுதியவை

1. வீரமங்கை ஜோன் 1 0
2. ரோமியோ-ஜூலியத் 1 0
3. லைலா—மஜ்னு 1 0

விபரங்களுக்கு:
கலைமன்றம்—சென்னை-1

நொண்டிச் சமாதானமோ பேகத்தையும் லியாகத்தையும் பிரிக்கவில்லை. பிரிக்கவும் முடியாத அத்தனை ஈடுபாடு! லியாகத் அலிகான் தம்பதிகளாயினர். இருவரிடையே இன்பம் பூரித்து இல்லறம் செழித்தது. அவருடைய முன்னாள் வாழ்க்கை முழுக்க முழுக்க மாற்றமடைந்தது.

முஸ்லீம் மத சம்பிரதாயப்படி அவர் முக்காடிட்டுக் கொள்வதில்லை. பெண்களெல்லாம் திருடர்களல்ல முகமூடி போட்டுக்கொள்ள என்பது அவர் எண்ணம். முக்காடு போட்டுக்கொள்ளாமல் மதக் கலவரத்தின்போது இந்துக்களிடமிருந்து தப்பி வந்த பாகிஸ்தான் பெண்கள் மீண்டும் முக்காடிட்டுக் கொள்வது முறையல்ல என்பதும் அவர் கருத்தாகும். மௌல்வியின் உதவியால் அரபியில் குர் ஆன் முழுவதும் படித்திருப்பதோடு தன் மூத்த மகன் அஸ்ராபுக்கும் கற்றுக் கொடுத்தார். பெண்களுக்குத் தனி உரிமை வேண்டுமென அவர் கருதினாலும் முஸ்லீம் மதக் கோட்பாட்டின்படி வருடத்திற்கு ஒரு முறை ரமஜான் நோன்பு இருக்க தவறமாட்டார். அவருடைய இதயத்தின் எதிரொலி இதோ! பேகம் பேசுகிறார் கேளுங்கள்,

"பெண்கள் பொது வாழ்க்கையில் ஈடுபடுவது எனக்குப் பிடித்தமாக இல்லை. வீட்டில் வாழக்கையை வளமுறச் செய்வதிலும் பெற்ற பிள்ளைகளைப் பேணுவதிலும் இல்லறத்தை இன்பப் பூங்காவாக ஆக்குவதிலுமே பெண்கள் கவனம் செலுத்த வேண்டும் என்பது என் ஆவல்.

வீட்டைப் பெறுக்கிச் சுத்தம் செய்வதிலிருந்து இரவு படுக்கை விரிப்பதுவரை எல்லா வேலைகளையும் எவ்வித கசப்புமின்றிச் செய்கிறேன். எங்கள் இல்லத்தை அழகு படுத்துவது, மலர்த் தோட்டத்தை மணமுள்ளதாக்குவது முதலிய அலுவல்களே ஆனந்தமளிக்கும். எனக்கு ஓய்வு நேரங்களிலே நாட்டுச் சரித்திரங்களைப் படித்து இன்புறுவேன் எளிய ஆடைகள் அதுவும் காலத்திற்கு (தட்ப வெட்ப இயற்கை நிலைக்கு) ஏற்றவாறு அணிந்துவருகிறேன். பிறர் கண்ணைக் கவரக்கூடிய முறையில், உடலிலுள்ள அவயவங்களைப் பார்த்தவர் கண்ணை உறுத்தும்படியாக ஆடை அணிவதும்—அனாவசியமாக ஏராளமான நகைகள் போட்டுக் கொள்வதும் எனக்குச் சுத்தமாக பிடிக்காது. கட்டழகு வெளியே தெரியும்படி ஆடைகள் அணிந்து கொள்வது தவறு என்பது என் அபிப்பிரயம்"

மேலும் கூறுகிறார்,

"முஸ்லீம் பெண்கள் 'கோஷா' போட்டுக் கொள்வது இந்துப்பெண்களிடமிருந்து தங்களைப் பிரித்துக் காட்டிக் கொள்வதற்காகத்தான். இதை நான் வெறுக்கிறேன்."

மேலே கண்டவை பெண்களைப் பற்றிய அவருடைய ஆழ்ந்த கருத்துக்களாகும். இனி தன் நாட்டின் மீது அவர் கொண்டிருக்கும் பற்றை இந்த நிகழ்ச்சிமூலம் அறியலாம்.

ஒரு சமயம் ஜனப் ஜின்னா விருந்து ஒன்று நடத்தினர். அங்கே பேகமும் வந்திருந்தார். பாகிஸ்தானிலுள்ள இந்தியப் பிரதிநிதி திரு. பிரகாசா 'இங்கே வந்து விட்டீர்களா' என்று கேட்டபோது பேகம் உரத்த குரலில் உள்ளத்தில் உணர்ச்சி ததும்பக் கூறினாராம் "என் தாய் நாட்டிற்கு வந்திருக்கிறேன் நான் ஒரு பாகிஸ்தானி" என்று.

இந்த வாழ்க்கையிலே என்ன சாரம் இருக்கிறது? இது எப்படி காதல் கலப்பு மணத்திற்கு எடுத்துக்காட்டாக இருக்க முடியும்? ஆம்! பேகம் சமுதாயத்தை எதிர்த்து, சமயத்தைத் துச்சமென எண்ணி லியாகத் அலிகானை மணந்தார். அவர் பேகமாகப் பிறக்கவில்லை. பார்ப்பனப் பெண்ணாகப் பிறந்தார். லியாகத்தை மணந்து... ..................'பேகம்' ஆனார்-இது வெற்றியல்லாமல் வேறென்ன? இங்கேதான் படித்தவர்கள் கூட சாதி விட்டுச் சாதி திருமணம் செய்ய புருவத்தைச் சுழிப்பதுமட்டுமா நடு நடுங்கிப்போகிறார்களே! பழமை விரும்பிகளுக்கு—பகல் வேடக்காரர்களுக்கு பேகத்தின் வரலாறு புரிந்தால் மட்டும் போதாது 'ஆரிய'க் கலப்பற்ற பேகத்தின் பகுத்தறிவு நடைமுறைகளும் பரவுதல் வேண்டும். அப்போது ஒவ்வொருவர் வாழ்வும் நாவலைப் போல அமையும்—அழகான காவியம் உருவாகும்.

○

## இறப்பது 'ஏன்?'

(22-ம் பக்கத் தொடர்ச்சி)

உடற்கருவிகளை முறையாக வேலை செய்ய விடுவதில்லை. இவைகளுக்கு ஆதாரமாயிருப்பது 'என்ஸை' எனப்படும் நொதிப் பொருளாகும். 'என்ஸைம்' எனப்படுவது நாம் உட்கொள்ளும் உணவுப் பொருள்களை (Liting tissues) உயிருள்ள மூலப் பொருள்களாக மாற்றுகிறது. தேகம் உயிருடன் இருப்பதற்கு என்ஸைம் எவ்விதம் வேலை செய்கிறது என்பதை விஞ்ஞானிகள் பல ஆராய்ச்சிகள் நடத்தி என்ஸைமைப் பற்றிய உண்மைகளை அறிந்திருக்கின்றனர்.

வயது அதிகமாக அதிகமாக என்ஸைமின் ஆற்றல் குறைந்து விடுகிறது. என்ஸைமின் குறைய குறைய வயோதிகமடைய நேரிடுகிறது. வயோதிகம் ஏற்படுவது தடுக்க வேண்டுமாயின் என்ஸை ம—அதனை ஆற்றலற்று அழியாமல் பாதுகாக்க வேண்டுவது அவசியமாகும். விஞ்ஞானிகள் மேலும் பலவித ஆராய்ச்சிகளை தொடர்ந்து என்ஸைமை புதுப்பித்து வயோதிகம் ஏற்படாமல் தடுக்கவும்—இயற்கையான மரணத்தை தள்ளிப் போடுவதற்கான வழிகளையும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்.

0 0 0

மேலைய நாடுகளில் இறப்பது ஏன் என்பது போன்ற கேள்விகளை எழுப்பி இறப்பை தடுப்பதற்கு வேண்டி ஆராய்ச்சிகள் நடத்திக் கொண்டு வருகின்றனர். ஆனால் நாமோ இறப்பதற்கு எமனே காரணமென்றும் எமனின் வாகனம் எருமைக்கடா என்றும் நேரில் பார்த்தது போல கதைகள் கூறியும்-வம்புகள் அளந்து கொண்டுமிருக்கிறோம். இந்த நிலைகள் என்றுதான் மாறுமோ.........?

சரித்திரக்கதை

# வான மாளிகை

செந்தாமரை

கி. பி. 1606-ஆம் ஆண்டில் ஓர் நாள்.........

இராஜத் துரோகக் குற்றம் சாட்டப் பெற்று, ஆக்ராவிலுள்ள கோட்டைச் சிறையில், கடுங்காவல் கைதியாக இளவரசன் குஷ்ரூ, தன் தந்தை ஜஹாங்கீராலேயே அடைக்கப் பட்டுக் கிடந்தான்.

சிறைக் கம்பிகளைக்கையிற் பிடித்துக் கொண்டு, வானவெளியை அண்ணாந்து நோக்கினான் குஷ்ரூ. ஏளனமாக அவனைப் பார்த்து விண் மீன்கள் கண்சிமிட்டி நகைத்தன. பெருமூச்சு விட்டவண்ணம் அவன் சிறையினுள் அங்குமிங்கும் மீண்டும் உலவத் தொடங்கினான். உணர்ச்சி வேகத்தால் அவனிதயம் விரிந்து விரிந்து சுருங்கியது! பயங்கரமானதோர் காரியத்தில் இறங்க வேண்டியிருக்கிறதே, விடுதலை என்னும் சுடரொளியைக் காணும் பொருட்டு என்று எண்ணும்போது, அவனிதயத்தின் அடித்தளத்தில் தணலைக் கொட்டினாற் போன்ற உணர்ச்சி அடிக்கடி ஏற்பட்டது.

"சக்கரவர்த்தியாக மணிமுடி சூடி, அக்பரும் பாபரும் வீற்றிருந்து கோல் செலுத்திய அதே சிங்காதனத்தில் அமர்ந்திருக்க வேண்டிய நான், இன்று பாதாளச் சிறையில் அடைபட்டுக் கிடக்கிறேன்." என்று இளவரசன் எண்ணினானே தவிர, தந்தைக்கு எதிராகக் கலகம் செய்து அரசாட்சியைக் கைப்பற்ற முயன்றது தவறு என்று நினைக்க வில்லை. தந்தையைக் கொன்றேனும் தரணியைக் கைப்பற்ற வேண்டும் என்று எண்ணினான்.

தன் தந்தை ஜஹாங்கீர் மது வருந்துவதிலும் மாமிசம் புசிப்பதிலுமே மூழ்கி, அரசாங்கப் பொறுப்பைச் சிறிதும் கவனியாதிருந்த அந்தக் காலத்தில், தன் பாட்டனாராகிய அக்பர், "என தருமை குஷ்ரூ! உன் தந்தை, எனக்குப் பின் முடி சூடி அரசாளச் சிறிதும் தகுதியற்றவன். அவன் குடிகாரன்; பொறுப்பற்றவன்; உதவாக்கரை. நீயே எனக்குப் பிறகு இந் நாட்டையாள வேண்டியவன்! உனக்கே மணிமகுடம்!" என்று கூறியபோது தனக்கேற்பட்ட பூரிப்பையும், தனக்களித்த வாக்குறுதியை மறந்து தன் மகனுக்கே பட்டத்தைத் தந்து விட்டு இறந்து போன அக்பருக்கும் பிறகு, தன் தந்தையைக் கவிழ்க்கத்தான் செய்த எந்த சூழ்ச்சியும் பலிக்காமல், காராக்கிரக வாசம் முயற்சிக்குப் பிரதிபலனாகக் கிடைத்த எதிர்பாராத சூழ் நிலையையும் எண்ணினான். அவனிதயம் வேதனையாலும் வெஞ்சினத்தாலும் வெடித்து விடும் போலிருந்தது!

எப்படியாவது சிறையிலிருந்து விடுதலை பெற்று வெளியேறி சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றப் போகிறோம் என்று அவன் எண்ணினான். அந்த எண்ணத்திலேயே அவனிதயம் இறும்பூ தெய்தியது!

0 0 0

சிறைக் காவலரின் உதவியைக் கொண்டு இளவரசன் குஷ்ரூ சிறையை விட்டுவெளியேறுகிறான்.

யமுனை ஆற்றங்கரையில் மூன்று குதிரைகள்சேணங்கட்டித் தயாராக நிறுத்தப் பட்டிருக்கின்றன. தன் மெய்க் காப்பாளர் இருவருடன், யமுனைக் கரையைக் குஷ்ரூ அடைகிறான். மூவரும் 'குதிரையேறி ஆக்ராவை விட்டு வெளியேறுகிறார்கள். பழகிய அந்தக் குதிரைகள் காரிருளிலும் வழி தெரிந்து கனவேகமாகப் பறந்து செல்கின்றன.

இவ்வாறாக இரவில் பயணம் செய்வதும் பகலில் பதுங்கியிருப்பதுமாக குஷ்ரூ தன் நண்பருடன் அல்லாஹாபாத் என்ற பட்டணத்தையடைந்து, புரட்சிக்கு வித்திடுகிறான்.

கவர்ச்சியும் கம்பீரமும் இளமையமும் பொருந்திய குஷ்ருவின் சொற்களுக்கு, அந்நாட்டு மக்கள் செவி சாய்க்கிறார்கள்.

"என் பாட்டனார் எனக்கெழுதி வைத்திருந்த உரிமைச் சாசனத்தைக் களவாடி நாட்டைக் கைப்பற்றியதுமன்றி, மகனென்றும் பாராமல் கடுங்காவல் சிறையிலடைத்து விட்டார் என்னை என் தந்தை. இது தகுமா! உணவில் நஞ்சைக் கலந்து எனக்குத் தந்து என்னைக் கொன்று விடுமாறு சிறைக் காவலாளிகளுக்குக் கட்டளையிட்டிருந்தார் என் தந்தை! மனம் பொறாத சிறைக் காப்பாளர்கள், என் மெய்க்காப்பாளராக மாறினார்கள்! அவர்கள் உதவியால் மரணத்தின் வாயிலிருந்தும் சிறையின் பிடியிலிருந்தும் தப்பி, இங்கு வந்திருக்கிறேன், உங்கள் உதவியை நாடி!

"மன்னனாக நான் முடிசூட விரும்ப வில்லை. எனக்கெதற்குப் பட்டம் தந்தை யிருக்கும் பொழுது? நான் நீதி கோரி நிற்கிறேன்—மன்னரிடமல்ல; குடிமக்களாகிய உங்களிடம்! இரக்கம் காட்டுங்கள்—இளவரசன் மீதல்ல; உங்களைப்போன்ற ஒரு பிரஜையின் மீது!

"சிறையில் அடைபடவும், சித்திரவதையை யேற்கவும், நஞ்சுண்டு மாளவும்—அன்புள்ளம் கொண்டோரே! அப்படி நானென்ன குற்றம் செய்தேன்? மதுவருந்தினேனா? மங்கையரைக் கற்பழித்தேனா? மாமிசமும் மதுவுமே என் வாழ்வில் இன்பம் தரும் பொருள்கள் என்று என் இதயத்தை அவற்றின் மீது பதியச் செய்தேனா? என்ன செய்தேன்? எதற்காக எனக்குச் சிறைவாசம்? நான் செய்த கேடென்ன? எதற்கு எனக்கு இந்தத் தண்டனை?"

இளவரசன் குஷ்ருவின் கவர்ச்சிகரமான வார்த்தைகள், பொது மக்களின் இதயத்தை மாற்றி விடுகின்றன! "ஜஹாங்கீர் சிம்மாசனத்தில் வீற்றிருக்கத் தகுதியற்றவர். குஷ்ருவே எங்கள் மன்னர். தன் சுகமே பெரிதென எண்ணி அரண்மனையில் உல்லாச வாழ்வு வாழ்ந்திருக்கும் சலீம் அல்ல எங்கள் மன்னர்! அவருக்கு ஜஹாங்கீர்—உலகத்தை வென்றவர்—என்ற பெயர் இம்மியளவும் பொருந்தாது! சலீம் சாதாரணக் குடிமகனாக இருக்கவும் தகுதியற்றவர். பெற்ற மகனைப் பிணமாகக் காணத் துடிதுடிப்பவர், பொது மக்களின் நலனைக் காண எங்ஙனம் விரும்புவார்? குடித்துக் கூத்தாடிக் கன்னியரின் மோகவலையில் மூழ்கிக் கிடக்கும் தேசத் துரோகியை

199110.

காங்கள் மன்னராக ஏற்கச் சம்மதியோம்! இளவரசர் குஷ்ரு வாழ்க!" எனப் பொது மக்கள் புரட்சியொலி கிளப்புகிறார்கள்!

"அரியாசனத்தில் அமர்ந்திருக்க வேண்டிய அரியேறு, ஆதரவற்ற அநாதையாக, ஏனென்று கேட்கவும் நாதியற்றவனாக, அகதியாக இன்று, இதோ உங்கள் உதவியை நாடி வந்திருக்கிறான்! இளவரசன்-அக்பரின் அன்பிற்குரியபெயரன்—உங்கள் தோழன் குஷ்ருவைப் பாருங்கள்!

"என் அன்புத் தோழர்களே! ஏதேனும் நான் இராஜத் துரோகக் குற்றம் செய்திருந்தால், மகனென்று பார்த்து மன்னிக்கா விட்டாலும், நாடு கடத்தியிருக்கலாமே, நாட்டிலோர் பிரஜையாக என்னை மதித்து! செய்தாராமன்னர்? இல்லை! விஷம் கொடுத்து கொல்ல ஏவியிருக்கிறார். சிறைக் காவலதிகாரிகளை! நன்றியுள்ள அந்த நண்பர்கள், அவர் நயவஞ்சகத்திற்குடன் பட வில்லை.

"வெளிப்படையாக என்னைக் கொன்றால், காரணம் கேட்பார்கள் பொது மக்கள்! இரகசியமாகக் கொன்று, 'காணமற் போனான் என் கண்மணி குஷ்ரு' எனப்பறை சாற்றி நீலிக் கண்ணீர் வடிக்க நினைத்தார்! அவர் நினைவு, நினைவாகவே முடிந்தது! இப்போது கூறுங்கள் என் தோழர்களே, இப்போது என்ன செய்யலாமென்று! கொடுங் கொலைகள் செய்து, கொள்ளைகளிட்டு மறைந்து உயிர் வாழும் சண்டாளனைப் போலவே நான் என் உயிருள்ளளவும் நடைப் பிணமாக உலவ வேண்டுமா? பகிரங்கமாக நானும் ஓர் சாதாரணக் குடிமகனாக உலவவே முடியாதா?"

சாகசமும் சாமர்த்தியமுமான குஷ்ருவின் புரட்சிப் பிரசாரங்கள், நாட்டு மக்களை அலைகடலெனக் கொந்தளித்து எழுப்புகின்றன! "இளவரசர் குஷ்ரு சாதாரணப் பிரஜையல்ல! அவரே எங்கள் மன்னர்! வாழ்க இளவரசர் குஷ்ரு! வீழ்க சலீம் மன்னரின் கொடுங்கோலாட்சி!………"—பொது மக்களின் புரட்சி வாய்ப்புரட்சியாக முடிவுறவில்லை. கோபத்தால் செந்நீர்க் கொதிப்பேறிய குடிமக்கள் சேனை வீரர்களாக மாறி, ஆற்று வெள்ளம் போலப் பெருக் கெடுக்கிறார்கள்!

பீஹார், வங்காளம், அகமது நகரம், கூர்ஜரம், உஜ்ஜயினி, பஞ்சாப், ராஜபுதனம், டில்லி, லாகூர், காஷ்மீரம், முதலிய நாட்டின் பெரிய நகரங்களிலெல்லாம் பரவிய புரட்சித் தீ, தலைநகரான ஆக்ராவிலும் பரவுகிறது! புரட்சி! புரட்சி! புரட்சி! எங்கும் புரட்சி!

மக்களின் கொந்தளிப்பை அடக்க மன்னனால் முடிவதில்லை! ஏற்கெனவே பொதுமக்கள் போர்ப் பயிற்சி பெற்றிருக்கிற காரணத்தால், அரசனின் அடக்குமுறை பயன்படாது போகிறது! போர் மூளுகிறது! ஆம்! தந்தைக்கும் தனயனுக்கும் போர்!

ஆளைத் தேடியலைந்த வெற்றி மடந்தை, குஷ்ருவை அணைத்துக் கொள்கிறாள்! ஜஹாங்கீர் சக்ரவர்த்தியின் பிரேதம், பிணக்காட்டில்! இரத்த வெள்ளத்தில் மிதக்கிறது, வெற்றி, இளவரசன் குஷ்ருவுக்கே! "எங்கள் மன்னர் குஷ்ரு வாழ்க! வாழ்க!" என யுத்த வீரர்கள் வாழ்த் தொலிகளை வான் முட்டக் கிளப்பு கின்றனர்!

தலை நகரான ஆக்ராவில், மன்னனது அரண்மனை! அரியாசனத்தில் சக்கரவர்த்தி குஷ்ரு கம்பீரமாக அமர்ந்திருக்கிறான்!

0 0 0

இன்பமான இப்படி ஒரு கற்பனைக் கோட்டையைக் கட்டி மகிழ்ந்தபடி, சிறைக் கூடத்தில் உலவிக் கொண்டிருந்தான் குஷ்ரு. இன்னும் சிறிது நேரத்தில் எப்படியும் சிறையை விட்டு வெளியேறப் போகிறோம், வெளியேறிய பின்பு நாட்டிலே இவ்வாறெல்லாம் புரட்சியை உண்டாக்கப் போகிறோம், மிக எளிதில் நாட்டு மக்கள் நம் வழித் திரும்பப் போகிறார்கள். முடிவில் மணிமுடி நம் தலையை அலங்கரிக்கப் போகிறது என்று எதிர்காலத்தைக் கணித்துக் கொண்டு சிந்தனையி லாழ்ந்திருந்தவன் "இளவரசே!" என்று அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். சிறைக்காவலன், சிறைக் கதவைத் திறந்து விட்டு நின்றிருந்தான்!

"இளவரசே! புறப்படுங்கள்! சிறைக்கு வெளியே குதிரைகள் சேணங்கட்டி நிறுத்தப்பட்டிருக்கின்றன! இனித் தாமதித்தால் ஆபத்து!" என்று இரகசியமாக அவன் கூறினான். அந்த நடு நிசி நேரத்தில், சிறைக்காவலனையும், சிறையை விட்டுத் தப்பிய குஷ்ருவையும் சுமந்து கொண்டு இரண்டு குதிரைகள் பஞ்சாப்பை நோக்கிக் காற்று வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தன!

ஆக்ரா நகரைச் கடந்த பிறகு தான், இருவரும் நன்றாக மூச்சு விட்டார்கள்! குஷ்ரு பேசினான்:

"ஏன் முதலில் பஞ்சாப் செல்ல வேண்டும் என்றாய்?"

"இளவரசே! அங்குள்ளமக்கள் தங்கள் திட்டங்களுக்குவளைந்து கொடுத்திருக்கிறார்கள்! தேர்ச்சி பெற்ற வீரர்கள் பலர், அரசரை எதிர்க்க அங்குதான் தயாராகி இருக்கிறார்கள்! தங்களைக் காண வேண்டுமென்ற ஆவலால் துடியாய்த் துடிக்கிறார்கள்! மற்ற நகரங்களிலுள்ள மக்கள் இன்னும் இந்த நிலையை அடையவில்லை.-இந்த விவரத்தைக் காலையில்தான் ஒரு ஒற்றன் கூறினான். பஞ்சாபில் இருந்து கொண்டு தான், புரட்சியைப் பலப்படுத்த வேண்டும்!"

"ஆம்! நல்ல ஏற்பாடுதான்!"-இளவரசன் ஆமோதித்தான்.

தான் எதிர்பார்த்திருந்ததற்கு மேலாகவே பஞ்சாப்பில் குஷ்ருவுக்குவரவேற்பும் ஆதரவும் கிடைத்தது. இனி நாடு தன் உள்ளங்கையில்—என்று அவன் முடிவு கொண்டான்!

சிறையிலே தான் தீட்டிய திட்டப்படி, நாட்டு மக்கள் நம்பும்படியாகப் பொய்ப் பிரசாரங்கள் செய்தான். தன் தந்தையின் மீது அவதூறான குற்றங்களைச் சுமத்தி, குடிமக்கள் தன்மீது இரக்கப்படுமாறு சாமர்த்தியமாகப் பேசினான். அயல் நகரங்களுக்கும் தேர்ச்சி பெற்ற ஒற்றர்களை யனுப்பி, நாட்டு மக்களைத் தன் வழித் திருப்ப ஆவன செய்தான். எதிர்காலம் எப்படி இன்பமாகக் கழியப் போகிறதென்று, வான மாளிகையை மனதால் கட்டி, அதில் எந்நேரமும் தன் னிதயத்தைக் குடியிருக்க விட்டான்!

0 0 0

குற்றத்திற்குரிய தண்டனையை அடைந்த தன் மகன் குஷ்ரு சிறை

யிலிருந்து தப்பியோடி நாட்டிலே புரட்சியை உண்டாக்கி வருகிறான் என்றறிந்தான் மன்னன் ஜஹாங்கீர். "பட்டத்தைப் பெற வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக, நாட்டு மக்களின் நல்ல மனதில் நஞ்சைச் கலந்து கொண்டிருப்பவன் மகனானாலும் அவன் மரண தண்டனைக் கேற்றவனே! நஞ்சைக் கக்கும் நல்ல பாம்பாக மாறி விட்டான் குஷ்ரூ. பால் வார்த்து வளர்த்தாலும், பாம்பின் விஷம் அமுதமாக மாறாது! தலையிலடித்துக் கொல்ல வேண்டியதே நச்சரவத்தை!" என்று முடிவு கட்டினான் மன்னன்.

இதற்கிடையில் குஷ்ரூ, லாகூரின் மீது படையெடுத்துச் சென்று அதை வென்றான்! இனி வெற்றி தனக்கே என்ற இறுமாப்பில் மூழ்கியிருந்தவன் பைரோவால் என்ற இடத்தில் சாமராஜ்ஜியப் படைகளைச் சந்தித்தான்.

இரு படைகளுக்கும் போர் மூண்டது! திறமை பெற்ற அரச பட்டாளத்தின் முன், தேர்ச்சியைப் போதிய அளவு பெறாத குஷ்ரூவின் படை வீரர்கள், நில்லாது சிதறுண்டோடினர்! "வெற்றி நமக்கே!" என்று கொக்கரித்துக் கொண்டிருந்த பதவிப் பித்தன் குஷ்ரூ கைதியாக்கப் பட்டான்!

இராஜத் துரோகக் குற்றம் சாட்டப்பெற்று கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர் முன்னூறு வீரர்கள்! லாகூருக்குச் செல்லும் சாலையில் இரு புறங்களிலும் கழுமரங்கள் வரிசையாக நாட்டப் பட்டிருந்தன! "அமைதியான அரசாட்சியிலே, இல்லாத குறையைக் கண்டு, இளவரசன் குஷ்ரூவுடன் சேர்ந்து நாட்டைக் கவிழ்க்க முயன்ற துரோகிகள்" என்று குற்றம் சாட்டப்பெற்று, அந்த முன்னூறு வீரர்களும் கழுவிலேற்றப் பட்டார்கள்! கழுமரத்தில் தொங்கிய அவர்கள் பிணங்கள், காக்கைகளுக்கும் கழுகுகளுக்கும் நாய் நரிகளுக்கும் நல் விருந்தாயின!

கி. பி. 1616-ஆம் ஆண்டுவரை சிறைக்கைதியாகக் கடுங்காவல் தண்டனை பெற்று, முன்னிலும் பல கொடுமைகளைக் குஷ்ரூ அனுபவித்தான். முன்பு தான் கட்டிய வான மாளிகை, சூறையிற் சிக்கிய சிறிய துரும்பாகி விட்டதே என்று எந்த நேரமும் ஏங்கினான். தந்தைக்கும் நாட்டிற்கும் தான் செய்த துரோகத்தைக் கடைசி வரையிலும் அவன் எண்ணிப் பார்க்கவேயில்லை!

1616-ஆம் ஆண்டிற்குப் பிறகு, சிறையினின்றும் விடுதலை செய்யப்பட்டான் குஷ்ரூ. அப்போதும், எந்த நேரத்திலும் அவனிதயத்தில் எரிந்து கொண்டிருந்த பேராசை என்னும் ஒளிப்பிழம்பு, அணைந்தபாடில்லை! "என் இன்பக் கனவுகளை என்றைக் கேனும் ஈடேற்றி வெற்றிபெற்றே தீருவேன்! வாழ்வேன் சிறிது காலமாவது மன்னர் மன்னனாக!" என்று உறுமிக் கொண்டேயிருந்தான். ஈவிரக்க மற்ற—ஏன், இதயமே அற்ற அவனுக்கு, இயற்கையும் துணைபுரிய மறுத்து விட்டது! அவன் கட்டிய வான மாளிகை, காற்றிலே பறந்து, நிலத்திலிருந்து நெடுந்தூரத்திற்குச் சென்று மறைந்து விட்டது!

தன் சூழ்ச்சித் திட்டங்களுக்குச் சத்துருவாக இருந்த தன் சகோதரன் குர்ரம்—பிற்காலத்தில் ஷாஜஹான் எனப் பெயர் பெற்றவன்—என்பானுடன் சாகசமாக நடித்தான் குஷ்ரூ. அவனுக்காகத் தான் எதையும் செய்யப் போவதாகப் பாசாங்கு செய்தான். நல்ல பாம்பு நஞ்சைக் கக்குமே யல்லாது, நல்லதைச் சொரியாது என்று எப்போதோ குர்ரம் அறிந்திருந்தானாதலால், எப்போதும் குஷ்ரூவிடம் எச்சரிக்கையோடேயே இருந்து வந்தான்.

இவ்வாறாக ஆண்டுகள் சில சென்றன.


விருதை ந. இராமசாமி

எழுதியவை

| | |
|---|---|
| வழுக்கி விழுந்தவள் | 1 0 |
| மலர்புரி ராணி | 1 0 |
| தளபதி | 1 0 |
| தாமஸ் மசாரிக் | 1 0 |
| கருமுகில் | 1 0 |
| புது வாழ்வு | 1 0 |
| இலட்சியப் பெண் | 1 0 |

விபரங்களுக்கு:

கலைமன்றம் - சென்னை-1


ஜஹாங்கீரின் இரண்டாம் மனைவியான நூர்ஜஹான், தன் முதற் கணவனுக்குப் பிறந்த பெண்ணை, ஜஹாங்கீரின் கடைசி மைந்தனான ஷாஹ்ரியார் என்பவனுக்கு மணம் செய்வித்தாள்! ஷாஹ்ரியாரையே மன்னனாக்க வேண்டுமென்று அவள் எண்ணியிருந்தாள். அவள் சூழ்ச்சித் திட்டத்தை யறிந்திருந்த குர்ரம், தந்தைக்கு விரோதமாகக் கலகம் செய்தான்.

மன்னனிடமும் மக்களிடமும் முன்னரே வெறுப்பைத் தேடிக் கொள்ளாதிருந்தால் ஜஹாங்கீரின் மூத்த மைந்தனான குஷ்ரூவே, தன் தந்தைக்குப் பிறகு பட்டத்திற்கு வந்திருக்கலாம். பொறாமையும் பொறுமையின்மையுமே, அவன் திட்டங்களை, எதிர்காலநல்வாய்ப்பை அழித்து விட்டன! அரசுரிமைக்குப் போட்டியிடும் குர்ரத்தையும் ஷாஹ்ரியாரையும், எந்த நேரத்தில் கொலை செய்யலாமெனக் குஸ்ரூ சமயம் பார்த்திருந்தான்!

கி. பி. 1622-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலோர் நாள், யமுனையாற்றங் கரையில் குர்ரமும் குஷ்ரூவும் அமர்ந்து வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். எப்படியாவது குர்ரத்தைக் கொன்றுவிடுவது இன்று என்ற முடிவுடன், ஏதேதோ சாகச வார்த்தைகளை அள்ளியள்ளி வீசினான் குஷ்ரூ. அவன் தேன் மொழிகளில் நஞ்சு தோய்ந்திருப்பது தெளிவாகத் தெரியக் கண்ட குர்ரம், ஒன்றும் அறியாதவனைப் போல, வரப்போகும் ஆபத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்!

"என தருமைத் தம்பீ! பேராசையின் விளைவால்நல்லறிவை யிழந்து, நாட்டு மக்களின் ஆதரவையும் நம தருமைத் தந்தையின் அன்பையும் இழந்தேன். உண்மையிலேயே நான்பட்டத்திற்குத் தகுதியற்றவன் தான். இரண்டாமவனாகியதம்பி பார்விஸ், மிகமிகச் சாமானியமானவன். ஆகவே, நாங்களிருவரும் அரசாளத் தகுதியற்றவர்கள். தந்தையின் முடியைத் தலையிலணியக் கொடுத்துவைக்காதமாபாவிகள்! ஆனால் நீ... உனக்கேன் பட்டமில்லை? நீ வீரத்தில் குறைந்தவனா? அரசாட்சி நடத்தும் திறன் உனக்கில்லையா?—அப்படியிருக்க, ஷாஹ்ரியாருக்கு மணி

[36-ம் பக்கம் பார்க்க]

கற்பனைச் சரித்திரம்

# வீரனின் வீழ்ச்சி

கோவி. மணிசேகரன்

## காட்சி 1

[குமரிவேந்தன் வாரணன் அத்தாணி மண்டபத்திலே வீற்றிருக்கிறான். மந்திரி பிரதானிகளும், தமிழ்ப் புலவர்களும், சிம்மவர்மன், தபோதனன் (வாரணன் சகோதரர்கள்) சந்திரசூடன் (இளவரசன்) அனைவரும் அமர்ந்திருக்கின்றனர். வடக்கிலிருந்து வரவழைக்கப்பட்ட ஆரிய நர்த்தகி ஹம்ஸப்ரகாரியின் நாட்டியம் நடைபெறுகிறது. அந்த நல்ல சமயத்திலே இளநகை (வாரணன் சகோதரி) ரத்தம் வழியும் கோலத்தோடு ஓடி வருகிறாள்.]

இளநகை:—அண்ணா! அண்ணா!! அண்ணா!!! அக்ரமம் நடந்துவிட்டது—அற்பன் ஒருவனின் வெறித் தாண்டவத்தால்! அழிக்க முடியாத அவமானத்தால், என் கண்களை விழிக்க முடியாத பண்பின் விரோதியாக்கி விட்டான் ஒரு வீணன்! என் மனதிற்கு—இல்லை, உமது மாணிக்கம் பொறித்த மகுடத்திற்கு—அதுவுமில்லை, இந்த மாண்புமிக்க தமிழ் மண்டலத்திற்கே மாசு தேடிவைத்த மாபாவியாக்கிவிட்டான் அண்ணா—தென்னகத்துக் காட்டிலே திரிந்து வரும் திசை தெரியாத கூட்டத்தான் ஒருவன்!

[அவையில் எல்லோரும் முணுமுணுக்கின்றனர். வாரணன், மீசையும், புஜங்களும் துடிக்க:]

வாரணன்: இளநகை! நீ சொல்லும் வார்த்தைகள் சூன்யம் வைக்கப்பட்டது போலிருக்கிறது. சொல்வதை புரியும்படி சொல்! யார் அந்த கூட்டம்? மண்டலத்தின் திசை மறந்த அந்த மடையன் யார்? மாசு தேடி வைக்கும் அளவிற்கு அந்த மதோன்மத்தன் செய்ததென்ன? மானம் பறி போகும் நிலைமைக்கு அந்த மட்டரகக் கூட்டத்தான் அப்படி என்ன மரியாதைக் குறைவாக நடந்துவிட்டான்? மன்னர்க்கு மன்னவன், மாவீரன் தங்கை என்பதை மறந்தவனா? அல்லது துறந்தவனா? இல்லை உணராத ஊர்மாறியா? சொல் இளநகை!

இளநகை: (கதறி) அண்ணா! நான் எதைச் சொல்ல வேண்டும்?

சந்திரசூடன்: நடந்ததை—நடந்ததின் காரண கர்த்தனை—நதியின் ஊற்றுபோல் உம் உடலில் வளைந்தோடுகிறதே, அந்த ரத்தம் உண்டாக்க சித்தம் கொடுத்தவனை! யார் அந்த ஏதுங் கெட்டவன்? என்ன செய்தான்—நிலைமை இப்படியாகுமளவிற்கு? சொல் அத்தை, சொல்! உறங்கும் என் வாளுக்கு அவன் உதிரத்தால் உற்சாக மூட்டுகிறேன். அயர்ந்து கிடக்கும் அம்பினால், அவனை ஆயிரம் துண்டங்களாகக் கிழித்தெறிகிறேன். சந்திரசூடனின் அத்தை என்று தெரிந்திருந்தால், இந்திர ஜித்தும் இறங்க பயந்திருப்பான் இந்த காரியத்திற்கு! யார் அந்த சுண்டெலிக் கூட்டம்? சொல்லுங்கள், அத்தை! சொல்லுங்கள்!

வாரணன்: சகோதரி! சங்கோஜப் படாமல் சொல்! சத்துருக்களின் பயங்கர முழக்கம் நம் சந்திரசூடன்! அவன் சண்டமாருதமென கிளம்பி விட்டான். சொல்லம்மா, சொல்! தயங்காதே!

இளநகை: நாவும் கூசுகிறதண்ணா—அந்த நாடோடியின் நச்சுச் செய்கை! நான்—நான்......

சிம்மவர்மன்: சொல்லம்மா, சொல், 'நான்'...இம்...'நான்'—சொல்ல வந்ததை சொல்! பலசாலிகள் பதின்மரை ஒன்றாகக் கட்டி, தன் புஜப்பலத்தைக் காட்ட இடக் கரத்தால் தூக்கி, பாசறையிலே பதை பதைக்கும் துண்டங்களாக வெட்டி வீழ்த்திய வீரர், நம் அண்ணார்! யானைப் படைகளைப் போன திசைத் தெரியாமல் விரட்டியடித்த வீரச் சிங்கம் சந்திரசூடனை கர்ஜிக்கிறான! இனியும் தாமதிக்காதே...சொல்! அந்த துன்மார்க்கர்களின் வம்சத்தையே தூள் தூளாக்கி விடுகிறோம்!

இளநகை: என்...என்...(திணறி) களங்கமடைந்து விட்டதண்ணா! என் கற்பு!

எல்லோரும்: ஆ...!

வாரணன்: கற்பு! தமிழர்களின் தங்கத் தாம்பளம்! அதை உருக்கி வீழ்த்திய தருக்கன் யார்? என் தங்கையைப் பங்கப்படுத்திய அந்தப் பாதகன யார்? சொர்னப் பதுமை இளநகையாள் மேனிக்கு வர்ணம் பூசி அவமானமாக்கிய அந்த வஞ்சகன் யார்? யார்? யார் அந்த அரக்கன்?

(சபை நடுங்குகிறது)

சந்திரசூடன்: (உருவிய வாளோடு) தந்தை கேட்கிறார். அந்த அரக்கன் யார் அத்தை? அவனை இப்போதே உங்கள் முன் கொண்டு வந்து நிறுத்தி, உருத்தெரியாமல் கிழித்து சித்ரவதைக்கு சிரிப்பூட்டுகிறேன்! எந்தக் கரங்கள் உங்களை இந்த இழிநிலைக்கு இழுத்ததோ, அந்தக் கரங்களை துண்டமாக்கி உங்கள் பாதத்திற்குப் படைக்கிறேன்! அவமான வார்த்தைகளை எந்த நாவு உளறியதோ, அதை அறுத்து வந்து அர்ச்சிக்கிறேன் அத்தை, உமக்கு! சொல்லுங்கள்—யார் இந்த தென்னகத்துக் காட்டிலே திரிந்து வரும் திசைமாறி? நீர் சொல்லமாட்டீர்! (அவளுடன் வந்த சேவகனை நோக்கி) நந்திரூபா! நடந்ததை நீ சொல்! நடந்தது தெரியாவிட்டால், தெரிந்ததைப் பயப்படாமல் சொல்! உம்...சொல்!!

நந்திரூபன்: ஆக்ஞை இளவரசே! அவர்கள், வடக்கிலிருந்து வந்த வாலிபர்களாம்! நாடுகடுத்தப்பட்ட நாடோடிகளாம்! காட்டுமிராண்டிகளைக் கைவசப்படுத்திக் கொண்டு காலம் கடத்தும் கயவர் இருவருள்—

வாரணன்: இருவருள்—?

நந்திரூபன்: இளயவன்! பெயர் அச்சுதன்!

வாரணன்: ஆ...!

நந்திரூபன்: இந்த இழிநிலைக்கு ஆளாக்கி தேவியாரை இம்சித்து விட்டானும் மன்னவா!

வாரணன்: மூத்தவன் பெயர்?

நந்திரூபன்: சோமனும்! விந்திய நாட்டு வேந்தர் புதல்வர்கள்!

வாரணர்: ஓஹ்ஹோ! அந்த வுதிய மரங்களா? மனைவியோடு வந்திருக்கிறானா? இல்லை தனித்து—

நந்திரூபன்: மனைவியோடுதான் வந்திருக்கிறான் மன்னர்க்கு மன்னவா!

வாரணன்: மடையர்கள்!

சந்திரசூடன்: தந்தையே அவர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? தெரிந்தால் சொல்லுங்கள்! நீங்களும் ஏன் தயங்குகிறீர்கள்? நந்திரூபா! எந்த இடத்தில் அந்த எத்தர்கள் வாழ்கிறார்கள்?

நந்திரூபன்: பொதியமரக் காட்டில் இளவரசே!

சந்திரசூடன்: புறப்படுகிறேன்! உத்திரவு கொடுங்கள் தந்தையே!

வாரணன்: பொறு சந்திரசூடா! அந்த பாதகர்களை நானே பழிவாங்கினால் தான் என் ஆத்திரம் அடங்கும்! நாசபடலத்திற்குப் பாசையை உருட்டி விட்டார்கள்! இளநகை அவர்களை நீ எப்படி சந்திக்க நேர்ந்தது? இதை நீ உன் அண்ணனுக்கு தயங்காமல் சொல்லித்தான் ஆகவேண்டும்!

இளநகை: (மூச்சுத்திணறி) சொல்லுகிறேன்! சொல்லத்தானே வந்தேன் அண்ணா! வீரம் நிறைந்த மரபில் வந்த மங்கை யென்று அந்த வீணனுக்கு விளக்கினேன். வீராப்பு பேசினான். அழிந்து விடுவாயென்று அச்சுறுத்தினேன். அதை அவன் காதில் போட்டுக் கொள்ளவில்லை. (அழுகிறாள்)

வாரணன்: ஆ...!

இளநகை: கணவர் தடுத்தும், நான் தோழிகளோடு சில படை வீரர்களை அழைத்துக் கொண்டு சந்தனக் காட்டிற்கு உல்லாசப் பயணம் புறப்பட்டேன். அன்றிரவு முழு நிலவுப் போதையில் முற்றுகைக்கு சற்று தொலைவில் உலவிவர ஆசைப்பட்டேன். அங்கேதான் அந்த மாபாதகன் மான் வேட்டைக்கு வந்திருந்தான். மடக்கினான் என்னை! புரட்டினான் மன்மதப் புராணத்தை! அவன் மதிக்கு நான் எவ்வளவோ மருந்து கொடுத்துப் பார்த்தும், அவன் இரும்பு கரங்களுக்கு நான் தப்ப முடியாத துரும்பாகிவிட்டேன். துரத்திவிட்டான் என் மானத்தை—மதித்து வந்த கற்புக் கருவூலத்தை! மனமொடிந்து ஓடிவந்தேன். மதிப்பிற்குரிய கணவருக்கு இந்த மாபாதகம் தெரியாதண்ணா—இதோ இங்குவந்து நான் மங்கிய உருவத்தில் நிற்பது—மாசுபடிந்து புலம்புவது — மனம் கசிந்துப் புழுங்குவது! அண்ணா! என் கணவரை மன்னிக்கச் சொல்லுங்கள்! 'மனதாலும் மாற்றானைத் தீண்டியறியாத மனைவி, உம் மனைவி' என்று என் வாழ்வு தெய்வத்திற்கு சொல்லுங்கள், சொல்லுங்கள் அண்ணா, சொல்லுங்கள்!

[ஆவேசமுடன், எதிரே நின்றிருந்த சிப்பாயின் இடுப்பிலிருந்த உடை வாளை எடுத்து தன் வயிற்றில் பாய்ச்சிக் கொள்கிறாள்.]

வாரணன்: இளநகை! (அருகே சென்று) இளநகை! ஐயகோ! என் பழிவாங்கும் திட்டத்தை உன் உயிர் நின்று பார்க்குமுன் உடலை சாய்த்து விட்டாயே! உறுமாறிகளே! இதோ வருகிறேன்!

தபோதனன்: நில்லுங்கள்!

வாரணன்: (திரும்பி) யாரது? என்னைத் தடுப்பது?

தபோதனன்: உம் தம்பி தபோதனன்! இந்த நிலைமையில் நீங்கள் செல்வது சரியில்லை! மேலும் இன்று மரண யோகம். நாளைச் செல்லலாம்!

வாரணன்: கோழையே! வாரணனின் உடன் பிறந்தவனுக்கா இப்படி வார்த்தைகளில் பலஹீனம் ஏற்படுகிறது? மரணயோகம்! மரணத்திற்கும் ஓர் யோகம்!! ஆம்......... சோமனுக்கும், அவன் தம்பி அச்சுதனுக்கும் ஏற்படப் போகும் மரணத்திற்கு உண்மையிலே ஒரு யோக மிருப்பதாகத்தான் எண்ணுகிறேன்.

தபோதனன்: இல்லை, நீங்கள் மரணத்தின் ஆட்சி வேளையில் புறப்படுகிறீர்! அது உங்களை—

வாரணன்: நெருங்காது! வாரணனுக்குவான சாஸ்திரமே வணங்கி நிற்கும்! எனக்குத் தெரியும் மரணம் எது என்பது. மனித சமுதாயத்தோடு பிறந்த அது, என்னோடு பிறக்கத் தவறிவிட்டது. எனவே, எனக்கு மட்டும் எச்சரித்து விட்டுதான் அழைக்கத் துணியும். மேலும் இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் அது என்னிடம் எச்சரிக்கவும் பயப்படும்! (மகனை நோக்கி) சந்திர சூடா! நான் திரும்பும் வரை நாட்டை உன்னிடம் ஒப்படைத்து விட்டுப் போகிறேன். கவனம் யாரங்கே! ரதம் தயாராகட்டும்!

(வாரணன் விரைந்து செல்லுகிறார்)

## காட்சி: 2.

[பொதிய மலைக்காடு. மாலை நேரத்தை அனுபவிக்க, சோமனும், காட்டுமிராண்டிகளின் தளபதிகள் இருவரும், ஒரு கற்பாறைமீது அமர்ந்திருக்கின்றனர்.]

தளபதி: 1. ராஜா! நீங்கள் வந்ததிலிருந்து வில்பயிற்சி எங்களுக்கு வேகத்தோடு முன்னேறி இருக்கிறது!

தளபதி: 2. அது சரி, மஹாராஜா! நீங்கள் ஏன் ஒரு சாம்ராஜ்யத்தை விட்டு விட்டு, இந்த பனிரண்டு வருடங்களாக எங்களுடன் தங்கி இருக்க ஆசைப் பட்டு விட்டீர்கள்?

சோமன்: நான் உங்கள் அரசனாக வேண்டும் என்று விதி தன் விநோத விரல்களால், வாழ்க்கை சாஸனத்தில் எழுதியிருக்கும் போது — அதை அழிக்க வல்ல சக்தி, அணுக்களுக்கு அப்பாற்பட்ட சக்திக்கும் முடியாததாயிற்றே! தளபதிகளே! தகப்பனோடு ஏற்பட்ட தகராறு—விதியின் இந்த விசித்திர விளையாடலுக்குத்தான் என்பது இப்போது விளங்குகிறது!

[அச்சுதன் வருகிறான்]

வா, அச்சுதா! ஏன் இரண்டு நாட்களாகவே, ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறாய்? என்ன நடந்தது?

அச்சுதன்: ஒன்றுமில்லை அண்ணா!

சோமன்: இல்லை, ஏதோ மறைத்துப் பேசுகிறாய்! ரகசியத் திருடனை எப்படித்தான் அகத்தில் மறைத்து வைத்தாலும், முகத்தில் இரண்டு கண்ணடிச் சாளரங்கள் இருக்கின்றன காட்டிக் கொடுப்பதற்கு என்பதை மறந்து விட்டாய் போலிருக்கிறது!

அச்சுதன்: நீங்கள் நினைப்பது சரியில்லை அண்ணா! மான் வேட்டையில்

சிங்கத்தைக்கண்டு மிரண்டு விட்டேன், அந்த அதிர்ச்சிதான்!

தளபதி: 1. அதை அப்போதே சொல்லியிருந்தால், நம் வீரர்கள் வீழ்த்திக்கொண்டு வந்திருப்பார்களே

அச்சுதன்: தேவையில்லை! நானே வீழ்த்தி விட்டு வந்துவிட்டேன். இருந்தாலும் அந்த அதிர்ச்சி நீங்கவில்லை.

சோமன்: அப்படிச் சொல்! வில் பயிற்சியில் மாவீரன்—நீயா இப்படி பயந்து கோழையாகி விட்டாய் என்றுதான் பார்த்தேன்!

[கடாரன் ஓடிவருகிறான்]

கடாரன்: மஹாராஜா! மஹாராஜா! மஹாராணி மேனகா அம்மாள் நதிக்கரையிலிருந்து திரும்பும் போது, குமரி நாட்டு தமிழ் வேந்தர் ரதத்தில் ஏற்றிக் கொண்டு காற்றோடு காற்றாய் மறைந்து விட்டார்!

சோமன்: என்ன! வாரணனா?

அச்சுதன்: அண்ணி மேனகாவை அபகரித்துக் கொண்டு போய் விட்டானா?

தளபதி: 2. அதர்மச் செயலுக்கு அவர் உடன்பட மாட்டாரே!

தளபதி: 1. அழகு-ஒழுக்கத்திற்கு திரை போட்டு விட்டது. (அச்சுதன் முகம் வாடுகிறது) அதையும் கவனித்துவிடலாம். இந்த திரிலிங்கக் கூட்டத்தின் தீரமிக்கச் செயலை, சோமராஜனின் தலைமைப் பதவியிலே, வெற்றியின் மூலம் விளக்கிவிடுகிறேன் காட்டு பாஷை பேசும் கூட்டத்தினர் சிறுபாலர் என்ன செய்ய முடியுமென்று எண்ணி விட்டான். எதையும் நாளைத் தொடுக்கப் போகும் போர் நிர்ணயித்துவிடும். போருக்கு ஆகவேண்டியவைகளை ஏற்பாடு செய்யுங்கள்!

தளபதி: 2. எதற்கும், தலை நகரம் சென்று நம் மன்னவன் தூமகேதுவிடம் கலந்து படைகளைக் கேட்டு, தக்க பக்க பலமுடன் செல்லலாம்!

தளபதி: 1. வாரணனுக்கு எதிர்த்துப் போராட யாரும் வரமாட்டார்கள்! உங்கள் தோளங்கள் வெறும் தோளங்களா? வீரத்தோளங்களா? நம் கரங்களிலிருப்பதும் அம்புகள் தான்! அதுவும் வில்லின் வீர புருஷனின் தலைமையில். வெற்றி நமக்குத்தான்! வாள் அவனிடம் மட்டும் இருப்பதாக எண்ணி விடாதீர்கள்—நம்மிடமும் உண்டு. உம்... புறப்பட ஆயத்தமாகுங்கள்!

சோமன்: (பெருமூச்சுவிட்டு) மேனகா...... இது விதியின் விளையாடல்!

[எல்லோரும் போகின்றனர்]

## காட்சி: 3

[குமரி நாட்டு அரண்மனை. நிலவு, வானத்திலே மிதந்துக் கொண்டுருக்கிறது. மேனகா தனிமையில் சோக கீதம் யெழுப்பிக் கொண்டிருக்கிறாள். மன்னவன் வாரணன் உள்ளே நுழைகிறான்.]

வாரணன்: பலே, மேனகா! சஞ்சலத்தோடு இருக்கும் போது கூட பெண்கள் பாட்டை மறக்க மாட்டேன் என்கிறார்கள். அதிலும் நீ பாடிய பாட்டு அந்த புரத்திலிருந்த என்னை, உன் அந்தரங்கத்திற்கே அழைத்து வந்து விட்டது. வடக்கிலிருந்து வரும் பெண்களின் மிடறுகள் ஏனோ, கனி ரசத்தில் ஊறவைத்தது போலிருக்கிறது!

மேனகா: (வேதனையோடு) அது எங்கள் வாடைகாற்றின் மகிமை மன்னவா!

வாரணன்: அதுவும் வாஸ்தவம் தான்! தென்றல் கிட்டி விட்ட காரணத்தால் வாடையை வரவேற்கிறோம் போலிருக்கிறது. இல்லை யென்றால் உன்னை நானே வரவேற்று இருக்க முடியாதே? மேனகா! இப்படி அருகே வா! நீ ஒரு நல்ல ரோஜா புஷ்பம் என்பது எனக்குத் தெரியும். கசக்கி முகர நான் கசடனல்ல! ஏன் அப்படி திடீரென்று திரும்பிப் பார்த்தாய்? அன்றுன் சுயவரத்தின முதல் நாளும் இப்படித்தான் பார்த்தாய்! அன்று அந்தப் பார்வையில் பனிச் சாரல்! இன்று கோபக்கனல்! அதற்குக் காரணம், ‘அரக்க’னென்று என்னை அபத்தமாக பேசிய வடக்கு வாசிகளின் வசை மொழிகளை உன் காதுகள் கேட்டத்தவறு! கோழைக் கூட்டங்களுக்கு வீரத்தின் விலை தெரியாததில் ஆச்சரியமில்லை. அதனால் என்னை அரக்கன் என்றதிலும் பாதகமில்லை! வா, மேனகா! வாஞ்சையோடு அழைக்கிறேன் வர மறுக்காதே!

மேனகா: யாருக்கு யாரிடத்தில் வாஞ்சை? அரசர்க்கரசே! தமிழ் வளங் கண்ட மேதையே!! கலைகளின் பாது காவலரே!!! உம்மை வேண்டி ஒன்று கேட்கிறேன். நான் என்ன தவறு செய்தேனென்று இப்படி வஞ்சிக்க இழுத்து வந்தீர்?

வாரணன்: என்னைப் பற்றி நீ நன்றாகத்தான் தெரிந்து வைத்திருக்கிறாய் ஓஹோ... இல்லை யென்றால் அன்று சுயவரத்தின் முப்பது நாளிகைக்கு முற் பொழுதில் என்னைக் கண்டு உன் மோகனப் புன்னகையைப் பரிசாக அளித்திருக்கமாட்டாய்!

மேனகா: இல்லை யென்று நான் சொல்ல வில்லை. அதைத் தவறாக எண்ணக் கூடாது. தமிழ் வேந்தர்க்கு வேந்தர், பராக்கிரமசாலி, அதோடு பண்பு நிறைந்தவர் என்று எண்ணும் போது ஏற்பட்ட பெருமையின் காரணம்—மனிதனை மதிக்கும் போது ஏற்படும் புன்னகை! வேறொன்றுமில்லை!

வாரணன்: அப்படியென்றால் எனக்கேன் மாலையிட மறுத்தது உன் மனம்?

மேனகா: சுயவரத்தின் சூழ்ச்சிக் காரணம்!

வாரணன்: ஆனால் ஆசையிருந்தது. ஏன் பேசாமலிருக்கிறாய்? பேசு பேரழகுப் பிழம்பே! அழைத்து வந்ததே அதற்குதான்!

மேனகா: மன்னர்க்கு மன்னவா! மதி தடுமாறுவது மனித இனத்திற்கு சகஜமானாலும், மன்னர் பரம்பரைக்கு பெரும் வைரி! பாண்டி மன்னன் நிலா வழகர், ஒரு நாடோடி மாதுவால், நாட்டை விட்டே ஓட நேர்ந்தது—

வாரணன்; இப்போது உன் கணவர் நாடு கடத்தப் பட்டது போல்!

மேனகை: (வெட்கி) வாலிபத்தில் புலன்கள் வரம்பு மீறுவது சகஜம், நம்மைப் போல்! ஆனால் வாழ்க்கைப் பட்டப் பிறகு ஆணோ, பெண்ணோ அதை மறந்து விட வேண்டியதுதான்.

வாரணன்: இருந்தாலும் உன் கணவன் மறக்க மறந்துவிட்டான்! மேலும், அழகு ஒருவரையும் தேடுவதில்லை. அதைத்தான் அனைவரும் தேடிச் செல்கிறார்கள்!

மேனகா: உங்கள் மனைவியும் அழகாகத்தானே இருக்கிறார்கள்? வேந்தே!” பண்பே உங்களிடமிருந்துதான் பிறந்ததாக மக்கள் சொல்வார்களென்று” கேள்விப்பட்டிருக்கிறேன். அது பொய்தானா?

வாரணன்: மெய்தான்! வாரணன் பண்புகெடாதவன்தான்-பண்புகெடச்

செய்துவிட்டது உன் கூட்டம்! தமிழ் வேந்தன் ஒருவரையும் கெடுத்தது கிடையாது—கெடுக்கத் தூண்டியது உன் கேடு கெட்டக் கூட்டம்! உன் அழகை ருசிப்பதாக திட்டமிட்டிருந்தால், சுயவரம் நடந்த மறுகணமே உன்னைச் சுவைக்கும் முதல் புருஷன் நானாகத்தானிருந்திருப்பேன்—எனக்கிருக்கும் பராக்கிரமத்தால்! ஆனால் பண்பு அந்தப் பாதையில் முள் வேலி போட்டுவிட்டது. இன்று அந்தப் பண்பைத் துச்சமாக மதித்து விட்டேன் பழி வாங்கும் அத்தியாயத்திற்கு! தமிழ்த் தாயின் மேன்மையையே மறந்துவிட்டேன் மேனகா, உன் கணவனின் தம்பி செய்த தகாத செயலுக்காக!

மேனகா: யார்......அச்சுதரா? அப்படி என்ன அவர் செய்துவிட்டார்?

வாரணன்: அழகு பிம்பமே! அதோ பார்! அந்த மதில் சுவருக்குப் பக்கத்தி லெழும்புகிறார்களே மண்டபம்—இல்லை, கற்பழிக்கப்பட்டவளின் கல்லறை அந்த அரசிளங் குமரி—அழகுவரை ஆயிரம் மேனகாக்கள் ஒன்று சேர்ந்தத் தங்கச் சிலை—இந்த வாரணனோடு பிறந்த வனிதையர்சிரோன்மணி, அவளை வாழவிடாமல்—வதங்கிச் சுருள—வாளையுருவி தன் வயிற்றிலே பாய்ச்சிக் கொள்ளுமளவிற்கு அக்ரமம் செய்துவிட்டான் அந்த அதர்மன் அச்சுதன்!

மேனகா: ஆ......!

வாரணன்: அவளிட்ட கூக்குரல்—அதனாலெழுந்த என் சபதம்—இதோ, நீ இந்த கண்ணாடிச் சுவர்களுக்கிடையே கண்ணீர் சிந்துகிறாய். உங்களை வெட்டி வீழ்த்த எனக்கு வெகு நேரம் பிடிக்காது—வாழைத் தண்டுகளை வெட்ட வாள் கூர்மை வேண்டுமா? அது வகையானதல்ல என்று தீர்மானித்தப் பிறகுதான்—உன்னை வாழா வெட்டியாக்குகிறேன்! இதனால் உன்னை கசக்கிப் பிழிய கருதமாட்டேன். நீ, மெல்லிதழ் விரித்த முல்லை. அந்த மென்மையின் மேன்மை எனக்குத் தெரியாமலில்லை. உன் மூலமாக அவர்களைப் பழி வாங்கக் கருதியிருக்கிறேன். சிங்காரச் சிட்டுக் குருவியே! நீ எங்கு வேண்டுமானாலும் இந்த அரண்மனையில் பறக்கலாம். என் எச்சில் பட்டுவிட்டப் பிறகு என் தங்கை இளநகைபோல் நீ இறக்கத் துணியமாட்டாய் என்று எனக்குத் தெரியும். காரணம், பண்பு எல்லோருக்குமிருந்தாலும், பிறந்தது தென்னகத்தில்தான்! உன் ஜீவனுள்ளவரை இந்த அரண்மனையில் உனக்கும் ஓரிடமுண்டு. அதைக் கண்டு அந்த சோமனும், அச்சுதனும் சுருண்டு சுருண்டு துடிக்கவேண்டும்! சோமனோடு மட்டுமென்ன நீ சொர்க்கத்தின் வாசலையா தட்டியிருக்கப் போகிறாய்? இல்லை அவன் தம்பிதான் என்ன தராத இன்பத்தைத் தந்துவிட்டான்? வெறும் சோளத்தட்டுகள்! ஏன் விழிக்கிறாய்? தம்பி என்று சொன்னதற்கா? எனக்கெல்லாம் தெரியும். உலக முழுதும் என் ஒற்றர்கள் முற்றுகையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். வா, மேனகா! பழிவாங்கும் திட்டத்தை நான் தீட்டிய புதுமை வருங்கால வரலாற்றிலே, ஆச்சரியக் கண்களால் அலசுவார்கள்! நெருப்பு வார்த்தைகள் பேசி உன் நெஞ்சத்தைத் தொட எனக்கு ஆசையில்லை. பனிப் பேச்சுகள் பேசி உன்னைப் பாழ்படுத்துவதில் ஆனந்தம் காண்கிறேன். அதை உன் கணவன்மார்களுக்கு அறிவித்தப் பிறகு அவர்கள் படும் அவஸ்தையில்தான் நான் வஞ்சத்தின் நிஜ ரூபத்தை வர வேற்கப் போகிறேன்! வா, கண்ணே!

மேனகா: அரசே!

வாரணன்: அதைரியப்படாதே!

மேனகா: ஐய்யோ, அரசே, (விளக்கணைகிறது) ஆ...ஆ...ஹா!

[விளக்கு ஏற்றப்படுகிறது. கதவைத் தட்டும் ஓசையைக் கேட்டு]

வாரணன்: மேனகா! நீ உள்ளே செல்! (அவள் தலை குனிந்துப் போகிறாள்) யாரது...உள்ளே வரலாம்!

[சந்திரசூடன் வருகிறான்]

சந்திரசூடன்: வணக்கம் தந்தையே! அந்த தருக்கன் சோமன்—காட்டுமிராண்டிகளின் படைத் திரட்டி நம் நாட்டை நோக்கி வருகிறானாம்!

வாரணன்: கையாலாகாதக் கழுதைகள்! நம் காலாட் படை ஒன்றையனுப்பியே அவர்களை விரட்டியடி! மீறினால், அதற்காக நீ போய் விடாதே! குதிரைப் படைகளோடு நம் தளபதி பரிதிவண்ணனையும் சேர்த்தனுப்பு!

சந்திரசூடன்: உத்தரவு தந்தையே!

[சந்திரசூடன் போகிறான். தபோதனன் வருகிறார்]

தபோதனன்: அண்ணா!

வாரணன்: என்ன வேண்டும்?

தபோதனன்: சோமனை எதிர்ப்பது சொப்பனம் காண்பது! அவர்கள், படை பலத்தைப்பற்றி நான் சொல்லவில்லை, நம் நடை பலத்தாலேயே நசுக்கிவிடலாம்! இருந்தாலும், நிமித்திகர்கள் தங்கள் கணிதத்தை நிர்ணயித்ததில், நிச்சயப்படுத்தப்படுகிறார்கள்.

வாரணன்: எதை?

தபோதனன்: வெற்றியை!

வாரணன்: வீணர்களின் வெறிப் பேச்சுக்கள், என் காதுகளில் நுழையும் சமயம் இதுவல்ல! இளநகை விஷயத்தில் உன் ரத்தம் கொதிக்காமலா இருக்கிது?

தபோதனன்: அதற்காகத்தான், அநீதியான செயலைச் செய்திருக்கிறீரே!

வாரணன்: போ, வெளியே! வேதாந்தம் பேசும் வெறியனே! எனக்கே புத்திபுகட்டப் புறப்பட்டுவிட்டாய்!

[அவர் போகிறார்]

## காட்சி 4.

[குமரி நாட்டு ஒதுக்குப்புறத்தில் ஒரு குகை. சூரியன் மேற்கில் மறைந்துக் கொண்டிருக்கிறான் குகையினுள் சோமன், அச்சுதன், தளபதி இருவர்கள் மற்றும் காவலர்கள் இருக்கின்றனர்.]

சோமன்: நான் நினைத்தேன்...... வாரணன் படை பலமிக்க பராக்கிரமன் என்று...இருந்தாலும் ஒரு நம்பிக்கை!

தளபதி: 2. நாளையப் போருக்கு, இறங்கவேண்டுமானால், இங்கிருக்கும் நாம்தான் மிகுதி!

தளபதி! 1. அதற்காகத்தான், நானும் அச்சுதரும் சேர்ந்து ஒரு ஆலோசனை செய்திருக்கிறோம்! அது வெற்றி பெற்றால் அனைவருக்குமே மகிழ்ச்சிதான்!

சோமன்: அது என்ன?

தளபதி: 1. காட்டு வாழ்க்கையே நமக்கு களிப்பூட்டும் இன்ப வாழ்க்கை! நாட்டு வாழ்க்கையை நாடவா, இந்தப் போர்? கயவஞ்சகனைப் பழி வாங்கப் போட்ட திட்டம்!

சோமன்: நான் அறியக் கூடாததா?

தளபதி: நடக்கப்போவதுதானே? ராஜா! நேற்று தபோதனன்—வாரணனின் தம்பியை கோபுர வாசல் வீதியிலே சந்தித்தேன்! அவனுக்கு அண்ணன்மீது அகலாத பகைமை!

சோமன்: காரணம்?

தளபதி: 1. மன்னர் பதவி! இன்று மன்னன் வாரணனோடு தேவி மேனகா அம்மையார் வருவார்கள்.

சோமன்: அதெப்படி?

தளபதி: அதில் தானிருக்கிறது அவன் மூளையின் கனம்!

[காதில் ஏதோ சொல்லுகிறான்]

சோமன்: வரலாமென்று எதிர்பார்க்கிறேன்! மரியாதையும், தைரியமும் உடைய வாரணன் மறுக்கமாட்டான் வருவதற்கு!

[சேவகன் வருகிறான்]

சேவகன்:—மாஹாராஜ்! மன்னர் வாரணன் வருகிறார்!

[வாரணரையும், மேனகாவையும் தபோதனர் அழைத்து வருகிறார். சோமகன் மறைந்துக்கொள்கிறான்]

தளபதிகள் இருவரும்: வருக வருக தமிழ மன்னவா, வருக! வரத் தவறமாட்டீர்கள் என்பதுதான் எங்கள் முடிவு!

வாரணன்: அது சரி, எங்கே அந்தக் கோழைகள்?

அச்சுதன்: எதிரே நிற்கும் என்னைப் பார்த்தால் அவர்களுள் ஒருவன் என்று தெரியவில்லை?

மேனகா: தம்பீ......!

வாரணன்: சுண்டெலிப் பயலே! உன் அண்ணனிடம் பேசவேண்டும்!

அச்சுதன்: அதை என்னிடமே சொல்லலாம்!

வாரணன்: அழைத்தது அவன்! மனைவியின் கற்பு களங்கமானாலும் கவலையில்லை—களிப்புடன் ஏற்று—என் காலடியில் வீழ்ந்து மன்னிப்பு கேட்டுக் கொள்ளுகிறேன் என்று சொல்லியனுப்பினானே.........

[இது சமயம் மறைந்து நின்ற சோமன், வாரணன் மார்பிலே அம்பு பாய்ச்சுகிறான்.]

வாரணன்: ஆ.......! அடப்பாவிகளா? சுத்த வீரர்களா இந்த சோம்பேறிச் செயலைச் செய்தீர்கள்? இப்போதும் ஒன்றும் மூழ்கிவிடவில்லை! [வாரணன் வாளை உருவுகிறார். பக்கத்திலிருந்த தளபதிகள் தங்கள் கட்டாரிகளின் மூலம் வேந்தனை வீழ்ச்சியடையச் செய்கிறார்கள். கட்டாரிகளின் தாக்குதலுக்குப் பிறகு, எதிரே நின்ற தம்பி தபோதனனை நோக்கி]

தம்பி.........!

[அருகே நெருங்கும்போது தபோதனனின் கடைசி கட்டாரிக் குத்து வீரனை வீழ்ச்சியடையச் செய்கிறது]

நீயுமா தம்பி, இந்த நீசச் செயலைச் செய்ய நினைத்தாய்? இந்தத் துன்பம் எதிர்கால சரித்திரத்திலே நீ படுவாய்!

[வீரன் வீழ்ந்தான். சூரியனும் மறைந்தான்]

மேனகா: அக்ரமம்! இது அக்ரமம்! (தபோதனனை நோக்கி) அண்ணன் என்ற பாசம் உன் உடலிலிருந்து அறுபட்டுவிட்டதா, அநீதிப் பிண்டமே!

சோமன்: (கோபமாக) மேனகா! மூடு வாயை! உன்னைக் களங்கப்படுத்திய காதகனைப் பற்றியா கடிந்து பேசுகிறாய்? பழிக்குப் பழி இந்த மூலத்திலாவது கிடைத்ததே என்று சந்தோஷப்படு!

மேனகா: சந்தோஷப்பட வேண்டியது யார்? நானா, அல்லது நீங்களா? இல்லை, காட்டிக் கொடுத்த கண்ணியவான் இருக்கிறாரே...இந்த கயவனா? யார்? யார்? உன் தம்பியைக் கேளும்! தகாத செயலுக்காக, ஒரு பண்பு நிறைந்த—படித்த மேதை—தமிழ் வேந்தனின் வீழ்ச்சிக்குக் காரணமாக நின்ற உம் தம்பியைக் கேளும்! என்னை எச்சில்படுத்திய பண்டமாக்கிவிட்டாலும், மன்னன் வாரணன் பிறகு மனம் கசிந்து அழுதான் பண்பை நினைந்து, நினைந்து! எனக்கு விஷமாகத்தான் ஆனார், அதே நேரத்தில், அவர் அந்த நிலைமைக்கு வரக் காரணம், உம் தம்பி—அச்சுதர்—வாரணரின் தங்கை இளநகை, சந்தனக் காட்டிற்கு வந்தபோது பலாத்காரமாக அவள் கற்பைப் பாழ்படுத்தினாரமே—அந்தக் குற்றத்தை யார் மன்னிப்பது? வாரணர் தங்கை என்று தெரிந்தும் வறண்டிருந்த காம வெள்ளம் புரண்டோடியது போலும்! அந்த நச்சுச் செய்கையின் நாசகாலம் தான், இன்று நானும் களங்கம்—நீரும் கலக்கம்—இதோ நிற்கிறாரே ஐந்தாம்படை அயோக்கியன் தபோதனன்—சந்திரசூடன் ஏமாந்துவிடமாட்டான் என்பதை எண்ணிப் பார்த்தாரா—பதவி மோகம் பிடித்த பாழ் மனிதர்! சாம்ராஜ்யங்களின் சத்துருக்கள் பெண்கள் என்று சரித்திரம் சொல்லவைக்க ஏற்பட்ட மகான் உன் தம்பி அச்சுதர்! ஆண்களின் அயோக்யத்தனம் வளராவிட்டால், பெண்களின் பெருமதிப்பே அழியாது—அழியவும் முடியாது என்பதை உலகம் எப்படி உணரும்.

[ஒரு சேவகன் வருகிறான்]

சேவகன்: மஹாராஜ்! சந்திரசூடன் புயலென புறப்பட்டுவிட்டானாம்—செய்தி கேட்டு! புறப்படுங்கள் சீக்கிரம்!

......

சோமன்: மேனகா! நடந்ததை மறந்துவிடு! அச்சுதனை விசாரித்து இனி ஆகப்போவது ஒன்றுமில்லை. நான் உன்னை மன்னித்துவிட்டதே அவன் செய்த அயோக்யத்தனத்துக்காகத்தான்!

[மற்றொரு சேவகன் வருகிறான்]

சேவகன்: 2. வணக்கம் இளவரசே! உங்களைத்தான தேடிப்புறப்பட்டேன். தங்கள் தந்தை, தங்களை நாடு கடத்தப்பட்ட தண்டனையை, மக்களால் உடைக்கச் செய்து, மீண்டும் வரும்படி உத்தரவு சொல்ல என்னை அனுப்பி இருக்கிறார்!

சோமன்: சந்தோஷச் செய்தி! தளபதிகளே! குதிரை தயாராகட்டும்! புறப்படுங்கள்! புறப்படு மேனகா! நாடு சென்று அக்கினியின்மூலம் தீட்டைத்துடைத்துவிடலாம்!

தபோதனன்: என் கதி?

தளபதி: 1 அதோகதி!

[எல்லோரும்புறப்பட்டுவிடுகின்றனர்]

தபோதனன்: ஐயோ! அண்ணா! உனக்கு வஞ்சகம் செய்த பாவி வதைப்பட போகிறான்! எனக்கு வாழ இடமில்லை! வருகிறேன்—நானும் உம்மோடு வருகிறேன்! ஐயோ! சாவதா? இதற்குள்ளாகவா? முடியாது...! சந்திரசூடன் வாழவிடமாட்டானே......

[குதிரைகள் வரும் காலடி சத்தம் கேட்டு திணறியவாறு திசை தெரியாமல் ஓடுகிறான்]

[திரை]

# நாடு பிரிவதால் ஏற்படும் நன்மைகள்

அந்த நாளில் மனிதன் குகைகளிலும், பொந்துகளிலும், காடுகளிலும், வாழ்ந்து வந்தான். பின்னர் எப்படியோ நாகரிகம் பெற்றான். அவன் வாழ்வில் மாற்றங்கள் ஏற்பட்டன; சிந்தித்தான் அவன் எண்ணங்களில் 'நல்லவை' தோன்றிற்று; மேலும்சிந்தித்தான் அவன் "முழுமனிதனாக" ஆக பல திட்டங்கள், வழி வகைகள் கிடைக்கப் பெற்றான்.

குகைகளையும், பொந்துகளையும் வெறுத் தொதுக்கி, குடிசைகளை, மாளிகைகளை உண்டாக்கினான். குடும்பங்கள் அமைத்தான். கிராமம் தோற்றுவித்தான். பட்டணங்களை பெற்றெடுத்தான் பின்னர் 'தனக்கு' என்ற தன்மை நீங்கி 'தங்களுக்கு' என்ற 'நல்லெண்ணம்' மனிதன்உள்ளத்தில் முதன் முதலில் எழுந்தது. அதன் விளைவு, தங்களுக்கு என ஒரு நாடு, ஒரு தேசம் தேவை என்ற ஒரு முடிவிற்கு வந்தனர் மக்கள்.

அன்றுமுதல் இன்றுவரை உலகின் எப்பகுதியிலும "நாட்டுப் பிரிவினை" என்ற உரிமை முழக்கம் கேட்டுத்தான் வருகிறது. "நாடு பிரிவதனால் ஏற்படும நன்மைகள்" அதிகம் என்பதை உணர்ந்துவிட்ட காரணத்தால், உலகின் மூலை முடுக்கெங்கும் இந்த முழக்கத்தை மக்கள் எழுப்பிவிட்டார்கள். வெற்றியும் கண்டு விட்டார்கள். முழு வெற்றியல்ல?

முழுவெற்றி காணும்வரை இந்தக் குரல் ஒலித்துக் கொண்டேதானிருக்கும். 'நாடடுபபிரிவினை' தேவை என்றகீதம் கேட்டுக்கொண்டேதானிருக்கும். இந்த ஒலியை, கீதத்தை, உரிமை முழக்கத்தை எந்த வல்லராசாலும், ஆதிபத்யத்தாலும் தடை செய்துவிட முடியாது.

"நாம்" "திராவிடநாடு" பிரிவினை வேண்டுகிறோம், பிரிந்தால் நலன் விளையும், பலன் உண்டு, வளம் பெருகும், இல்லாமை, கல்லாமை நீங்கும், மகிழ்ச்சி இருக்கும், பஞ்சமும்-நோயும் நீங்கும். எனவே நாட்டுப் பிரிவினைதேவை என்றால் "திராவிடம்" பிரிந்தால் வாழமுடியுமா? இப்படி ஒரு கேளவியை எழுப்புகிறார்கள்.

இந்தக் கேள்வி எழுப்புவதற்கு முன்பே "திராவிடரியக்கம்" இந்தக் கேள்வியை எழுப்பி, வாழமுடியும்; அதுவும் தனித்து நின்று வாழமுடியும் என்று எத்தனையோ காரணங்களையும், எவ்வளவோ விளக்கங்களையும், எண்ணத் தொலையா சான்றுகளையும் காட்டி மக்களிடையே "கொள்கை விளக்க பிரச்சாரம்" செய்து விட்டது உண்மை இதுவாக இருந்தும், இன்னும் சில கட்சிகளும் நாடடை ஆளும நலைவர்களும் (?) இந்த "பிரிவினை" மனப்பான்மையைக் கண்டிக்கிறார்கள்.

நாட்டுப் பிரிவினையால் ஏற்படும் நன்மைகளும், முழு உண்மைகளும் தெரியாதவர்கள் இவர்கள் என்று நம்மால் சொல்லிவிட முடியாது. தெரிந்தும்கண்டிக்கிறார்களே ஏன்? இங்கே தான் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது.

நாம் கோரும் நாட்டுப் பிரிவினை வடநாட்டுத் தொடர்பு நீங்கிய தனி அரசுரிமை. "சுதந்திர - சமதர்ம - திராவிட கூட்டாட்சி" மக்களுக்காக, மக்களாலேயே நடத்தப் பெறுகிற ஒரு நல்லாட்சி.

## நாடு பிரியோணும்!

(எழில் கலைஞன்)

நாடு பிரியோணும்—திராவிட
நாடு பிரியோணும் (நாடு)

ஓடுகின்ற நீரைத் தேக்க
உயர்ந்த அணைகள் கட்டியே
காடும் செந்நெல் விளைவுகாணும்
கழனியாக்கி மகிழ்ந்திட (நாடு)

ஒன்றை நம்பி வாழும் நாடு
உலக மீது பலவுண்டு
என்றும் பல பொருள்களையும்
இயற்கை கொண்ட நமது தென் (நாடு)

பொன்னுடனே பலவளமும்
பொருந்தி வாழ்ந்த நாடிதன்
தொன்மைப் பெருமை அழிந்திடாமல்
துலங்க வேண்டுமாயின் தனியே (நாடு)

வள்ளுவரை உலகம் காண
வாய்ப்பளித்த நமதரும்
தெள்ளு தமிழ் அரசோச்சி
திருவிடம் சிறக்கவே தென் (நாடு)

கடவுள் மோட்சம் என்று கூறி
கதை யளப்போர் தம்முடன்
வடவர் ஆதிபத்ய மொழிந்து
வறுமை நீங்கி வாழவே (நாடு)

எதிர்ப்பவர்களோ? வடநாட்டிற்கு வால் பிடிப்பவர்கள். வடநாட்டின் தயவில் வாழுபவர்கள். வடநாட்டின் தொடர்பு நீங்கினல் பொதுவாழ்வி லிருந்தே "துறவறம்" கொள்ள வேண்டியவர்கள் ஆகியோர் எனவே தான் இவர்கள் நாட்டுப் பிரிவினை தீது என்கிறுர்கள்; கண்டிக்கிறுர்கள்; சந்து முனை சிந்தும்பாடி கிட்டுகிறுர் கள்.

கண்டிக்கும் "காங்கிரஸ் கட்சி"க்கு தலைமை நிலையப் வடநாடு; ஆணவக் காரனின் கோட்டை எனக் கூறப் படும் "புது டெல்லி"

கண்டிக்கும் "கம்யூனிஸ் கட்சி"க்கு தலைமை நிலையம் "மாஸ்கோ"வானு லும் இந்திய உபகண்டத்தை பொறு த்தவரையில் "டில்லி"தான் அவர்க ளுக்கு தலைமை அலுவலகம்.

கண்டிக்கும் "சோஷலிஸ்டு கட்சி" க்கும் "டில்லி"தான் பிறப்பிடம். தங்குமிடம்.

இந்தக் கட்சிகளும், இதன் தலைவர் களும் நாட்டுப் பிரிவின்யை கண்டிப் பதில் ஆச்சரியமில்லை.

தென்னகத்தில "தமிழரசுக் கழ கம்" அதன் தலைவர் ம. பொ. சி. கண்டிக்கிறுரே? ஆம் கண்டிக்கிறுர் உண்மை!

இலங்கையை ஆண்டான் "மாவீ ரன் மறத்தமிழன்" "இராவணன்" இவனுக்கு தம்பிமார்கள் உண்டு. ஒரு வன் "கும்பகர்ணன்" நாட்டின் மானம் காப்பாற்றப் படுவதே, தன் மானம் காப்பது, நாட்டின் நல்வாழ் வுதான் தன்வாழ்வு என்பதே இவன் கொள்கை.

மற்ருெரு தம்பி "விபிடனன்" நாட்டைக் காட்டிக் கொடுத்தான். துரோகியானன். உலகம் உள்ளள வும் துரோகி என்ற பட்டத்தோடு அவன் பெயர் விளங்கும். விபிடனன் என்ற பெயரைக்கூட யாரும் தனக்கு வைத்துக் கொள்ள முடியாத அள விற்கு அவன் கெட்டவனுனன். ஆம் துரோகியானன்.

ம. பொ. சியைநாம் இப்படித்தான் விபிடனனுடன் ஒப்பிடுகிருேம். எனவே நாட்டுப் பிரிவினையை கண் டிப்பதிலும் ஆச்சரியமில்லை. மற்றும் சில்லரைகள், கெட்டுப்போனதுகள், சேளாக் காதுகள், காண விழிகள், இன்னும் எது எதுகளோ கண்டிக் கிறது. ஆனாலும் நான் கட்டுரையின் துவக்கத்தில் குறிப்பிட்டுள்ளபடி "நாட்டுப் பிரிவினை" கீதம் மக்களின் இருதய கீதமாகி விட்டது "நாட்டுப் பிரிவினை" ஒன்றுதான் நம் நல்வாழ் விற்கு "வித்து" என்று மக்கள் கருதி விட்டார்கள்.

1,66,381 சதுர மைலும் 7½கோடி க்கு மேற்பட்ட மக்களும் கொண்ட, மொழி-கலை - இலக்கியம் - நாகரிகம் அனைத்திலும் ஒரு சமநிலை கொண்ட ஒரே இனம் திராவிட இனம் தனித்து வாழ விரும்புகிறது. இந்த இலட்சி யத்தில் வெற்றி பெற்றுவிடுவோம் என்ற நம்பிக்கையும் திராவிட இனத் திற்கு இருக்கிறது.

அறிஞர் "அண்ணு" அவர்கள் உறுதியாகவேகுறிப்பிட்டார் 1960ல் "திராவிடம்" தனித்தியங்கும் என்று. அண்ணுவின் உறுதியில் நமக்கு நம் பிக்கையுண்டு.

"உலகப் படம் தீட்டுவோர்" 'திரா விடநாடு' என்ற நாட்டிற்கு ஒருதனி வர்ணம், கோடு இடுவார்கள் 1960-ம் ஆண்டில், "சரித்திரம் எழுதுவோர்" திராவிடநாடு சரிதம் எழுத ஆராய்ச் சித்துணை, அனுபவ உண்மை, வர லாற்றுத் தெளிவு, ஆகியவற்றை தேடுவர் 1960-ம் ஆண்டில்: எனவே,

"திராவிடநாடு திராவிடருக்கே என்போம்"

ந. தருமலிங்கம்.
முத்துப்பேட்டை

# ஆப்கானிஸ்தானம்

மேற்குப் பாகிஸ்தானத்திற்கும் பாரசீகத்திற்கும இடையே யுள்ள மலைநாடு, ஆப்கானிஸ்தானம் என அழைக்கப்படுகிறது. இந்தியாவைக் கைப்பற்ற வேண்டுமென்று எண் ணங்கொண்டு, இந்தியாவின் மேல் மேற்கேயிருந்து படையெடுத்தவர் களில் பெரும் பாலோர் இந்நாட் டைக் கடந்தே வந்தவர்கள். இந்தி யாவில் தோற்றமளிக்கும் இந்து கிஷ் மலைத் தொடரின் பெரும் பகுதி இந்நாட்டிலேயே இருக்கி றது. இங்கு பல உயரமான சிகரங் கள் காட்சி யளிக்கின்றன. அவை களில் சில சிகரங்கள் 2000 அடி உயரத்திற்கு மேலும் உள்ளன.

ஆப்கானிஸ்தானத்தில், நிலக்கரி, இரும்பு முதலிய தாதுப் பொருள் கள் ஏராளமாக கிடைக்கின்றன. இங்கு சில சமயங்களில் மிக கடுமை யான தாங்க முடியாத, வெப்பமும், சில சமயங்களில் சகிக்க முடியாத, குளிருமாக இருக்கும். காபுலிலும் கஜினியிலும் 100 டிகிரி பாரன் ஹீட்டுக்கு மேல் வெப்ப நிலை உயர்வதில்லை. பிப்ரவரியில்—10 டிகிரி பாரன்ஹீட் அல்லது—15 டிகிரி பாரன்ஹீட் வரையில் வெப்ப நிலை குறைகிறது. இங்கு சராசரி 11 அங்குல மழை பெய்கி றது..

## நாட்டின் பரப்பு

ஆப்கானிஸ்தானத்தின் பரப் பளவு 2,50,000 சதுர மைல்கள்.

## ஜனத்தொகை

இந்த நாட்டின் ஜனத்தொகை, 1948 வது வருடத்திய கணக்குப் படி, 120 இலட்சம். இங்குள்ள மக் கள் ஆப்கானியர் என்று அழைக் கப்படுகிறுர்கள். இவர்கள் அனைவ ரும் இஸ்லாம் மதத்தையே தழுவி வருகின்றனர். இந்த நாடு பெரும் பாலும் மணற்பாங்கான பிரதேச மாகையால் இங்குள்ள மக்கள் போக்குவரத்திற்காக ஒட்டகங்களை உபயோகித்து வருகின்றனர். ஆனல் முக்கியப் பட்டணங்களுக் கிடையே பஸ், லாரி, போக்குவரத் தும் நடைபெறுகிறது.

## தொழில்

இங்குள்ள மக்களின் முக்கிய மான தொழில் விவசாயம். குறைந்த அளவு கிடைக்கக் கூடிய நீர்ப்பாசன வசதியைக் கொண்டு நிறைந்த அளவு சாகுபடி செய்ய வேண்டி யிருக்கிறது. கரும்பும் பருத்தியும் இந்நாட்டில் ஓரளவுப் பயிர் செய்யப்படுகிறது. இந்நாட்டு வாணிபத்தில் 80 சத வீதம் பாகிஸ் தான் வழியாக நடைபெறுகிறது. இவர்கள் கைத்தொழில வேலையில் மிகவும் பெயர் பெற்றவர்கள். மிக

அழகான பூ வேலைகள் செய்த கம்பளங்கள் நெய்கிறார்கள். மேலும் ஆடுகள் மேய்த்தும் வருகிறார்கள்.

## ஏற்றுமதி

இந்தியாவிலிருந்தும், பாகிஸ்தானிலிருந்தும் பருத்தி, நெசவுப் பொருள்கள், சர்க்கரை, தோல் சாமான்கள், தேயிலை, காகிதம், சிமெண்ட் முதலியன இங்கு கொண்டுவரப் படுகின்றன. ஆப்கானிஸ்தானத்திலிருந்து வாசனைப் பொருள்கள், பழங்கள், சமக்காளம் முதலியவை இந்தியாவிற்கும், பாகிஸ்தானத்திற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## மொழி

ஆப்கானிய மகளிர் பர்தா என்னும ஆடை அணிவர். இம்மக்கள் பேசும் மொழி 'புஷ்டு' எனப்படும். ஆப்கானிஸ்தானத்தில் சமீபகாலம் வரையில் பாரசீகம் அரசாங்க மொழியாக இருந்தது. ஆனால் இப்போது புஷ்டுவே அரசாங்க மொழியாக இருந்து வருகிறது.

## கல்வி

காபுலில் கலையை வளர்க்க, நன்முறைக்குக் கொண்டுவர, முன்னேற்றத்திற்கு வழிகாட்ட ஒரு கலைக் கல்லூரியும், தேசத்திற்காக சேவை செய்ய, நாட்டை பாதுகாக்க, மக்களை மாவீரர்களாக்க ஒரு இராணுவக் கல்லூரியும் உள்ளன. ஆரம்பக்கல்வி இலவசமாக அளிக்கப்படுகிறது. வருங்கால இளைஞர்கள் கல்வியில் முன்னேற்றம் பெறவும், நாட்டை நிர்வகிக்கக் கூடிய பொறுப்பு அவர்களைச் சார்ந்தது என அறிந்து சிறுவர்களுக்கு ஆரம்பக் கல்வி கட்டாயக் கல்வியாக வைக்கப்பட்டிருக்கிறது.

## தலைநகரம்

ஆப்கானிஸ்தானத்தின் தலைநகர் காபுல். மற்ற முக்கிய நகரங்கள் கந்தகார், ஹெராத் முதலியன. காபுலில் 1948-ம் வருடத்திய ஜனத்தொகைக் கணக்குப்படி ஜனங்கள் 2,06,208. கந்தகாரில் ஜனங்கள் 77,186. ஹெராத்தில் ஜனங்கள் 75,632.

## வரலாறு

இந்நாட்டின் ஆதி வரலாறு தெளிவாக விளங்கவில்லை. கி. மு. 4 ம் நூற்றாண்டிலேயே இது முழுவதும் மகா அலக்ஸாந்தரால் வெல்லப்பட்டது. இந்தியாவின் மீது படையெடுத்த முகமதியர்களும், மொகலாயர்களும் ஆப்கானிஸ்தானத்தைக் கடந்து இந்துக்குஷ் மலைக்கணவாய் வழியாக வந்தவர்களே. மொகலாயர் பலம் பெற்று, ஆட்சி செய்துவரும் காலத்தில் அவர்களது சாம்ராஜ்யம் மிகப் பரந்து கிடந்தது. அப்பொழுது ஆப்கானிஸ்தானமும் மொகலாய ஆட்சிக்குட்பட் டிருந்தது. இந்த நாட்டை ஆசியாவின் போர்க்களம் என்று வழங்கி வந்தார்கள். கிரேக்கர்களும், அராபியர்களும், மங்கோலியர்களும், பாரசீகர்களும் ஒவ்வொரு காலத்தில் இதை ஆண்டு வந்துள்ளனர்.

18-ம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலிருந்து ஆப்கானிஸ்தானத்தின் வரலாறு ஓரளவு விவரமாக மாக விளங்குகிறது. ஆப்கானிஸ்தானத்தை நாதர்ஷா என்ற பாரசீக மன்னன் ஆண்டு வந்தான். அவன் இறந்த பிறகு ஆப்கானிஸ்தானத்திற்கு ஒரு நல்ல தலைவனை தேர்ந்தெடுக்க மக்கள் மன்றம் தீர்மானித்தது. அதன்படி அஹமத்ஷா என்பவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் ஆப்கானிஸ்தான பெருமக்களால். அவன், அஹமத்ஷா, துரானியர்களின் தலைவனென்று தன்னைக் கூறிக் கொண்டான். 1761 ல் டெல்லி அருகில் நடந்த பாணிபட்டுச் சண்டையில் சமார்த்தியமாக சண்டை செய்து மகாராஷ்டிரர்களுடைய பெரும் படையைத் தோற்கடித்தான். அவன் தனது இராசசியத்தின் பரப்பை மிகவும் விரிவாக்கிக் கொண்டான். அகமத்ஷா பல வெற்றிகள் கண்டு கடைசியில் இறந்தான்.

அவன் இறந்த பின் அவனுடைய மகனை தைமூர் 1773 ல் பட்டத்துக்கு வந்தான். தைமூரின் ஆட்சியிலே நாட்டில் அமைதியின்றி கலகமே அதிகமாயிருந்தது. எங்கு பார்த்தாலும் குழப்பம். கலகத்திலும், குழப்பத்திலும் எவ்வித வெற்றியும் காணாது மடிந்தான் தைமூர். தைமூருக்கு 23 பிள்ளைகள். அவர்களில் சாமான் மிர்சா அவனுக்குப் பின் ஆச்சி பீட மேறினான். ஆனால் அரசுரிமைக்காக அந்த 23 பிள்ளைகளுக்குள் வாரிசு உரிமைப் போர் நடந்தது. அந்தப் போரில் காம்ரான் என்ற மற்றொரு மகன் வெற்றிப் பெற்றான். ஆகையால் காம்ரான் அரசாட்சி செலுத்தி வந்தான். 1831 ல் பாரசீகர்கள் ஹெராத்தை முற்றுகையிட்டனர். அக்காலத்தில் இந்தியாவிற்கு வியாபாரம் செய்ய வந்து ஆட்சியைக் கைப்பற்றி நடாத்தி வந்த ஆங்கிலேயர், ரஷ்யர்களும் ஆப்கானிஸ்தானத்தின் மீது ஒரு கண் வைத்திருப்பார்களோ என்ற ஐயப்பாட்டால் 1838-ல் முதல் ஆப்கானிய யுத்தம் மூண்டது.

பிரிட்டிஷாரிடம் சரண் புகுந்திருந்த ஷாஷுஜா என்பவனை ஆங்கிலேயர் ஆப்கானிஸ்தானத்தின் அரச பதவியில் அமர்த்தினர். 1842 ல் நாட்டைச் சுரண்டி, குள்ள நரி வேலை நடத்திய வெள்ளையரை — ஆங்கிலேயரை — பிரிட்டிஷாரை ஆப்கானிஸ்தானத்தை விட்டு விரட்டினார்கள் ஆப்கானிய மக்கள். 1849 ல் மீண்டும் ஆங்கிலேயருக்கும் ஆப்கானியருக்கும் குஜராத்தில் போர் மூண்டது. இந்தப் போரில் ஆப்கானியரும் சீக்கியரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடன், வீராவேஷத்துடன். தாய் நாட்டை அடிமை நாடாக்கக் கூடாது என்ற உணர்ச்சியுடன், உத்வேகத்துடன் சண்டை செய்தும் தோல்வியே அடைந்தனர். ஷாஷுஜாவின் மக்களில் ஷேர் அலிகான் என்பவன் காபுலில் பட்டமெய்தியதின் விளைவாக நாட்டில் குழப்பம் அதிகரித்தது. அப்போது இந்திய அரச பிரதிநிதியாக இருந்த சர் ஜான் லாரன்ஸ் உதவியால் ஷேர் அலிகான் தன் குடிகளோடு புரிந்து வந்த போரில் வெற்றிப் பெற்றான்.

1870 ல் ஷேர் அலிகானின் மகனை யாகூப்கான் தந்தைக்கு விரோதமாக, தந்தையை எதிர்த்து கிளர்ச்சி செய்தான். தனயனே தன் தந்தையின், தான்தோன்றித் தனமான நீதியைக் கண்டு அவனை எதிர்த்தான். என்னே அவனது நேர்மை. அந்தோ! ஆனால் அவன் தோல்வியடையவே அப்துல்கான் வாரிசு முறைப்படி அரசனாக நியமிக்கப்பட்டான். ரஷ்யர்கள் ஆப்கானியர்களோடு நட்புரிமை கொண்டா

டுவதை அறிந்த ஆங்கிலேயர் மீண்டும் இரண்டாவது ஆப்கானிய யுத்தத்தைத் தொடங்கினர். 1878-ல் அப்துல்கான் நாட்டை விட்டு ஓடி, அடுத்த ஆண்டில் ஆவியும்நீத்தான். அவனுக்குப் பின் பட்டமெய்திய யாகூப்கான் பிரிட்டிஷாரோடு ஒரு நேச உடன்படிக்கை செய்து கொண்டான். இவ்வொப்பந்தப்படி ஒரு பிரிட்டிஷ் பிரதிநிதி காபுலில் இருப்பதென்றும், ஆப்கானியர்களுக்கு வேண்டிய போது படை உதவி செய்வதென்றும் ஏற்படுத்திக் கொண்டனர். ஆப்கானியர்கள் வெளிநாட்டாருடைய தலையீட்டை விரும்பாமல் கிளர்ச்சி செய்து வந்த போது ஆங்கிலேயர்கள் அவர்களை படை கொண்டு தாக்கினர்கள். இதனால் பெரும்போர் மூண்டது. ஆப்கானியர்களின் அஞ்சாத தாக்குதலை எதிர்த்து நிற்க முடியாமல் ஆங்கிலேயர் அநேக இடங்களில் அவமானமெய்தினர். தோல்வியடைந்தனர்!

1891-ம் ஆண்டிற்குளாக அமீர் அப்துர் ரஹ்மான் என்னும் மன்னன் நாட்டை நல்ல முறையில் சீர்திருத்தி அமைத்தான். 1901-ல் ஹபிபுல்லா அவனுக்குப் பின் அமீரானபோது நாட்டில் நிர்வாகம் நீதியான முறையில், நலல முறையில் அமைக்கப் பட்டிருந்தது. 1919-ல் ஹபீபுல்லா கொலையுண்டிறந்தான். அவனுக்குப் பின் பட்டத்திற்கு வந்த அவனது சகோதரன் நசிருல்லாவை நீக்கிவிட்டு, ஹபீபுல்லாவின் மூன்றாம்மகனை அமானுல்லா பதவி எய்தினன். 1919-ல் அமானுல்லாவிற்கும் ஆங்கிலேயருக்கும் ஓர் சிறு போர் மூண்டது. பின் இருவரும் சமாதானம் அடைந்து 1921-ல் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டனர். இந்த சமாதான உடன்படிக்கைப் பிரகாரம் ஆங்கிலேயர் ஆப்கானியரின் பூரண சுதந்தரத்தை ஒப்புக்கொண்டனர் அமானுல்லா அரசியலில் மிகுந்த— திறமையோடு நடந்து கொண்டான். துருக்கி, பாரசிக நாடுகளுடன் நேச உடன்படிக்கை செய்து கொண்டான். அவன் காலத்தில் ஆப்கானியர்களுடைய பண்டைய பண்பாடு சிறிதளவு மறைந்து, அவர்கள் ஐரோப்பிய நாகரிகத்தைச் சிறிது சிறிதாக மேற்கொள்ள ஆரம்பித்தனர். பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமமான கல்வி முதலிய உரிமைகளை மக்களுக்கு அளிக்க அமானுல்லா அரசாங்கம் முயற்சித்த போது மக்கள் அதை எதிர்த்துக் கலகம் செய்தனர். இதனல் 1928-ல் நிலைமை மிகமோசமாகியது; 1929-ல் அமானுல்லா வெறுப்புற்று முடி துறந்தான். மறுபடியும் அரசனாகும் எண்ணம் அவனுக்கு இருந்தபோதிலும் அது கைகூட வில்லை. நாதர் கான் என்பவன் அமானுல்லாவிற்குப் பிறகு மன்னனாகத்தேர்ந்தெடுக்கப்பட்டு, 1933-ல் கொல்லப்பட்டிறந்தான். அவனுக்குப் பின் பட்டத்திற்கு வந்த சாகிர்ஷாடு நாட்டின் அடிமை நிலையை ஒழித்தான். கல்வியைக் கட்டாய மாக்கினன். மேல் படிப்புக்கு மாணவர்களை ஜப்பானுக்கு அனுப்ப ஏற்பாடாயிற்று 1934-ல் ஆப்கானிஸ்தான் சர்வ தேச சங்கத்தின் உறுப்பு நாடு ஆயிற்று. 1937-ல் ஈரான், ஈராக், துருக்கி ஆகிய நாடுகளோடு ஆப்கானிஸ்தான் ஒரு நேச ஒப்பந்தம் செய்து கொண்டது இதற்குச் சாதாபாத் உடன்படிக்கை என்று பெயர். 1946-ல் ஆப்கானிஸ்தானம் ஐ. நா சங்கத்தின் உறுப்பு நாடாயிற்று.

### அரசியல் அமைப்பு:—

ஆப்கானிஸ்தான நாட்டின் ஆட்சி முறை அரசியல் அமைப்பிற் குட்பட்ட முடியாட்சி. அரச பதவி பரம்பரையாகவாரிசு முறைப்படி வருவது. அரசாங்க அமைப்புக்கும் அரசனே தலைவன். அவசர மேற்பட்டால் சட்டங்கள் ஏற்படுத்தவும், போர் தொடுக்கவும், சமாதானம் செய்து கொள்ளவும அரசனுக்கு அதிகார முண்டு. ஆனல் அரசன் ஏற்படுத்தும் சடடங்களைதேசிய சபை எனப்படும் கீழ்சபை அங்கீகரிக்க வேண்டும். 1931-ம் ஆண்டு அரசியலமைப்பின்படி இங்கு சட்டமியற்றும் உயர்ந்த அதிகாரத்தை நாடாளும் மன்றம் பெற்றிருக்கிறது இதில் மன்னன், மேற்சபை, கீழ் சபை என மூன்று பிரிவு இருக்கிறது.

மேற்சபை அரசனல் நியமிக்கப்படுகிறது. இதன் அங்கத்தினர்கள் 45 பேர். இவர்கள் உறுப்பினர்களாக இருந்து பதவி வகித்து வருவது ஆயுள் கால முழுவதும். கீழ்சபையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, பொது ஜனங்களால் வாக்குரிமைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட 120 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். எந்தமசோதாவும் கீழ்சபையால் ஏற்றுக் கொள்ளப் பட்டு, அரசனுடைய அங்கீகாரத்தையும் பெற்றே சட்டமாக வேண்டும். ஏறக்குறையநான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நாட்டில் ஏற்படும் பெரிய பிரச்சினைகளை ஆராய்ச்சி செய்ய, ஆலோசனை செய்ய, அரசன் ஒரு பேரவை கூட்டுவான்.

அரசாங்கமானது உள் நாட்டு வெளிநாட்டுவிவகாரங்கள்,மராமத்து உழவு, வாணிபம், நீதி, சுரங்கங்கள்,

[38-ம் பக்கம் பார்க்க]

## வான மாளிகை

[27-ஆம் பக்கத் தொடர்ச்சி]

முடியா? அவன் சிங்காதனத்தில மர்ந்திருந்து அரசோச்சுவதைக் காண நாமிருவரு மென்ன அவ்வளவு உதவாக்கரைகளா? மன்னனாக நீ மணிமுடி தரித்துச் சிங்காசனத்திலமர்ந்து செங்கோலோச்சுவதை, நான் என் கண்களால் காணவேண்டும்! அப்போதுதான் என் மனம் சாந்தி பெறும்!...'' இப்படிக்கூறிக் கொண்டே, தன் தம்பி குர்ரத்தைக் கட்டியணைத்தவாறே, மறைவாக இடுப்பில் செருகியிருந்த கத்தியை உறையிலிருந்து வெளியிலெடுத்தான்!

கடைக்கண்ணல் இதைக் கண்டு கொண்டேயிருந்த குர்ரம், குஷ்ருவின் கரத்தைத் தன் பலங் கொண்ட மட்டும் தட்டிவிட்டான்! கத்தி, ஓடிக் கொண்டிருந்த ஆற்று நீரில் விழுந்தது!

“துரோகி!” என்றுகூறியவாறே, குஷ்ருவின் குரல்வளையை அழுத்தினன், குர்ரம்! குஷ்ருவின் விழிகள் பிதுங்கின! பிணமாகக் கீழே விழுந்தவனைத் தூக்கி, யமுனையாற்று நீரில் எறிந்தான் குர்ரம்! யமுனையாறு அலறியபடியே பெரும் பிரவாகத்துடன் ஓடிக் கொண்டிருந்தது! ஆற்றையே வெறித்துப் பார்த்த வண்ணம், இளவரசன் குர்ரம நின்றிருந்தான்! அவனிதயம், இனம் தெரியாத ஓர் சூனிய வெளியில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

○

சிறுவர் பகுதி தொடர் கதை

# மல்லிகா

ஜெ. எத்திராஜன்



## 3. ஏற்பாடு

அன்று மாணிக்கம் தன் அறையில் உட்கார்ந்தபடியே பலமான யோசனையில் ஆழ்ந்திருந்தான். 'எழுதப் படிக்கத் தெரியாத கிராமவாசிகளுக்குப் படிப்பின்மேல் ஊக்கம் உண்டாகும்படி செய்ய என்னென்ன வசதிகள் செய்து தர வேண்டும்' என்பதைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தான். பலகை, பென்சில் முதலியவற்றை அவர்களுக்கு இலவசமாகக் கொடுத்து ஊக்கமுண்டாக்கலாம். ஆனால் அதற்குப் பணம் வேண்டுமே! என்ன செய்வது? 'அப்பாவைக் கேட்டால் நிச்சயம் கொடுப்பார்' என்று அவனுக்குத் தோன்றியது.

உடனே அப்பாவிடம் சென்று, தானும் மல்லிகாவும் போட்டிருக்கும் திட்டத்தை விளக்கிக் கூறினான், மாணிக்கம். கடைசியாக, 'எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப் பணம் வேண்டும்' என்று அப்பாவைக் கேட்டான்.

அவன் கூறியவற்றைக் கேட்ட அப்பாவுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவம் நினைவுக்குவந்தது. ஒருசமயம் அவர் ஏதோ ஒரு காரணத்திற்காகத் தம் கிராமத்திலுள்ள சிலரிடம் ஒரு பத்திரத்தில் கையெழுத்து வாங்க நேர்ந்தது. கிராமவாசிகளில் சிலர், கையெழுத்துப்போடத் தெரியாமல் தங்கள் கட்டைவிரலில் மை தடவி அதில் பதிவு செய்தார்கள். வேறு சிலர் தங்கள் பெயர்களைச் சரியாகக்கூட எழுதத் தெரியாமல் பிழையுடன் கையெழுத்திட்டனர். உதாரணமாக, 'முனுசாமி' என்பவன், 'மூனுசாமி' என்று கையெழுத்துப் போட்டான். 'புண்ணியகோடி' என்பவன், 'புண்ணியகேடி' என்றும், 'வரலட்சுமி' என்பவள், 'வராலக்ஷிமி' என்றும், கையெழுத்திட்டனர். இவ்வாறு தங்கள் பெயரைக்கூடச் சரியாக எழுதத் தெரியாத கிராமவாசிகள் எவ்வளவோ பேர் இருந்தார்கள்! இதை மாணிக்கத்தின் அப்பா நன்றாக அறிவார்.

ஆகையால் அவர் மல்லிகாவும் மாணிக்கமும் போட்ட கல்வித் திட்டத்தைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

"சரி. உனக்கு வேண்டிய பணத்தை என்னிடம் வாங்கிக் கொள்," என்று அவர் கூறியதும், மாணிக்கத்திற்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சட்டென்று அவன், "அப்பா! கல்வி கற்றுக்கொடுப்பதற்காக ஒரு பெரிய அறையும் வேணும்..." என்றான், தயங்கியபடியே.

"அதற்கென்னடா, நம் பங்களாவுக்கு முன்னால் இருக்கும் காலி அறையை எடுத்துக்கொள்" என்று அனுமதி கொடுத்தார், அப்பா.

மாணிக்கத்திற்குத் தன் எண்ணமே நிறைவேறி விட்டது! துள்ளிக் குதித்துக்கொண்டு மல்லிகாவின் வீட்டை நோக்கி ஓடினான்.

மறுநாள் காலையில் மல்லிகாவும் மாணிக்கமும் ஊர் முழுவதும் சுற்றி எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் பெயர்களைக் குறித்துக்கொள்ள வேண்டும் என்று திட்டம் போட்டிருந்தனர். அதன்படியே இருவரும் அன்று காலையில் சந்தித்தனர். மல்லிகா தன் அத்தையிடம் விடை பெற்றுக்கொண்டு செல்ல விரும்பினாள் ஆனால் ஏற்கனவே தன்மீது வெறுப்புடன் இருக்கும் அத்தை, தன் திட்டத்தை நிறைவேற்ற அனுமதி கொடுக்கமாட்டாள். ஆகையால் அவளிடம் விடை பெறாமல் செல்வதுதான் மிகவும் நல்லது என்று அவளுக்குத் தோன்றியது. உடனே அவள் மாணிக்கத்துடன் கிளம்பி விட்டாள். அப்போது அவள் அத்தை சமையலறையில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தாள். மல்லிகாவும் மாணிக்கமும் ஒன்றாகச் சென்றதை அவள் கவனிக்கவில்லை.

மல்லிகாவும் மாணிக்கமும் அந்தக் கிராமம் முழுவதும் சுற்ற ஆரம்பித்தனர். அக்கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று, எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் பெயர்களையெல்லாம் ஒரு 'நோட்டு'ப் புத்தகத்தில் குறித்துக் கொண்டனர்.

"கல்வி கற்க வருபவர்களுக்கெல்லாம் பலகை பென்சில், புத்தகம் முதலியவற்றை நாங்களே இலவசமாகக் கொடுக்கிறோம் — கல்வியால் நம் கிராமமே முன்னேற்றமடையும். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் கல்வி கற்க வேண்டும்"—இவ்வாறு மல்லிகாவும் மாணிக்கமும் கிராமவாசிகளுக்கு எடுத்துக் கூறி, அவர்களுக்குப் படிப்பின் மேல் ஊக்கம் உண்டாக்கினார்கள். எழுதப் படிக்கத் தெரியாத கிராமவாசிகள் எல்லோரும் கல்வி கற்க வருவதாக வாக்களித்தனர்.

பிறகு மல்லிகாவும் மாணிக்கமும் வீடு திரும்பினார்கள். தங்கள் திட்டம் பாதி வெற்றி யடைந்துவிட்டதாகவே கருதினர்.

## 4. அத்தையின் கொடுமை

அன்று மாலை மல்லிகா வீட்டில் நுழைவதற்கும், மணி 'டாண்டாண்' என்று ஐந்து அடிப்பதற்கும் சரியாக இருந்தது. அதே சமயத்தில் மல்லிகாவின் இருதயமும் 'டக் டக்' என்று அடித்துக் கொண்டது.

'அத்தை என்ன சொல்வாளோ' என்று அவள் பயந்துகொண் டிருந்தாள்.

அவள் வீட்டிற்குள் கால் எடுத்து வைக்கும் பொழுதே, "வாடியம்மா, வா......" என்று அமிர்தம்மாள் அவளை வரவேற்றாள். அவள் குரலில் கோபமும், கிண்டலும் கலந்திருந்தன. அவள் முகத்தில் 'கோபக்கனல்' வீசியது!

மல்லிகா என்ன பதில் சொல்வதென்று புரியாமல் சிலைபோல் நின்றாள்.

"ஏண்டி, கழுதை! வீட்டு வேலைகளைச் செய்ய மல் எங்கேடி போயிருந்தே?" என்று கோபமுடன் கேட்டாள், அமிர்தம்மாள்.

மல்லிகா தயங்கியபடியே நின்றாள்.என்னடி, நான் கேட்கிறேன், பேசாமல் 'கல்லுப் பிள்ளையார்' மாதிரி நிற்கிறே" — அத்தையின் கோபம் அளவுக்கு மீறிப் போய் விட்டது!

மல்லிகா மெல்ல பதில் சொல்லத் தொடங்கினாள்: "நானும், எதிர் வீட்டு மாணிக்கமும் நம் ஊரில் இருக்கும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்து விட்டு வந்தோம். அதனால்தான் நேரமாகிவிட்டது. என்னை மன்னித்து விடுங்கள், அத்தை!"—அவள் குரலில் அன்பும் மரியாதையும் கலந்திருந்தன.

"உம். உனக்கே A B C D எத்தனை எழுத்து என்று தெரியாது. பிறருக்கு படிப்புக்கற்றுக்கொடுக்கவும் ஆரம்பித்து விட்டாயா?" என்று சீறினாள், அமிர்தம்மாள்.

'எனக்குத் தெரிந்த படிப்பைப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதிலே என்ன தப்பு, அத்தை?" என்றாள் மல்லிகா, பொறுமையுடன் இதைக் கேட்டதும் அமிர்தம்மாளுக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது! ஏற்கனவே பற்றிக் கொண்டிருந்த கோபம், இப்பொழுது கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது; அவ்வளவுதான். அமிர்தம்மாள் விஷமாக மாறிவிட்டாள். "ஏண்டி, கழுதை! என்னை எதிர்த்துப் பேசவும் ஆரம்பித்து விட்டாயா?" என்று கூறிக் கொண்டே, மல்லிகாவின் தலைமயிரைப் பிடித்து உலுப்பினாள். மறுகணம் அவள் முதுகில் 'பளார் பளார்' என்று பலமான உதைகள் விழுந்தன! அமிர்தம்மாள் அத்துடன் அவளை விட்டு விடவில்லை. மூலையிலிருந்த துடைப்பத்தை எடுத்து வந்து 'பட் பட்' என்று மல்லிகாவின் உடம்பைப் பதம் பார்த்து விட்டாள்!

மல்லிகாவுக்கு அன்று இரவு ஒரே காய்ச்சல்! ஊரெல்லாம் சுற்றியதாலும், உதை வாங்கியதாலும் அவள் உடம்பு முழுவதும் வலியெடுத்தது. மறுநாள் காலையில் படுக்கையை விட்டு அவளால் எழுந்திருக்க முடியவில்லை.

அத்தை அமிர்தம்மாளுக்கு அப்பொழுது கூட அவள்மேல் இரக்கம் ஏற்படவில்லை. "ஏண்டி, இன்னும் உனக்குப் பொழுது விடியவில்லையா? சீக்கிரம் எழுந்து போய்த் துணிகளைத் துவைத்துக் கொண்டு வா...உம் எழுந்திரு..." என்று அவளை அதட்டி எழுப்பினாள்.

மல்லிகா மெல்லப் படுக்கையை விட்டு எழுந்தாள், பல்லைத் துலக்கிய பிறகு, துணி மூட்டையைத் தூக்கி முதுகின் மேல் போட்டுக் கொண்டு, மெள்ளத் தள்ளாடித் தள்ளாடி ஏரியை நோக்கி நடந்து சென்றாள். (தொடரும்)

# ஆப்கானிஸ்தானம்

(36-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி, தந்தி தபால், சுகாதாரம் போன்ற பல இலாக்காக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒவ்வொரு இலாகாவும் ஒவ்வொரு அமைச்சர் பொறுப்பிலிருக்கிறது. அமைச்சர்கள் நாடாளுமன்றத்தின் இரு சபைகளாகிய மேற் சபையிலும் கீழ் சபையிலும் உறுப்பினர்களாக இல்லை. இருக்க முடியாது. இருந்த போதிலும் அவர்கள் இரு சபையிலும் வந்து கலந்து கொண்டு பேசலாம. மேற்சபையின் தலைவரும், கீழ் சபையின் தலைவரும் அமைச்சர் குழுவில் இடம் பெற்றுள்ளனர். அமைச்சர்கள் நாடாளுமன்றத்திற்குத் தனித்தனியாகவும், கூட்டாகவும்பொறுப்புடையவர்கள். அமைச்சர்கள் மேல் ஏதாவது புகார் ஏற்பட்டு, அவர்களை விசாரிப்பதானால் அதற்கென்று ஏற்படுத்தப் பட்டிருக்கும் நீதிமன்றத்தில்தான் விசாரிக்கலாம்.

நாட்டின் பல்வேறு இடங்களில் கீழ்மேல் நீதி மன்றங்கள் பல இருக்கின்றன. ஆனால் காபுலில் மட்டும்தான் உயர் நீதி மன்றம் இருக்கிறது. தினசரி நடக்கும் சண்டை சச்சரவுகளையும், வணிக சம்பந்தமான வழக்குகளையும் தீர்த்துவைக்கும் மத்தியஸ்த நீதி மன்றங்களும் உள்ளன.

நாட்டை பத்து மாகாணங்களாக பிரித்திருக்கிறார்கள். அதில் ஏழு பெரு மாகாணங்களும், மூன்று சிறு மாகாணங்களும் அடங்கியுள்ளன. சிறு மாகாணங்கள் மேலும் சிறு பாகங்களாக பிரிக்கப் பட்டிருக்கிறது. காபுலில் ஒரு கவர்னர் ஆட்சிபுரிகின்றார். பெரிய மாகாணங்களில் ஒவ்வொரு உதவி கவர்னரும், சிறிய மாகாணங்களில் ஒரு அரசாங்க அதிகாரியும் இருந்து ஆட்சி செலுத்தி வருகின்றனர், ஆங்காங்குள்ள இலாகாக்களின் தலைவர்களும், மக்களின் பிரதிநிதிகளும் இவ்வதிகாரிகளுக்கு ஆட்சியில் உதவி புரிகின்றனர். எல்லா பெரிய பட்டணங்களிலும் நகர சபையமைக்கப் பட்டிருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவரே இதன், நகரசபையின் தலைவர். இவ்வித சபை நகராட்சி செய்கிறது.

இருபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வாக்குரிமையுண்டு. 25 வயதிற்கு மேற்பட்டு 70 வயதிற்குக் குறைந்தவர்களே தேசீய சபைக்குத் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். படையிலும் ஊர்ப்பாதுகாவலிலும் பணியாற்றுவோர் தேர்ந்தெடுக்கப் படக் கூடாது. அவர்கள் பிறரையும் தேர்ந்தெடுக்கக் கூடாது. 18-வயது முதல் 40 வயதுவரையுள்ளவர்கள் போர்ப் பணி செய்ய வேண்டும். அவர்கள் ஈராண்டு கட்டாயப் பயிற்சி பெறுகிறார்கள். நாட்டின் ஆரம்ப கல்வியும் இடைத்தர கல்வியும் இலவசமாய் அளிக்கப் படுகிறது ஆப்கானியர், பாரசீகம், புஷ்டு, துருக்கி முதலிய மொழிகளைப்பேசுகின்றனர். 1932-ல் காபுல் பல்கலை சழகம் நிறுவப்பட்டது.

# செய்திச் சுருள்

## காட்டுப்பாடியில் அண்ணா

6—6—54 அன்று காலை 10 மணிக்கு அறிஞர் அண்ணாவுக்கு பஞ்சாயத்து போர்டின் வரவேற்பு.

11 மணிக்கு செங்குட்டைப் பகுதியில் குழாய் திறந்து வைப்பார்.

"கல்விதிட்ட வெற்றி விழா"

மாலை 5 மணிக்கு "காரிருள்" என்ற நாடகம் (V. A. அன்பாளன் எழுதியது) நடைபெறும்.

6 மணிக்கு அறிஞர் அண்ணா, அ. பொன்னம்பலனார், A. L. C. கிருட்டிணசாமி முதலியோர் பேசுவர்.

## பொதுக்கூட்டம்

வடக்கன்குளம்:—24—5—'54-ல் இரவு 8-மணிக்கு தமிழறிவு இயக்கத்தின் சார்பில் சமதர்ம சதுக்கத்தில் பெருங்குடி எஸ். கே. சபாபதி அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் நெல்லை ம. தி. தா. இந்துக் கல்லூரி மாணவர் சுப்பிரமணியம் நாங்குனேரி வட்டம் தி. மு. க. அமைப்புக் குழுச் செயலாளர் எம். பி. எம். அப்துல்காதர் இருவரும் மதத் தலைவர்களின் போக்கும், கல்வியைப்பற்றியும் பேசினார்கள். தலைவர்கள் மதத்தை எதிர்க்கிறார்கள் என்று வீணபழி சுமத்தப்படுகிறது, அது உண்மையல்ல. மதம் மக்களுக்கு இன்னல் செய்யுமானால் அதை அழிப்பது திண்ணமென்றார். செயலாளர் சார்லஸ் நன்றி கூறி கூட்டம் முடிந்தது.

தமிழறிவு இயக்கம்
25-5-54 வடக்கன்குளம்

## மன்னார்குடி

24—5—'54 மாலை 6-மணிக்கு ஆச்சாரியாரின் புதிய கல்வித்திட்ட அழிப்பு விழா மன்னார்குடி யானை விழுந்தான் குளக்கரையில் நடைப்பெற்றது.

குழந்தைகளுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டது.

அதுபோது கி. வ. துரைராசன், இரா. செகதீசன், பெ. இராசகோபால் ஆகியோர் தி. மு. க. வும் போராட்டமும் என்பது பற்றி பேசினர்.

## முக்கூடல்

13—6—'54 காலை 10-மணிக்கு நெல்லை மாவட்ட தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

அதுபோது 1. மாவட்ட மாநாடு, 2. கழக ஆக்க வேலை முக்கியமான பேச்சாளர்கள் சுற்றுப் பயணம், என்பது போன்ற தீர்மானங்களை ஆய்வுக்கு எடுக்கப்படும். வரும் உறுப்பினர்களுக்கு முக்கூடல் கழகம் உணவு வசதி செய்து தரும்.

## வட ஆற்காடு மாவட்ட 2-வது மாநாடு.

16-5-54 அன்று வ. ஆ. மா. தி. மு. க. செயற்குழு கூட்டம் மாவட்டச்செயலாளர் A. L. C. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் வேலூர் டவுன்ஹாலில் நடைபெற்றது. கீழ்காணும் முடிவுகள் செய்யப்பட்டன.

வ. ஆ. மாவட்ட 2-வது சமூக சீர்திருத்த அரசியல் மாநாடுகள் ஜூன் 19-20 தேதிகளில் வேலூரில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

19 6-54 சமூக சீர்திருத்த மாநாடு தலைவர். திரு. ஈழத்து அடிகள் B.A. அவர்கள்,

திறப்பாளர்: திரு. இரா. நெடுஞ்செழியன் M. A. அவர்கள்.

20-6-54 தி. மு. க. அரசியல் மாநாடு. தலைவர்: திரு. K. A. மதியழகன் B. A. Hons. அவர்கள்

திறப்பாளர்: திரு. கி. மனோகரன் அவர்கள். ஓவியக் கண்காட்சி திறப்பாளர்: கலைவாணர் NS. கிருஷ்ணன் அவர்கள் இரண்டு நாட்களிலும் திரு. S. S இராஜேந்திரன் குழுவினரால், அம்மையப்பன், சந்திரமோகன் நாடகங்கள் நடைபெறும்.

இரண்டு நாட்களிலும் அறிஞர் அண்ணா மற்றும் இயக்கமுன்னணி வீரர்கள் பலரும் கலந்துகொள்ளுகிறார்கள்.

வரவேற்புக் குழுதலைவர்கள்:— திரு. A. L. C. கிருஷ்ணசாமி அவர்கள் M. P. சாரதி M. C. அவர்கள்.

மாநாட்டுச்செயலாளர்:- திரு V. R. ஆதிமூலம் அவர்கள், திரு. K. சுப்பிரமணியம் அவர்கள்.

பொருளாளர்:- திரு. V. S. அரங்கநாதன் அவர்கள்.

தொண்டர்படைத் தலைவர்கள்:- திரு. அ. கருத்தோவியன் அவர்கள் திரு. ஒ. குப்புசாமி அவர்கள்.

விளம்பரஉறுப்பினர்: திரு. சிவானந்தம் அவர்கள்.

மாநாட்டு அலுவலகப் பொறுப்பாளர்:- திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள்.

மாநாட்டுப் பந்தல் வேலைகளும், இதர நடவடிக்கைகளும் மிகத்துரிதமாக நடைபெற்று வருகின்றது.

மாவட்டச் செயலாளர்.

## அண்ணா படிப்பகம் திறப்பு விழா

பரமக்குடி, தி. மு. கழகத்துணைச் செயலாளர் தோழர் எம். ஏ. வகாப் தலைமையில் நடை பெற்றது.

தி. மு. கழகக்கொடியை செயலாளர் இரா. அ. பரமசிவம் ஏற்றி வைத்தார். S.S மணாளன், அண்ணா படிப்பகத்தைத் திறந்து வைத்தார். தோழர், எஸ். தண்டபாணி படிப்பகத்தின் அவசியத்தைப் பற்றி பேசினார். திராவிடச் செல்வன் நன்றி கூறினார்.

## பெங்களூர் தி. மு. கழகம்

இன்று 23—5—54 பொதுக்குழுக் கூட்டம் கூடி கீழ்கண்டோரை ஏகமனதாக தேர்ந்தெடுத்தது.

செயலாளர்—ஏ. டி. பிரான்சிஸ்
துணை செயலாளர்—நா. யாகலிங்கம்
பொருளாளர்—ப. அரங்கசாமி

செயற்குழு:

| | |
|---|---|
| 1. மதிவாணன் | 8. T. மாதவன் |
| 2. சி. பா. சாரதி | 9. நாகராஜன் |
| 3. செல்வம் | 10. ஜான் |
| 4. கி. சோழன் | 11. முத்து |
| 5. கோபால் | 12. பி. கே. ராமு |
| 6. கிருட்டிணன் | 13. அனில் |
| 7. சாக்ரடீஸ் | |

செயலாளர் ஏ. டி. பிரான்சிஸ் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

# கேள்விகள்

கேள்வி: ஆதிமனிதர்கள் இயற்கையை வென்றிருக்கிறார்களா? எங்ஙனம்?

ஜி. எம். மணிவண்ணன் சென்னை-1

பதில்: ஆதிமனிதர்களில் அறிவும் ஆற்றலும் உடையவர்கள் இயற்கையை வென்றிருக்கின்றனர்! இயற்கையை வெல்லுவது எப்படி என்றால்; இயற்கை இரவைபயங்கர இருட்டாக்கிக் காட்டியது. மனிதன் அதனை வென்று தீயைக் கண்டு பிடித்து இருட்டை விரட்டியடித்திருக்கின்றான். இது போல் பல அரிய சாதனைகளை சாதித்ததன் மூலம் இயற்கையை வென்றிருக்கின்றனர்.

O O O

கேள்வி: மந்திரத்தின் வாயிலாக கடவுளின் உருவத்தைக் காணலாம் என்றும் அதன் சக்தியால் ஒரு மனிதனை நல்ல வழிக்கோ அல்லது தீய வழிக்கோ கொண்டு செல்லலாம் என்றும் சில மந்திரவாதிகள் கூறுகிறார்களே! அது பற்றி தங்கள் கருத்தென்ன?

பா. பட்டு மேலக்காடு.

பதில்: மந்திரவாதிகள் எதையும் கூறுவார்கள் தங்கள் சுய நலத்திற்காக, கிரேக்க நாட்டுப் பெரியோன் சாக்ரடீஸ் ஒரு பிளேட்டோ என்னும் பேரறிஞனை உண்டாக்கினான் மந்திரசக்தியின்றி! அப்படியிருக்க மந்திர சக்தி என்று உளறுவதால் என்ன பயன்?

O O O

கேள்வி: பணத்திற்காகவும், பட்டம் பதவிக்காகவும கட்டப்பொம்மனைக் காட்டிக்கொடுத்த எட்டப்பர் போன்ற துரோகிகள் சிலர் இன்னும் நம் நாட்டில் இருக்கிறார்களே—அவர்களை என்னவென்று மதிப்பது? ம. மீனாட்சி சுந்தரம். மதுரை.

பதில்; துரோகிகளை எப்படி மதிப்பது? அவமதிப்பதைத்தவிர!

O O O

கேள்வி: நீங்கள் திராவிட கழகமா? அல்லது தி. மு. கழகமா? அல்லது கம்யூனிஸ்டா? என்று சில நண்பர்கள் கேட்கின்றனர். அவர்களுக்கு என்ன பதில் கூறுவது. வெ. இராமன், நங்கவள்ளி

பதில்: உலக வரலாற்றிலேயே காணமுடியாத அளவு விரைவாகவும், பலமாகவும் வளர்ந்து ஓங்கிக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவன் என்று கூறுங்கள்.

O O O

கேள்வி; புரட்சியிலிருந்தும், போராட்டத்திலிருந்தும நன்மை பிறந்ததாகவே சரித்திரம் கூறுகிறது. அவ்விதமிருக்க தற்காலத்தில் புரட்சியையும், உரிமைப் போராட்டத்தையும் புறக்கணிப்பதோடு, சம்பந்தப்பட்டவர்களை மட்டரகமாகப் பேசியும், திரியும் மனிதர்களைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

எம். எஸ். பழனி. கல்லிடைக்குறிச்சி.

0 0 0

களிப்பூட்டும் செய்தி!

திராவிட மக்களின் விடுதலை முரசு!

அறிவுப்பணிக்கு ஒரு வழிகாட்டி!

மாலை மணி

தமிழ் தினசரி : காலை பதிப்பு

—தனிப் பிரதி—

விலை அரை அணா

●

அரசியல் அலைகள்
அகில உலக நிகழ்ச்சிகள்
ஆளவந்தாரின் விசித்திரங்கள்
இன எழுச்சிச் செய்திகள்
உரிமை முழக்கங்கள்

ஆகியவைகளைத் தாங்கி ஜூன் 15-ந் தேதி முதல் புதிய நிர்வாகத்தின் கீழ் வெளி வருகிறது.

●

எல்லா ஊர்களிலும் பிரதி ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் முன் பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை. நிலுவை பாக்கி இல்லாத "மாலை மணி" ஏஜெண்டுகளுக்கு முதலில் சலுகைத் தரப் படும்.

—விபரங்களுக்கு—

மாலை மணி

மண்ணடி சென்னை-1

199115

பதில்: பழைய காலத்தில் நல்லவர்கள் நாட்டை வாழ்விக்க புரட்சிகள் செய்தபோது அவர்களைத் தூற்றியும், தாக்கியும் சமயம் நேர்ந்தால் கொலைசெய்தும் வந்தது ஒரு கூட்டம். அந்தக் கூட்டத்தை துரோகிகள் கூட்டம் என்று பிற்காலம் அழைத்தது. இப்போதும் அதே வேலைகளைச் செய்து வருகின்றவர்கள் எவராயினும் துரோகிகள் கூட்டத்தைச் சேர்ந்தவரே யாவர்.

O O O

கேள்வி: இலங்கையிலே உள்ள சில தோழர்கள் கலப்பு மணத்தைப் பற்றியும், காதலைப் பற்றியும் தீவிர பகுத்தறிவு வாதியைப் போல் பேசிவிட்டு, கட்டியமனைவியைக்காலால் உதைத்து வெளியில் தள்ளிவிட்டு, காமாந்த காரிகளின் கண்ணசைப்பிலும், சரசவல்லிகளின் சந்தோசப் பேச்சிலும், இன்பத்தை அடைகிறார்களே இவர்களுக்கு தாங்கள் கூறும் பதில் என்ன?

ஆ. கோபால பிள்ளை. இலங்கை.

பதில்: நண்பனே? பசுந்தோல் போர்த்த புலியாகாதே! பகல் வேடம் போடாதே! உண்மை கண்டுபிடிக்கப்பட்டால் உன்பாடு திண்டாட்டமாகும். சொல்வதைப்போல் நட; நடப்பது போல் பேசு, என்ற அறிவுரைக் கூறுவது தவிர வேறு என்ன செய்ய முடியும்?

O O O

கே: கலைகளில் எத்தனை வகை கலைகள் உண்டு, அவை எவை?

பி. கே. மகமது சாயிபு, பாலக்காடு.

பதில்: கலைகள் என்பவை எண்ணிக்கைக்கு உட்பட்டதன்று. அவைகள் புதிது புதிதாய் தோன்றிக் கொண்டே வரும். ஆகவே அவற்றை அளந்து கூற இயலாது.

O O O

கே: திருமூலர் என்னும் மெய் ஞானியார், சகல ஜீவ ராசிகளையும் படைத்த ஆண்டவனே ஆணும்பெண்ணுமாயிருந்து சர்வ சிருஷ்டியையும் செய்திருக்கிறான்-செய்துவருகிறான் என்று கூறியிருக்கிறார். தங்கள் கருத்தென்ன?

மு. தீ. அரசு, பிள்ளையார் பட்டி

பதில்: திரு மூலர் கூறினாலும் கூட நாம் அதனை நம்பமுடியாது. ஆதாரம் வேண்டும். அம்மையும் அப்பனும் இந்த உலகை சிருட்டித்ததை திருமூலர் எங்கிருந்து பார்த்தார்? அவருக்கு முன் வாழ்ந்தவர்கள் கூறியதையே அவரும் திருப்பி கூறியிருக்கிறார் ஆகவே அது உண்மையல்ல என்பதே நம் கருத்து.

O O O

கே: மூட பழக்க வழக்கங்கள் இன்னும் ஏன் ஒழிய வில்லை.

எச்கேஜி புரசை.

பதில்: முட்டாள்கள் இருக்கும் வரையில் மூடநம்பிக்கை முழு சக்தியுடன் அரசு புரியும். அறிவு என்னும் பெரும்படை ஒன்றுதான் மூட நம்பிக்கை என்னும் முரட்டு முட்டாள் மன்னனை எதிர்த்து வெல்லும்.




Printed and Published by—S. Francis, at Srimagal Press, 122, Varadamuthiappan Street, Madras-1. Editor: Palvannan.